210

# பிடாரம் கிருஷ்ணப்பா

எல்லார்வி

278
1-57



NRWM 69
N5C
105870

பம் பிரைவேட் லிமிடெட்
ட :: சென்னை-18

# பிடாரம் கிருஷ்ணப்பா

## வரலாறு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 JAN 1957
MADRAS

"எல்லார்வி"

ஆசிரியரின்
பிற நூல்கள்

1. செம்பைச் செல்வம்
2. அரியக்குடி

# பிடாரம் கிருஷ்ணப்பா

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை-18

உரிமை பதிவு
அமுதம்—128
முதல் பதிப்பு—டிசம்பர், 1956

NRwM69
N56

விலை ரூ. 1—12—0

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 105870
MADRAS-600 008

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை-18.

# முகவுரை

"வரலாறு எழுதுவதிலே உள்ள சிக்கல்களையும் தொந்தரவுகளையும் அநுபவித்த நீங்கள் ஒரே நூலுடன் அந்த முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுவீர்கள் என்று எண்ணினேன். இரண்டாவது நூலை வெளிக் கொணர்ந்து மூன்றுவது நூலையும் உருவாக்கி வருகிறீர்கள் என்பதை அறிய நான் வியக்கிறேன். உங்கள் உள்ளம் சலிக்காதது ஆச்சரியந்தான்!"

சென்னை மயிலாப்பூர் விவேகானந்தர் கல்லூரியின் நிர்வாகியாக, நிஷ்காமிய கர்மியாக, இறுதி மூச்சு வரை பணியாற்றிப் புகழுடம்பு பெற்ற ஸ்ரீ ஸி. ராமாநுஜாசாரியார் அவர்கள் கூறிய மொழிகள் இவை.

அவர் மேலும் தொடர்ந்து சொன்னுர்:

"இது கூட ஆச்சரியமில்லை. பணத்தைச் செலவிட்டு இத்தகைய நூல்களைத் தொடர்ந்து வெளியிடுகிற பிரசுராலயத்தின் துணிவும் ஆர்வமும் பாராட்டத் தக்கன. வாழ்க உங்கள் முயற்சி!" என்று வாழ்த்தினுர்.

ஆர்வம் ஒருவரை எவ்வளவுக்கு ஆட்கொள்ளும் என்பதை நிரூபிப்பதேபோல எனக்கு என் தலைவரின் அன்புக் கட்டளை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்து இன்று ஒரு சோதனையாகவே உருப் பெற்றுவிட்டது.

"நூல்களை எழுதுங்கள்" என்று மட்டும் தூண்டி வந்த அவர், "அமுத நிலையப் பணியை விட்டுவிட்டு நூல்களை எழுதுங்கள்" என்று சொல்லிவிட்டார். "முழு நேரத்தையும் அதற்கே செலவிடுங்கள்; அப்போதுதான்

மளமளவென்று அதிகமான நூல்களை உருவாக்க முடியும்" என்றார்.

"ஒரு வருஷ காலம் இப்படி முயலுங்கள். வெற்றியின் அளவுக்குத் தக்கபடி பின்னால் மாற்றம் செய்து கொள்ளலாம். இப்போதைக்கு ஓர் ஆண்டுக்குத் திட்டம் இட்டு வேலை செய்யுங்கள்" என்றார்.

நான் நஷ்டத்தையும் கஷ்டத்தையும் பற்றிச் சிந்திப்பதை விட்டு அவருடைய ஆர்வத்தை எண்ணி வியந்தேன்; ஒப்புக் கொண்டேன்; 5—9—56 முதல் இசை வல்லுநர் வரலாறுகளை உருவாக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடலானேன்.

★

நான் எழுதி வரும் இசைக் கலைஞர் வரலாற்று வரிசையிலே இது மூன்றாவது நூல். இதற்கு முன் 1954 டிசம்பரில் "**செம்மைச் செல்வம்**" வெளியாயிற்று; 1956 செப்டம்பரில் "**அரியக்குடி**" வெளி வந்தது. ஆனால் அவற்றிற்கு முறையே ஒன்றரை ஆண்டுக் காலம் தேவைப்பட்டது. இது மூன்றே மாதங்களில் நிறைவேறிவிட்டது. காரணங்கள் இரண்டு: ஒன்று, என் முழு நேர உழைப்பு; இரண்டாவது இந்த வரலாற்றை ஒருவரிடம் மட்டுமே கேட்டு எழுதியது. வயலின் வித்துவான் **சங்கீத ரத்ன மைசூர் ஸ்ரீ சௌடையா** அவர்கள் பக்தியோடும் உணர்ச்சியோடும் கூறியதை அப்படியே எழுதியிருக்கிறேன்.

கிடைக்கிற செய்திகளைத் தொகுத்துச் சேகரித்துக் கொள்வது நலம் என்ற நோக்கத்தில் சௌடையா அவர்களின் வரலாற்றைக் கூறுமாறு கேட்டேன். அவர், "தலை இருக்க வால் ஆடுவது முறையல்ல; முதலில் என் குருநாதரைப்பற்றி எழுதுங்கள்" என்றார். தம் அலுவல்களையெல்லாம் மறந்து என் மனத்தில் பதியுமாறு இரு வேறு சந்தர்ப்பங்களில் இரண்டு முறை தொடர்ச்சி பிசகாமல்

சொன்னார்; மற்றும் பலமுறை நான் சந்தித்துக் கேட்ட சந்தேகங்களை யெல்லாம் பொறுமையோடு விளக்கி வைத்தார். கடமையிலும் உள்ளத்தின் முழு ஈடுபாடு இருப்பது சிறப்பல்லவா?

★

'மனிதர்களைப் பற்றி எழுதுகிறபோது மிகவும் நிதானம் வேண்டும். முக்கியமாக, மனித வாழ்வில் தெய்வத் தன்மையை இணைப்பது உசிதம் அல்ல' என்று இருவேறு சந்தர்ப்பங்களில் இரண்டு அறிஞர்கள் கூறினார்கள். ஒருவர் **சங்கீத கலாநிதி** முடிகொண்டான் ஸ்ரீ **வேங்கடராமையர்** அவர்கள்; மற்றவர் **அகில இந்திய ரேடியோவின்** சென்னை நிலையத்திலே தற்போது **உதவி டைரக்டராகப்** பணியாற்றி வரும் ஸ்ரீ **டி. சங்கரன்** அவர்கள்.

இவர்கள் கூறுமுன்னமே என் மனத்திலும் இத்தகைய எண்ணம் உண்டு. இவர்களின் அறிவுறுத்தல் அந்த எண்ணத்திற்கு மேலும் உரம் இட்டது. இயன்ற வரையில் விழிப்புடனேதான் செயலாற்றி வருகிறேன். ஆயினும் இவ்வரலாற்றில் சில சம்பவங்கள் மேற்குறித்த முறையிலே அமைந்திருக்கின்றன. 'இவை நம்பத் தகுந்தவை அல்ல' என்ற வாதத்திற்கு இடம் இருக்கிறது.

**சங்கீத கலாநிதி** மைசூர் ஸ்ரீ **வாசுதேவாசார்** அவர்கள் பல சங்கீத வித்துவான்களின் வாழ்க்கைச் சுருக்கங்களை **'நான் அறிந்த வித்துவான்கள்'** என்ற தலைப்பில் **'தினமணிக் கதி'**ரில் தொடர்ந்து எழுதினார். அத் தொடரில் ஸ்ரீ **பிடாரம் கிருஷ்ணப்பா** அவர்களின் வாழ்க்கைக் குறிப்பும் ஒன்று. இவ்வரலாற்றில் வரும் செய்திகளில் சில அதில் இடம் பெறவில்லை. ஸ்ரீ சௌடையா தம் குருவுக்குத் தெய்வத் தன்மை பொருந்திய புகழைத் தேடி வைப்பதற்காக இல்லாத செய்திகளை இயற்றிக் கூறியிருக்கிறார் என்று துணிந்து சொல்வதற்கில்லை. பின்னாட்களில் ஸ்ரீ கிருஷ்

ணப்பா செய்த ராம பக்தியை விஸ்தாரமாக ஸ்ரீ வாசு தேவாசாரும் விவரித்துள்ளார். ஸ்ரீ கிருஷ்ணப்பாவுக்கு வாசுதேவாசார் நண்பர்; சௌடையா மாணுக்கர். தம் வாழ்க்கையின் அந்தரங்கச் செய்திகள் பலவற்றைக் கிருஷ் ணப்பா சௌடையாவுக்குக் கூறியிருக்கலாம். இருவகை யாலும் கிருஷ்ணப்பா சிறந்த பக்திமான் என்பது நன்கு புலனுகிறது.

நாம் எதையாவது நினைக்கிறபோதோ, எதைப் பற்றி யாவது பேசுகிறபோதோ, அருகே யாராவது வேறு ஒருவ ரிடம் பேசிக் கொண்டிருக்கிற போக்கில் குறிப்பாக ஒரு வார்த்தை நம் காது படச் சொன்னல், அந்த வார்த்தை நம் எண்ணத்திற்கோ, பேச்சுக்கோ பொருத்த முடையதாக இருந்தால் நாம் அதை 'அசரீரி', 'தெய்வ வாக்கு' என்ற முறைகளில் கொள்கிரேம். இது சரியான கொள்கையோ மூடக் கொள்கையோ; பலரிடம் ஊறிக் கிடக்கிற அசைக்க முடியாத கொள்கை; நீண்ட காலமாக வாழ்ந்து வருகிற கொள்கை.

கிருஷ்ணப்பா ஆஞ்சனேயர் ஆலயத்தில் பாடிக் கொண்டே வலம் வந்தார். 'பயப்படதே' என்று ஒரு சொல் கேட்டது; யாரோ முதுகிலே அறைந்தாற் போல் இருந் தது. ஆலயத்தை ஒட்டினுற் போல யாராவது பேசிக் கொண்டிருக்கையில் பிறந்த வார்த்தையாக அது இருக்க லாம். பெருங் குரலைக் கேட்டு அதிர்ச்சியுற்ற நிலையில் சிறு வயதினரான கிருஷ்ணப்பா மருண்டு ஓடியிருக்கலாம். அப் போது முதுகிலே ஏதாவது இடித்திருக்கலாம். பயம் மூர்ச்சையை உண்டுபண்ணியிருக்கலாம்.

இது பொருத்தமே. ஆனல் ஸ்ரீ வாசுதேவாசார் பசி யாலும் களைப்பாலும் கிருஷ்ணப்பா சோர்ந்து விழுந்து மூர்ச்சையானதாகக் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீ சௌடை யாவோ தாம் சொன்னதை வற்புறுத்துகிருர்.

இதே போல இன்னும் சில சம்பவங்களும் இவ்வரலாற்றில் வருகின்றன. 'காக்கை உட்கார, பனம் பழம் விழ' என்பது போல, சந்தர்ப்பங்கள் அழகாக ஒத்து வருகிற போது பக்திமான்களின் செயல்கள் வியக்கத் தக்கவையாகத்தான் பரிமளிக்கின்றன. 'சரி', 'சரியல்ல' என்ற தீர்ப்புகள் அவரவர் மனோபாவத்தைப் பொருத்தவை.

எது எப்படியிருந்தாலும் கிருஷ்ணப்பாவின் இளம் பிராயத்திலே நிகழ்ந்த ஆஞ்சனேயர் ஆலய நிகழ்ச்சி அவர் வாழ்க்கைப் பாதையிலே ஒரு நல்ல திருப்பத்தை உண்டு பண்ணி வைத்தது என்பது உண்மை. ஆகவே, 'சந்தர்ப்பங்கள் இடைப்பட்டுச் சாமான்ய மனிதர்களின் வாழ்க்கையிலும் சிற்சில அபூர்வ நிகழ்ச்சிகளை இணைக்கக் கூடும்; மக்களின் நம்பிக்கை அந்நிகழ்ச்சிகளுக்கு மிக முக்கியத்துவத்தை அளித்துத் தெய்வத் தன்மைக்கு உயர்த்துவது சகஜம்' என்ற சமாதானத்தைத்தான் பெறவேண்டும்.

★

இந்த வரலாறு **"மாலா"** மாத இதழில் தொடராக வெளி வந்தது. இனிய நாவல்களைத் தொடராக வெளியிடும் வழக்கத்திற்கு மாறுக இந்த இசைக் கலைஞர் வரலாற்றை ஆர்வத்தோடு வெளியிட்டதோடன்றி, இன்னும் பல இசைக் கலைஞர்களின் வரலாறுகளையும் தொடராக வெளியிட இசைந்துள்ள "மாலா"வின் ஆசிரியருக்கு என் நன்றி. ஸ்ரீ கிருஷ்ணப்பா அவர்களின் உருவ 'பிளாக்'கும் அவர் உதவினதுதான். அதற்காக மீளவும் நன்றியும் வணக்கமும்.

22—12—56<br>விஜய விலாசம்,<br>சென்னை—4

"எல்லார்வி"

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிறப்பு | 1 |
| 2. | பிடாரம் | 3 |
| 3. | உஞ்சவிருத்தி | 5 |
| 4. | "அஞ்சாதே!" | 8 |
| 5. | உதவி | 13 |
| 6. | அழைப்பு | 17 |
| 7. | இசைப் பயிற்சி | 20 |
| 8. | தூண்டுகோல் | 22 |
| 9. | குருகுலவாசம் | 28 |
| 10. | அரசவை இசையரங்கு | 32 |
| 11. | ராம மந்திரம் | 36 |
| 12. | முத்திராதானம் | 43 |
| 13. | தமிழ்நாட்டு யாத்திரை | 45 |
| 14. | திருமணம் | 48 |
| 15. | திக் விஜயம் | 50 |
| 16. | இரட்டைச் சாதரா | 54 |
| 17. | தெய்வம் தந்த புகழ் | 63 |
| 18. | "கான விசாரத்" | 65 |
| 19. | தாய்க்கு அளித்த உறுதிமொழி | 66 |
| 20. | வித்துவத் பரீட்சை! | 68 |
| 21. | எதிர்ப்பு ஒழிந்தது | 75 |
| 22. | அரிய நட்பு | 79 |
| 23. | சிஷ்ய பரம்பரை | 80 |
| 24. | உல்லாச தண்டனை | 92 |
| 25. | கனகாபிஷேகம் | 94 |

| | | |
|---|---|---|
| 26. | ராமதூதன் | 96 |
| 27. | பட்டாபிஷேகம் | 98 |
| 28. | மாருதியின் அறிவிப்பு! | 100 |
| 29. | "விவகாரம் வேண்டாம்" | 102 |
| 30. | நட்பின் பயன் | 104 |
| 31. | "மனிதருள் சிறந்தவர்-என்குரு" | 105 |
| 32. | உபதேச குரு | 107 |
| 33. | பிரசன்ன சீதாராம மந்திரம் | 109 |
| 34. | நிறைவு | 111 |

# பிடாரம் கிருஷ்ணப்பா

## 1. பிறப்பு

**(1869)**

உடுபியைச் சார்ந்த நந்தனிகே என்ற கிராமத்தில் விசுவநாதையா என்பவர் மிகக் கௌரவமாக வாழ்ந்து வந்தார். இவரை விசுவநாத பட்டர் என்றும் குறிப்பிடு வதுண்டு. பரம்பரையாகக் கொங்கண நாட்டில் வசித்து வந்த காரணம்பற்றி இக் குடும்பத்தினரைக் கொங்கிணிப் பிராம்மணர்கள் என்று குறிப்பிடுவார்கள். இவர்களேயே தமிழ் நாட்டில் மங்களூர்ப் பிராம்மணர்கள் என்று சொல்லு வார்கள்.

மங்களூருக்கு அருகே மையநாத சுவாமி கோயில் கொண்டு எழுந்தருளிய இடத்திற்குத் தர்ம ஸ்தலம் என்று பெயர். அங்கே நீண்ட காலமாகப் புராதன முறை யில் மிகச் சிறப்பாக நாடகங்களை நடத்தி வந்தார்கள் சிலர். அவர்களை யட்ச கான மண்டலியார் என்று அழைத்தார் கள். தசாவதாரக் காட்சிகளைப் பெருமை தோன்றக் கூத்து முறையில் அவர்கள் நடித்து வந்தது பற்றி அந்தக் குழாத் திற்குத் தசாவதார மண்டலி என்ற பெயரும் பின்னுளில் மருவியதுண்டு. விசுவநாத பட்டர் அந்த நாடக மண்டலி

யில் சேர்ந்தார். அவரது தோற்றம், நடை உடை பாவனை, பேச்சு முதலியவற்றைக் கருதி மண்டலியார் அவருக்குப் பெண் வேடந்தாங்கி நடிக்கப் பயிற்சி அளித்தனர். பட்டருக்குச் சிறப்பான, மிக இனிமையான சாரீரம் வாய்த்திருந்தது. அடிநாளில் சிறிது இசைப் பயிற்சியும் நடைபெற்றிருந்தது. நாடக மண்டலியில் சேர்ந்த பின் இசைப் பயிற்சியில் அதிகக் கவனஞ் செலுத்தினர். ஞானத்தை வளர்த்துக்கொண்டார். கேட்பவர் மனமுருக மிக நன்றாகப் பாடினர். மேடையிலே பெண் வேடந்தாங்கிப் பொறுப்பறிந்து சிறப்பாக நடித்தார். மண்டலியாரின் அன்பையும் ஆதரவையும் பெற்றார்; அடுத்துப் பொது மக்களின் கருத்தைக் கவர்ந்தார். மிகுதியான பாராட்டுதல்களைப் பெற்று வரலானர்.

அவர் மனைவியார் **சரசுவதி அம்மாள்** என்ற உத்தமி. மனம், சொல், செயல் ஆகிய எல்லா அம்சங்களிலும் கணவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் இயல்பைக் கொண்ட அந்த அம்மாளுடன் சிறப்பாகவே இல்லறம் நடத்தி வந்தார் பட்டர். நாடகத்தில் கிடைத்த ஊதியம் அவர்களுடைய குடும்ப நிர்வாகத்திற்குப் போதுமானதாகவே இருந்தது.

இந்த உத்தமத் தம்பதிகளுக்கு 1864-இல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. **சுப்பராயன்** என்று அதற்குப் பெயரிட்டுப் பெற்றோர் மிக்க அருமை பெருமையுடன் அதை வளர்த்து வந்தனர்.

அந்தக் குழந்தைக்கு ஐந்தாவது பிராயம் நடைபெறுகையில் சரசுவதி அம்மாள் மற்றும் ஓர் ஆண் குழந்தைக்குத் தாய் ஆனர். கிருஷ்ண விக்கிரகம் போல் தோற்றமளித்த அதற்குக் **கிருஷ்ணப்பா** என்று பெயரிட்டனர்.

## 2. "பிடாரம்"

(1874)

மைசூர் ராஜ பரம்பரை என்றுமே கலைகளை ஆதரிப்பதில் பெயர் போனது. மூன்றும் கிருஷ்ண ராஜ உடையார் அவர்களும் அந்த நியதிக்கு விலக்கானவர் அல்லர்.

ஒரு சமயம் மகாராஜா மும்மடி கிருஷ்ண ராஜ உடையார் சுப்ரஹ்மண்யம் என்ற க்ஷேத்திரத்திற்கு யாத்திரை சென்றார். அப்படியே தர்மஸ்தலம் என்ற இடத்திற்கும் சென்றார். அங்கே உள்ள நாடக மண்டலியார் மகாராஜா கண்டு களிப்பதற்கென்று பிரத்தியேகமாக, தமது பிரசித்தி பெற்ற தசாவதாரக் கூத்துக்களை நடத்திக் காண்பித்தனர். மகாராஜா அந்த நாடகங்களைக் கண்டு நன்கு ரசித்தார். முன்னமேயே அந்த நாடக மண்டலியைப்பற்றியும், அங்கே நடைபெறும் நாடகங்களின் சிறப்பைப்பற்றியும் பலமுறை கேள்விப்பட்டிருந்தார். தம்முடைய சம்ஸ்தானத்திலே அத்தகைய ஒரு கம்பெனியின் பிரபாவம் பரிமளிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தார். நேரில் நாடகங்களைப் பார்த்ததும் அந்த எண்ணம் வலுப் பெற்றது. மைசூரில் ஏற்கனவே நாடக சபை இருந்தும் மகாராஜாவுக்குத் தர்மஸ்தலம் நாடக மண்டலியின் மீது தோன்றிய பிடிப்பு மிகத் தீவிரமாகவே இருந்தது. ஆகவே அவர் தம் இருப்பிடம் திரும்பியதும் தர்ம ஸ்தலம் தசாவதார மண்டலியிலிருந்து நடிப்பிலே தேர்ந்த ஒரு குழுவை மைசூருக்கு அனுப்பி வைக்குமாறு அந்த மண்டலியின் அதிகாரிக்குச் செய்தி அனுப்பினர். அதிலும் விசுவநாத பட்டர் உள்ளடங்கிய குழு என்று மகாராஜா தெரிவித்திருந்தது இங்கே குறிப்பிடத் தகுந்தது.

மைசூருக்கு என்றால் மைசூரில் உள்ள பொது ஜனங்களுக்கு அல்ல; அரண்மனைக்காகத்தான். அரண்மனையில் உள்ளவர்கள் மட்டும் கண்டு கேட்டு அநுபவிப்பதற்கென்று அங்கே லளித கலை அரங்கங்கள் இருந்தன. அவற்றில் லளித கலைகளை நிகழ்த்தும் கலைஞர்களும் பிரத்தியேகமானவர்கள் தாம். அவர்களுக்கான வாழ்க்கைத் தேவைகள், வசதிகள் எல்லாம் அரண்மனையிலிருந்தே அளிக்கப் பெறும்.

அப்போது தர்ம ஸ்தலம் நாடக மண்டலிக்கு ஹெக்கடே என்பவர் அதிகாரியாக இருந்தார். அவர் அம் மண்டலியிலே உள்ள நடிகர்களுள் மிகச் சிறந்த ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்து மைசூருக்கு அனுப்பி வைத்தார். எந்த ஒரு நாடகத்தை எடுத்து நடிப்பதானாலும் அதற்குப் பொருத்தமான பாத்திரங்களை ஏற்கத் தகுதியுடையவர்கள் அடங்கியதாகவே அமைந்திருந்தது அந்தக் குழு.

குழுவினர் எல்லாரும் குடும்பத்தோடேயே வந்தனர். விசுவநாத பட்டரும் தம் மனைவி மக்களுடன் தான் வந்திருந்தார். அப்போது அவர் குமாரர்களில் சுப்பராயனுக்குப் பத்து வயது; கிருஷ்ணப்பாவுக்கு வயது ஐந்து.

மகாராஜா கட்டளைப்படி அந்த நாடகக் குழுவினர் அனைவரும் சேர்ந்து ஒரே இடத்தில் வசிப்பதற்கு ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. அவர்கள் அந்த இடத்திலே தத்தம் குடும்பத்துடன் தங்கினார்கள். சிறிது காலத்திற்குப்பின் அந்த இடத்திற்கு, 'பிடாரம்' என்ற பெயர் ஏற்பட்டுவிட்டது.

பிடாரம் என்பது வீடு அல்லது தங்கி யிருக்கும் இடத்தைக் குறிக்கும். பேச்சினிடையே அடிக்கடி, 'பிடாரத்திற்குப் போகிறேன்', 'பிடாரத்திலிருந்து வரு

கிறேன்' என்பன போன்ற வார்த்தைகள் அடிபடவே அந்த இடத்திற்குப் பிடாரம் என்ற பெயரே நிலைத்துவிட்டது.

இதை வேறு விதமாகச் சொல்வாரும் உண்டு. 'பிடார' என்ற கன்னடச் சொல்லுக்கு, 'குடித்தனம்' என்று பொருள். 'பிடாரம்' என்பதற்கு, 'குடித்தனக்காரர்' என்று பொருள். நாடகக் குழுவினர் வேற்றூரிலிருந்து வந்து மைசூரில் குடியேறினர்கள். அந்தக் குழுவினரில் விசுவநாத பட்டரும் ஒருவர். ஆகவே அவருக்கு, 'குடித்தனக்காரர்'—அதாவது 'பிடாரம்' என்ற அடைமொழி ஏற்பட்டது என்போரும் உண்டு. பிடாரம் என்றால் குடி இருக்கும் இடம் என்பதற்கும் குடித்தனக்காரர் என்பதற்கும் வேற்றுமை அதிகம் இல்லை.

## 3. உஞ்ச விருத்தி

**(1880)**

கூர்ம ஸ்தலத்திலிருந்து வந்து மைசூரில் குடியேறிய நாடகக் குழுவினர் வகை வகையான பல நாடகங்களைச் சிறப்பாக நடத்திக் காண்பித்தனர். மகாராஜாவும் அரண்மனையைச் சார்ந்த மற்றவர்களும் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர். நாடகக் குழுவினர் எவ்விதக் குறைபாடும் இல்லாதவர்களாக அரண்மனையாரால் பராமரிக்கப் பெற்று வந்தனர். விசுவநாத பட்டரும் அவர் மனைவியார் சரசுவதி அம்மாளும் அவர்கள் குமாரர்கள் சுப்பராயனும் கிருஷ்ணப்பாவும் சந்தோஷமாகவே காலந்தள்ளி வந்தனர்.

காலம் செல்லச் செல்லப் பட்டரிடம் மூப்பின் அறிகுறிகள் தோன்றலாயின. அவரால் மேடையிலே நடிக்க முடியாத நிலை ஏற்பட்டது. நோயும் தோன்றிற்று. சிறிது காலத்தில் அவர் இவ்வுலக வாழ்வினின்றும் பிரிந்தார்!

அதே சமயத்தில் தர்ம ஸ்தலத்திலிருந்து வந்திருந்த நாடகக் குழு கலையத் தொடங்கிற்று. ஒரு சிலர் ஊருக்கே திரும்பிவிட்டனர். எஞ்சியவர்கள் சரியாக நடந்துகொள்ள வில்லை. மகாராஜாவின் ஆதரவும் நின்று போயிற்று. சம்ஸ்தான அதிகாரிகள் பிடாரத்தைக் காலி செய்து விட்டார்கள். வறுமையால் துன்பப்பட்டுக்கொண்டிருந்த சரசுவதி அம்மாள் மைந்தர்களுடன் ஊருக்கு ஒதுக்குப் புறமான ஒரு தெருவிலே ஓர் எளிய வீட்டிலே ஒண்டுக் குடியாக அடைந்தார். குடிக்கூலிக்கும் சாப்பாட்டுக்கும் மிகவும் கஷ்டப்பட்டார்.

சுப்பராயனுக்கு அப்போது பதினைந்து வயது. பட்டர் சுபாவத்திலே நல்லவராகவும் மேடை நடிப்பிலே சிறந்த வராகவும் இருந்து வந்தாரே தவிர அவருக்கு உலக அநுபவம் மிகக் குறைவு. குடும்பத்திற்கு என்று அவர் எதுவும் சேர்த்து வைக்கவும் இல்லை; மக்களுக்குப் படிப் பிலோ, வேறு தொழிலிலோ பயிற்சி அளிக்கவும் இல்லை. ஆகவே இளைஞன் சுப்பராயனுக்கு முன், 'எப்படிப் பிழைப் பது?' என்ற பிரச்னை மலைபோல நின்றது. தகப்பனாரின் சுக சாரீரம் அவனிடமும் அமைந்திருந்தது. அவர் பாடிக் கேட்டுப் பழகிய சிறந்த பாடல்கள் சில தெரிந்திருந்தன. அவற்றின் உதவிகொண்டு உஞ்ச விருத்தி செய்வது என்று தீர்மானித்தான் அவன்.

தெருத் தெருவாகப் பாடிச் சென்று அரிசிப் பிச்சை எடுப்பதுதான் உஞ்ச விருத்தி. சுப்பராயனும் அதைத் தான் செய்தான். தினசரி அதிகாலையில் துயிலெழுவான். நீராடி உடையுடுத்துக் கடவுளை வேண்டுவான். தாயார் பளிச்சென்று தயாராகத் தேய்த்து வைத்திருக்கும் செம் பிலே கயிற்றைக் கட்டித் தோளிலே மாட்டிக்கொள்வான்

தெருத் தெருவாகப் பாடிக்கொண்டே செல்வான். கிடைத்த அரிசியையும் சில்லறையையும் கொண்டு மூவரும் வயிறு வளர்த்து வந்தார்கள்.

இந்த நாட்களில் அங்கே சுப்பராய தாசர் என்ற பரம பக்த சிரோன்மணி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் வீட்டில் வெள்ளிக் கிழமைகளிலும் மற்ற விசேஷ நாட்களிலும் சிறப்பாகப் பஜனைகள் நடைபெறுவதுண்டு. சம்பிரதாய பஜனை, பக்திப் பாடல்கள் ஆகியவை தவிர ஊரில் உள்ள பிரபல வித்துவான்கள் பலருடைய இசைக் கச்சேரிகளும் அவ்வப்போது நடைபெறும். சுப்பராயன் தவறாமல் அந்த இடத்திற்குச் செல்வான். அதனால் அவனுக்குப் பல உயர்தரமான பக்திப் பாடல்கள் பாடம் ஆயின. இசை ஞானமும் சாரீர வளமும் நன்கு பெருகின. சிறந்த பாடகனுக்குரிய அம்சங்கள் சேர்ந்தன. முன்பெல்லாம் வெறுமனே ஜனரஞ்சகமாகத் தெருவிலே பாடிச் சென்ற நிலை மாறிற்று; சுருதி - லய சுத்தமாக ஜாலராப் போட்டுப் பாடும் நிலை ஏற்பட்டது.

இதற்கு மாறாகத் தம்பி கிருஷ்ணப்பாவிடம் பொறுப்பற்ற தன்மையும் விளையாட்டுப் புத்தியும் துஷ்டத்தனமுமே நிலைபெற்றன. இதைக் கண்டு அன்னையார் பெரிதும் மனம் வருந்தினார். நயமாக எவ்வளவோ புத்திமதிகளைச் சொல்லிப் பார்த்தார். சில சமயம் வன்மையாகக் கண்டிக்கவும் செய்தார். எதிலும் பயன் இல்லை.

படை பதைக்கிற வெயிலில் மூத்த மகன் தெருத் தெருவாய் அலைந்து பாடிப் பிச்சை எடுத்து வருகிற போது இளைய மகன் வீட்டிலே வெறும் பொழுது போக்கி, தெருப் பிள்ளைகளுடன் விளையாடி, சண்டையிட்டு எல்லாம் செய்வதைக் கண்ட தாய்க்கு ஒருநாள் ஆத்திரம் குமுறிக்

கொண்டு வந்தது. தெரு முனையிலிருந்து மகனைப் பரபர வென்று இழுத்து வந்தார். வாய்க்கு வந்தவாறு திட்டினார்; கையாலுங் கழியாலும் பலங்கொண்ட மட்டும் சாடினார்; "நாளைமுதல் உன் அண்ணனோடு நீயும் உஞ்ச விருத்திக்குப் போக வேண்டும். இல்லாவிட்டால் இங்கே சோறு கிடை யாது; இந்த வீட்டில் நுழையவும் கூடாது" என்றார். அதன் விளைவாக மறுநாள் முதல் சகோதரர்கள் இருவரும் சேர்ந்து உஞ்ச விருத்திக்குச் சென்றனர். ஆனாலும் கிருஷ்ணப்பா வின் துர்ப்பழக்கங்கள் போகவில்லை.

## 4. "அஞ்சாதே!"

(1882)

சுப்பராயனுக்குத் திருமணம் ஆயிற்று. மனைவி வீடு வந்து சேர்ந்தாள். இளந் தம்பதிகள் இக் குடும்பத்தி லிருந்து பிரிந்து வேறு இடத்தில் தனிக் குடித்தனம் தொடங்கினார்கள். சுப்பராயன் மேலும் சிறிது காலம் வரையில் தாயையும் தம்பியையும் ஆதரித்தார். நாளடைவில் அந்த ஆதரவு நின்று போயிற்று. சரசுவதியம்மாள் விவரமறி யாத இளம் பிள்ளையுடன் தனியே இருந்து சங்கடப்பட்டார்.

சுப்பராயன் இயற்கையில் நல்ல சூடிகை உடையவர். அதனால் நாளடைவில் ஏட்டுப் படிப்பிலும் இன்னிசை யிலும் உலக அநுபவத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றார். தக்காரைத் தேடி அடைந்து புரந்தரதாசர் கிருதிகளைப் பாடஞ் செய்திருந்தார். இப்போது வேறு சிலரை அண்டிக் கதாகாலட்சேபம் செய்யும் வழிமுறைகளைப் பயின்றார். வெகு சீக்கிரத்திலேயே மிக நன்றாகக் கதை செய்யவும் ஆரம்பித்தார். வருவாய்க்குக் குறைவில்லை. இளந் தம்பதி கள் சுகமாக வாழ்ந்து வரலாயினர்.

சரசுவதியம்மாள், கிருஷ்ணப்பா இவர்கள் நிலைமை இதற்கு நேர்மாருக இருந்தது. ஒருவேளை கால் வயிற்றுக்கு ஏதாவது கிடைத்தால் அடுத்து இரண்டு மூன்று வேளை பட்டினி கிடக்க நேர்ந்தது. இடையருத தாயின் உபதேச மொழிகளும் பசிக் கொடுமையும் சேர்ந்து கிருஷ்ணப்பாவின் விளையாட்டு உள்ளத்திலும் சிந்தனையைத் தூண்டியபடி இருந்தன. ஏதாவது செய்து சம்பாதிக்க வேண்டும், வயிருர உண்ண வேண்டும், தாயின் முகம் வாடாமல் பராமரிக்க வேண்டும் என்பன போன்ற எண்ணங்களுக்குக் குறைவே இல்லை. ஆனல் என்ன செய்வது என்பதுதான் புரியவில்லை.

சுப்பராயன் தாயுடனும் தம்பியுடனும் வாழ்ந்துவந்த காலத்தில் சுப்பராய தாசர் வீட்டுப் பஜனைகளுக்குப் போவதுண்டல்லவா? அந்த நாட்களில் சில சந்தர்ப்பங்களில் அவர் தம் தாயையும் தம்பியையுங்கூட அங்கே கூட்டிச் செல்வதுண்டு. சுப்பராயன் செய்துவைத்த இந்தப் பழக்கம் அவர் இக் குடும்பத்திலிருந்து பிரிந்த பின்னரும் நிற்கவில்லை. சரசுவதியம்மாள் தம் இளைய குமாரனை அழைத்துக் கொண்டு அடிக்கடி பஜனைக்குச் சென்று வந்தார்.

ஒரு வெள்ளிக் கிழமை பஜனையில் கரூர் ராமசாமி அவர்கள் கச்சேரி நடைபெற்றது. அவர் அந்தக் காலத்தில் சிறந்த வித்துவானுக விளங்கியவர். சுருதி-லய சுத்தமாகச் சிறந்த பாணியை மேற்கொண்டு மிக நன்முகக் கச்சேரி செய்தார் ராமசாமி. ஞானத்தில் தேர்ந்த சரசுவதியம்மாள் அக் கச்சேரியைக் கேட்டு ஆனந்தம் அடைந்தார். 'நம் கிருஷ்ணப்பா இப்படி ஒன்றுக்கும் உதவாத பிள்ளையாகத் திரிந்துகொண் டிருக்கிறுனே; அவனை இவரிடம் மாணுக்கனுக அமர்த்திஞல் என்ன?' என்று எண்ணினர்.

கச்சேரி முடிந்தது. சபை கலைந்தது. ராமசாமி தனிமையில் இருக்கும் தருணம் பார்த்துச் சரசுவதி அம்மாள் அவரை அணுகினர். தம்முடைய அப்போதைய நிலையை விளக்கினர். "தாங்கள் பெரிய மனசு பண்ணி என் மகனுக்குச் சங்கீதப் பயிற்சி அளித்து அவனைக் கைதூக்கி விடவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

ராமசாமிக்கு அப்போது சற்றேறக் குறைய எழுபது வயசு இருக்கும். தனி மனிதராக அங்கே வாழ்ந்து வருபவர். அன்பர்கள் அதிகமாக வற்புறுத்துகிறபோது தவிர்க்க முடியாத நிலையில் கச்சேரி செய்வார். வெகு அபூர்வமாக எப்போதாவது நிகழும் அச் செயல் தவிர வேறு அலுவலோ தொடர்போ அவர் வைத்துக்கொள்ள வில்லை. ஆகவே மையமாக, "கவலையோ வருத்தமோ கொள்ளாதீர்கள் அம்மா. உயிர்களைப் படைத்த கடவுள் அவற்றைப் பாதுகாவாமல் விடமாட்டான். ஒவ்வொரு ஜீவனுக்கும் இன்ன வகையில் பிழைப்பு என்று அவன் திட்டமிட்டிருப்பான். அவன் அருள் இன்றி அணுவும் அசைவதில்லை. உங்கள் மகனுக்குச் சங்கீதப் பிராப்தம் இருந்தால் கட்டாயம் கிடைக்கும். என்னால் ஆகக் கூடியதைச் செய்ய முயல்கிறேன்" என்றார். மகனை அழைத்துக் கொண்டு தாய் வீடு திரும்பினர்.

நாட்கள் சென்றுகொண்டிருந்தன. தாயும் பிள்ளையும் பசியின் பிடியிலே தவித்தபடி இருந்தனர். அந்நிலைக்கு மாற்று என்ன என்று இரவும் பகலும் கிருஷ்ணப்பா சிந்தித்துக் கொண்டே இருந்தான்.

அருகே ஆஞ்சனேயர் கோயில் ஒன்று இருந்தது. கிருஷ்ணப்பா ஒருநாள் அங்கே சென்று துண்டை விரித்து

உட்கார்ந்து பக்திப் பாடல்களைப் பாடினான். பக்தர்கள் பலர் காசு போட்டனர். அன்றுமுதல் அச் செயலைக் கிருஷ்ணப்பா தொடர்ந்து செய்து வரலானான். முன்னமேயே அவனுக்கு மாருதியிடம் பக்தி உண்டு. பிச்சையை முன்னிட்டுத் தினசரி ஆலயத்திற்குச் சென்று வரும் பழக்கம் ஏற்பட்டதன் விளைவாகப் பக்தி மேலும் அதிகரித்தது. முதலில் காசு அதிகம் கிடைத்தால் ஆனந்தமும் குறைவாகக் கிடைத்தால் மனத் துயரமும் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. மனத்திலே பக்தி ஊற ஊற, பாடல்களைக் கடவுளுக்கு அர்ப்பணமாகப் பாடப் பாடக் காசு கிடைப்பதிலே உள்ள துயரமும் சந்தோஷமும் கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து போயின. ஆனால் பழைய வாசனையினாலும் சேர்க்கையினாலும் விளையாட்டுப் புத்தி மட்டும் மாறவே இல்லை.

அந்தப் பிராந்தியத்து வர்த்தகப் பிரமுகர்களின் மைந்தர்கள் கிருஷ்ணப்பாவுக்கு நண்பர்கள் ஆனார்கள். அவர்களுடன் சேர்ந்து அவன் விளையாடினான்; முறையாக உடற்பயிற்சி, குஸ்தி, சிலம்பம் முதலியன பழகினான். அச் செயல்களில் அவனுக்கு அளவுகடந்த மோகம்.

ஒருநாள் படுசூனியமாகக் கோயில் பிச்சையில் காலணாக்கூடக் கிடைக்கவில்லை. கிருஷ்ணப்பா வீட்டை நோக்கிச் செல்கிறபோது நண்பர்கள் வழியிலே சந்தித்து விளையாட அழைத்தார்கள். அவன் இசைந்தான். குஸ்தி, சிலம்பம், மல்யுத்தம் முதலியன நடைபெற்றன. கூட்டாளிகள் தத்தம் வீடுகளுக்கு ஓடிவிட்டனர். தனிமை பெற்ற பின்புதான் கிருஷ்ணப்பாவுக்குப் பசி தெரிந்தது. விளையாட்டு அசதியினால் அது மிகவும் கொடுமையாக இருந்தது. கால் தள்ளாட வீட்டை நோக்கி நடந்தான்.

அங்கே கண்ணீர் வடித்தபடி தாய் தரையிலே கிடந்தார். தெருக் கதவு திறந்தே இருந்தது. அருகே தனயன் வந்து நிற்பதை அறிந்தும் தாய் நிமிர்ந்து பார்க்கவில்லை.

"பசிக்கிறது அம்மா!"

ஒருதரம், இரண்டுதரம், மூன்றுதரம்! நாலாவது தடவையாக மகனின் பரிதாபச் சொற்களைச் செவியேற்ற தாய் நீர் நிறைந்த கண்களால் மகனை ஏறிட்டுப் பார்த்தார்.

"பொறுப்பற்ற சிறு பிள்ளையே! பசிக் கொடுமை தாள முடியாததுதான். நானும் நேற்று முதல் பட்டினியே. நீ என்னிடம் ஓலமிடுகிறாய்; நான் யாரிடம் முறையிடுவது? எங்கெங்கோ முயன்றும் எனக்கு ஊழியம் எதுவும் கிடைக்கவில்லை. உனக்கோ புத்தியும் பொறுப்பும் கொஞ்சமும் இல்லை. இருந்திருந்தால் அநுமார் கோயிலுக்குப் போகாமல் ஊர்ப் பிள்ளைகளுடன் விளையாடியிருக்க மாட்டாய். நான் உன்னைத் தேடிக் கோயிலுக்குச் சென்றேன். நீ விளையாடப் போயிருப்பதை அறிந்தேன். உலகத்தை மறந்து நீ ஊர்ப் பிள்ளைகளுடன் உருண்டு புரண்டு விளையாடிவிட்டு வந்திருப்பதை உன் கால் முதல் தலைவரையில் உள்ள புழுதியே விளக்குகிறது. சீமான் மகன்போல் வந்து நின்று சோறு போடும்படி கேட்கிறாய். நான் என்ன செய்ய? வெறும் வீடு இருக்கிறது; நான் இருக்கிறேன். உன்னால் முடிந்தால் என்னை யாருக்கேனும் அடிமைப் படுத்திவிட்டு உன் பசியைத் தீர்த்துக்கொள்."—

கிருஷ்ணப்பாவின் கரங்கள் சட்டென்று செவிகளைப் பொத்தின; வாய், "ராம ராம ராம!" என்றது. உடம்பெங்கும் தீப்பற்றி எரிவது போன்ற உணர்ச்சி. குமுறிக் குமுறி அழும் தாயின் எதிரே நின்றிருக்க மனம் இல்லை. கால்கள் மீண்டும் இயங்கின. பழக்கத்தின் பயனாக இடைகழி,

தெரு வாயில், தெரு, தெருக்கோடி, திருப்பம்—இப்படியே போய் முடிவில் அவன் ஆஞ்சனேயரின் ஆலயத்தை அடைந்தான்.

அந்த வேளையில் அந்த ஆஞ்சனேயர் கோயிலில் யாரும் இல்லை. கிருஷ்ணப்பாவுக்கு உணர்ச்சி எல்லை கடந்தது. அழுகை குமுறி வந்தது. அழுகையினிடையே பாடலானான்.

ஸஞ்ஜீவ ராயன ஸ்மரணமாடித மேலே
அஞ்சிகே இன்யாத கையா

ஏற்கனவே தெரிந்த பாட்டுத்தான். அந்தச் சமயத்திலே உணர்ச்சி வேகத்திலே தானாக வெளிப்பட்டது. சந்நிதியிலே நின்று நீண்டநேரம் பிரலாபித்தபின் கிருஷ்ணப்பாவுக்குப் பிராகாரத்தை வலம் வரவேண்டும் என்ற எண்ணம் தோன்றிற்று. இரண்டு சுற்றுகள் முடிவடைந்தன. மூன்றாவது சுற்று வந்துகொண்டிருக்கையில் மேல் புறத்துப் பிராகாரத்திலே........

இடி முழக்கம்போல் ஒரு குரல்; "பயப்படாதே!" என்று ஒரு சொல். அதே சமயத்தில் கிருஷ்ணப்பாவின் முதுகிலே, 'பளார்!' என்று ஓர் அறை! நிலைகுலைந்து ஓடிய கிருஷ்ணப்பா கோயில் வாயிலை அடைந்ததும் கண் இருள, உடல் சோர, கால் தடுமாற, 'தடால்' என்று தரையிலே சாய்ந்தான்.

## 5. உதவி

(1882)

**பி**ன்னாட்களில் பிரபல மருத்துவராகிப் பற்பல சிறப்புகளைப் பெற்ற டாக்டர் நஞ்சுண்டராவ் அப்போது அவ்வழியே வந்தார். அவர் கிருஷ்ணப்பாவை விசுவநாத

பட்டரின் இளைய குமாரன் என்ற முறையில் அறிந்தவர். பட்டர் குடும்ப வரலாறு முற்றும் தெரிந்தவர். கிருஷ்ணப் பாவிடம் ஆழ்ந்த அன்பும் அநுதாபமும் உடையவர். ஆகவே கோயில் முன் கிருஷ்ணப்பா குப்புற விழுந்து கிடப்பதைக் கண்டதும் திடுக்கிட்டுப் போனர். அருகே சென்று கவனித்தார். முதுகிலே யாரோ அறைந்து விட்டதுபோன்ற விரல்களின் அடையாளம் பதிந்திருந்தது. "கிருஷ்ணப்பா! கிருஷ்ணப்பா!" என்று குரல் கொடுத்தார்; பதில் இல்லை. தொட்டு அசைத்துப் பார்த்தார். பிரக்ஞை இல்லை என்பது புலனாயிற்று. அவர் கவலை பின்னும் அதிகமாயிற்று. அருகே உள்ள ஓர் இல்லத்திற்கு ஓடினர்; குவளையிலே தண்ணீர் கொண்டு வந்தார்; முகத்திலே தெளித்தார்; வாயிலே புகட்டினர். மெல்ல விழிப் படையச் செய்தார்.

கண்விழித்த கிருஷ்ணப்பாவுக்கு ஒன்றுமே தோன்ற வில்லை. அவன் கண்களை மலர்த்தி நாற்புறமும் நோக்குவதைக் கண்ட நஞ்சுண்ட ராவ் கனிந்த அன்புடன், "என்ன அப்பா நேர்ந்தது? யார் உன்னை அடித்தார்கள்?" என்று வினவினர்.

கிருஷ்ணப்பாவினல் பேச முடியவில்லை. பசியின் களைப்பு, பிரமையின் குழப்பம் எல்லாம் வாயைக் கட்டியிருந் தன. நிலைமையை ஒருவாறு உணர்ந்த நஞ்சுண்ட ராவ் அருகே இருந்த கடைக்குச் சென்று பழமும் பானமும் பெற்றுக்கொண்டு வந்து கொடுத்தார். கிருஷ்ணப்பாவின் பசியும் களையும் ஓரளவு அடங்கின. சிறிது நேரத்தில் கிருஷ் ணப்பாவின் வாய்வழி நஞ்சுண்ட ராவ் அவர்களுக்கு எல்லா விவரங்களும் தெரிய வந்தன.

அனைத்தையும் செவியேற்ற நஞ்சுண்ட ராவ் அது ஆஞ்சனேய மூர்த்தியின் அருளே எனப் பூரணமாக

நம்பினர். அவர் தெய்வ பக்தி நிறைந்தவர். கொள்கைகளில் நம்பிக்கை உடையவர். தம் மனத்தில் தோன்றிய நம்பிக்கையைக் கிருஷ்ணப்பாவுக்கும் எடுத்துக் கூறினர்.

"அப்பா, இது யாருக்கும் எளிதில் கிட்டாத பாக்கியம்! இன்று முதல் உனக்கு நல்ல காலம் என்பதில் சிறிதும் சந்தேகமே இல்லை. எழுந்து வா, ஆஞ்சனேயரைச் சேவிக்கலாம்" என்று கூறிக் கிருஷ்ணப்பாவை அழைத்துக் கொண்டு ஆலயத்துள் சென்றார்.

இருவரும் ஆஞ்சனேயரை வலம் வந்தனர். சந்நிதியில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினர். நிறைந்த உள்ளத்துடன் வெளியே வந்தனர். நஞ்சுண்ட ராவ் கிருஷ்ணப்பாவைக் கடைக்கு அழைத்துச் சென்று மறுபடியும் கொஞ்சம் பழங்களை வாங்கிக் கொடுத்து, சிறிது பணமும் அளித்து, "வீட்டுக்குச் செல். இவற்றை உன் அன்னையாரிடம் கொண்டு போய்க் கொடு" என்று கூறி வழியனுப்பி வைத்தார்.

வீட்டை நோக்கி விரைந்து நடந்த கிருஷ்ணப்பாவின் மனக்கண்முன் பசிக்கொடுமையோடு போராடியபடி தரையிலே விழுந்து கிடக்கும் தாயின் பரிதாபக் காட்சி தோன்றிக்கொண்டே இருந்தது. அந்த நினைவு நடையின் வேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. ஆனால் மனநிலை மட்டும் எப்போதும்போல் இல்லை. அதிலே ஒரு நூதனமான மாறுபாடு இருந்தது. அது என்ன மாறுபாடு என்பதுதான் அவனுக்கு விளங்கவில்லை. அத்தகைய ஒரு பரவச நிலையில் தன் குடியிருப்புத் தெருவை அடைந்த போது தன் வீட்டின் வாயிலில் ராஜாங்க உடை தரித்த சேவகன் ஒருவன் நின்றிருப்பது கண்ணில் பட்டது. தாய் அந்தச் சேவகனிடம் ஏதோ பேசிக்கொண்டிருப்பதும்

தெரிந்தது. அந்தக் காட்சியைக் கண்டதும் கிருஷ்ணப்பாவுக்குத் 'திக்'கென்று ஆயிற்று. 'ஐயோ!' என்று வாய் விட்டுக் கூவத் தோன்றிற்று. ஆனல் அவனல் ஒன்றுமே பேச முடியவில்லை. கால்களும் மேலே அடியெடுத்து வைக்க மறுத்துவிட்டன. மனம் என்னவெல்லாமோ எண்ணிக் கலவரமடையத் தொடங்கிற்று.

'...பிரபு! ஆஞ்சனேய மூர்த்தி! இதுவோ உன் திருவருள்? இன்று முதல் உனக்கு நல்ல காலம் என்று நஞ்சுண்டராவ் சொன்னரே! இதுதான அந்த நல்ல காலம்? அரசாங்கச் சேவகன் ஏன் என் வீடு தேடி வந்திருக்கிருனே? என்னைப் பிடித்துச் செல்வதற்குத்தான் இருக்கும். காலையில் தோழர்களுடன் விளையாடுகிறபோது அடிதடிகள்கூட நடந்தன. அடி பட்டவர்களில் பணக்கார வியாபாரிகள் வீட்டுப் பிள்ளைகளும் இருந்தார்கள். யார் எந்தக் குற்றச்சாட்டை அரசாங்கத்திலே சமர்ப்பித்தார்களோ! கடவுளே! இப்போது நான் என்ன செய்வேன்! இந்தக் காவலன் என்னைப் பிடித்துக்கொண்டு போய்ச் சிறையில் அடைத்துவிட்டால் என் தாயை யார் கவனிப்பார்கள்? கடவுளே! நீதான் காப்பாற்ற வேண்டும்.'

மனத்தில் இப்படிப் பல பல எண்ணமிட்டவாறு அசைவற்று நின்றுவிட்ட கிருஷ்ணப்பாவை, வீட்டு வாயிலில் நின்று சேவகனேடு பேசிக்கொண்டிருந்த தாய் பார்த்தார். உடனே சேவகனிடம், "அதோ நிற்கிருன் பையன்" என்று கூறிக் கையை நீட்டிச் சுட்டிக் காட்டினர். உடனே சேவகன், "இங்கே வா" என்று கைகாட்டி அழைத்தான்.

கிருஷ்ணப்பாவின் அச்சம் மேலும் அதிகரித்தது. 'இது என்ன விந்தை! வேலியே பயிரை அழிப்பதுபோல நம் தாயே நம்மைக் காட்டிக் கொடுக்கும் துர்ப்பாக்கியம்

நமக்கு நேர்ந்திருக்கிறதே! இங்கிருந்து இப்படியே எங்காவது ஓடிப்போய் விடலாமா?' என்றெல்லாம் மனம் எண்ணிற்று. 'அவ்வாறு ஓடுவது சரியல்ல' என்று அறிவு கூறிற்று. 'ஓடினாலும் தப்ப முடியாது. இப்போதைக்கு ஒருவாறு ஓடித் தப்பினாலும் ராஜாங்கப் பாதுகாவலரிடமிருந்து எப்போதுமே தப்பியிருக்க முடியாது' என்பதும் தெரிந்தது.

இதற்குள் சேவகன் பல முறை கைகாட்டி அழைத்துவிட்டான். கிருஷ்ணப்பா முன்னேக்கியோ, பின்னேக்கியோ அடியெடுத்து வைக்கவில்லை. சேவகன் கிருஷ்ணப்பா இருந்த இடத்தை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தான்.

## 6. அழைப்பு

(1882

சேவகன் கிருஷ்ணப்பாவைச் சமீபித்தான். அவன் பார்வையில் குரூரம் இல்லை; குளுமை இருந்தது. சிரிப்பிலே ஏளனம் இல்லை; இனிமை இருந்தது. பேச்சிலே அதிகாரம் இல்லை; அன்பு இருந்தது. அவன் சொன்னன்.

"தம்பி, உன்னை அதிகாரி அழைத்து வரச் சொன்னர்."

அப்பொழுதும் கிருஷ்ணப்பாவுக்குச் சந்தேகம், சேவகனுடைய பார்வை, சிரிப்பு, பேச்சு அனைத்துமே நயவஞ்சகமாக இருக்குமோ என்று. 'எப்படி இருந்தால் என்ன? மறுத்தால் நம்மை இவன் விட்டுவிடப் போவதில்லை. ஆகவே நாமும் நயமாகவே நடந்துகொள்வோம்' என்று தோன்றிற்று.

"ஐயா, எதற்காக அதிகாரி என்னை அழைக்கிருர்?"

"எனக்கே தெரியாது. அதை அங்கே போய்த்தான் தெரிந்துகொள்ள வேண்டும். நான் இங்கே வந்து வெகு நேரம் ஆகிவிட்டது. சீக்கிரம் போக வேண்டும். வா, என்னுடன்."

"கொஞ்சம் அவகாசம் தருகிருயா? இந்தப் பழங்களை என் தாயிடம் கொடுத்துவிட்டு விடை பெற்றுக்கொண்டு வந்து விடுகிறேன்."

இருவரும் கிருஷ்ணப்பாவின் வீட்டுக்குச் சென்றனர். பழங்களையும், பணத்தையும் கொண்டு வந்து கையிலே கொடுத்துவிட்டுக் காலடியிலே விழுந்து வணங்கிய மகனை ஏறிட்டுப் பார்த்த தாய் ஒன்றுந் தோன்ருமல், "இவை ஏதப்பா?" என்று வினவினர்.

சட்டென்று பின்புறம் திரும்பிப் பார்த்த கிருஷ்ணப்பா சேவகன் தெருவிலேயே நிற்கிருன் என்பதை உணர்ந்து தாழ்ந்த குரலில் ஆஞ்சநேயர் ஆலயத்தில் நடந்தவற்றை யெல்லாம் தெரிவித்தான். அதைக் கேட்ட தாய் உடம்பைச் சிலிர்த்துக்கொண்டார். கண்களில் பாஷ்பம் பெருக்கெடுத்தது. சொல் தழுதழுத்தது.

"அப்பா, அடிநாட்களில் படுமுட்டாளாகவும், கொடிய துஷ்டனுகவும் இருந்த எவ்வளவோ பேர் கடவுளின் அருளால் பின்னுட்களில் மிகுந்த சிரேயசுடன் விளங்கியதாக நம் புராணங்களும் சரித்திரங்களும் கூறுகின்றன. கஷ்டத்தின் எல்லையை நாம் கண்டுவிட்டோம். இனி ஒன்றும் பாக்கி இல்லை. இரவுக்குப் பிறகு பகல்; மேட்டுக்கு அப்பால் பள்ளம். இனிமேல் ஒருவேளை நம் கஷ்டங்கள் நீங்கலாம். அது ஆஞ்சநேயரின் அருளால் நடைபெற வேண்

டியதிருந்தால் நடக்கட்டும். நான் நினைக்கிறேன், ராஜாங்கத்திலிருந்து உன்னை அழைத்துவர ஆள் அனுப்பியிருப்பது ஏதோ நல்லதற்குத்தான் என்று. போய்வா. மங்களம் உண்டாகட்டும்."

கிருஷ்ணப்பா தாயிடம் விடை பெற்று வெளியே வந்து சேவகனுடன் அரண்மனையை நோக்கி விரைந்தான்.

தம் எதிரே வந்து நின்று வணங்கிய கிருஷ்ணப்பாவை அதிகாரி ஏறிட்டுப் பார்த்தார். "நீதானே விசுவநாத பட்டரின் இளைய பிள்ளை?" என்று கேட்டார்.

"ஆம்" என்று கிருஷ்ணப்பா அடக்கமாகச் சொன்னான்.

"உன் பெயர் கிருஷ்ணப்பாவா?"

"ஆம்."

"நீ ஏற்கனவே நாடகங்களில் நடித்திருக்கிறாய் அல்லவா?"

"நடித்திருக்கிறேன்."

"மறுபடியும் நாடகத்தில் நடிக்க விரும்புகிறாயா?"

'அப்பாடி!...'—கிருஷ்ணப்பாவுக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது. உற்சாகம் தலை நீட்டிற்று.

"ஓ! விருப்பந்தான்."

"சரி. பாலெஸ் நாடகக் குழுவில் உன்னைச் சேர்த்திருக்கிறேன். இந்தா, இந்தக் குறிப்பைக் கொண்டு போய் நாடகக் குழுத் தலைவரிடம் கொடுத்து உன் பெயரைப் பதிவு செய்துகொள். அவர் இடுகிற கட்டளைகளுக்கு உட்பட்டு ஒழுங்காக வந்து நடித்துக் கொண்டிரு. மாசம் ஐந்து ரூபாய் சம்பளம். போய் வா."

கிருஷ்ணப்பாவின் கால் தரையிலே பாவவில்லை!

நாடகக் குழுத் தலைவர் மிகவும் நல்லவர். கிருஷ்ணப்பா கொண்டு வந்த சீட்டைப் பெற்றுக்கொண்டார். பெயரைப் பதிவு செய்துகொண்டார். பிறகு அன்போடு அளவளாவினர். பேச்சினிடையே சில செய்திகளையும் சொன்னர்

மகாராஜா அவர்களுக்குத் திடீரென்று விசுவநாத பட்டரின் நினைவு வந்தது. அவர் குடும்பம் என்னவாயிற்று என்று விசாரித்தார். விவரம் அறிந்ததும் சிறந்த நடிகராக வாழ்ந்து மறைந்த பட்டரின் குடும்பத்திற்கு உதவும்படி ஆக்ஞாபித்தார். கமிட்டியார்கூடி இப்படி ஓர் ஏற்பாட்டைத் தீர்மானித்தனர். பொருளைக் கொடுத்தால் சிறிது காலத்தில் தீர்ந்துவிடும். வேலை என்பது அப்படி அல்லவே? நீடித்த உதவியாக அது அமையும். அதுமட்டும் அல்ல; பையன் மீன் குஞ்சைப் போலத் தகப்பனரின் யோக்கியதையைப் பெற ஒரு சந்தர்ப்பம் அளித்ததாகவும் ஆகும் அல்லவா? அதனுற்றான் இவ்வாறு தீர்மானித்தனர்.

வீடு திரும்பிய கிருஷ்ணப்பா கூறிய செய்திகளைக் கேட்டதும் தாய்க்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. மகன் ஐந்து ரூபாய் ஊதியத்திலே நாடகக் குழுவிலே ஓர் உதிரி நடிகனுய்ச் சேர்ந்திருப்பதாக அந்தத் தாயுள்ளம் கருதவில்லை. மகன் பெரிய மனிதனுகி அரசாங்கத்திலே நிறைந்த சம்பளத்தில் கௌரவம் நிறைந்த பெரிய உத்தியோகத்தை ஏற்றிருப்பதாகவே பாவனை. அவருடைய வற்ருத கண்ணீர் மறைந்தது.

## 7. இசைப் பயிற்சி

**(1884)**

கிருஷ்ணப்பா புதிய பிள்ளையாக மாறிவிட்டான். தாயின் எதிரே அடக்கமின்றி உட்காரவோ, இரைந்த

குரலில் பேசவோ அவன் மனம் கூசிற்று. தினசரி காலை மாலைகளில் தெய்வ வழிபாடு ஒழுங்கான முறையில் நடைபெற்று வரலாயிற்று. ஆஞ்சநேயர் ஆலயத்திற்குச் சென்று உள்ளங் குழையப் பாடும் வழக்கம் ஒரு நாள் கூடத் தவறுவதே இல்லை. நாடக சாலையில் கொடுக்கப் பெறும் பயிற்சிகளிலும் பாடங்களிலும் ஆர்வம் நிறைந்தது. எல்லாருடைய உள்ளத்திலும் அன்பு சுரக்கும் வண்ணம் மிகப் பணிவுடனும் கனிவுடனும் பழகி வரலானான். நாடகக் குழுவினரிடையே விரைவிலேயே கிருஷ்ணப்பாவுக்கு மிக நல்ல பெயர் ஏற்பட்டுவிட்டது.

அந்தக் குழுவில் நடிப்பில் சிறந்த ஒருவரும் இசையில் தேர்ந்த ஒருவரும் இருந்தார்கள். கிருஷ்ணப்பாவின் தோற்றம், சாரீரம், பேச்சு, நடிப்புத் திறன், அடக்கமான சுபாவம் முதலியன மேற்குறித்த இரு பெரியார்களின் உள்ளங்களையும் கவர்ந்தன. அவனைத் தங்களுடைய அன்புக்குரிய பிரத்தியேக மாணவனாக அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இதனால் கிருஷ்ணப்பா இசையிலும் நடிப்பிலும் பால சூரியனைப் போல் முன்னேறி வந்தான். இவை அனைத்தும் ஆஞ்சநேயர் அருளே என்றெண்ணி அவன் உள்ளம் அல்லும் பகலும் பக்தி செய்தபடி இருந்தது.

இசை, நடிப்பு இரண்டுமே கிருஷ்ணப்பாவுக்குப் பிதிரார்ஜிதக் கலைகள் தாம். இதுகாறும் தூண்டுகோல் இன்றி மங்கிக் கிடந்த தீபம் சுடர்விட்டுப் பிரகாசிப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை. 'கிருஷ்ணப்பா நடிப்பிலே நல்ல தேட்டை' என்ற பெயர் வெகு சீக்கிரத்திலேயே ஏற்பட்டுவிட்டது. ஆனால் இசையிலே?

சரளி வரிசை, ஜண்டை வரிசை, அலங்கார வரிசை என்று முறையாகத் தொடர்ந்த பயிற்சி வர்ணங்களைத்

தாண்டிக் கீர்த்தனைகளின் பாடாந்தரத்தை எட்டிற்று. எந்த உருப்படியையும் சுருதி சுத்தமாய் லயப் பிழை சிறிதும் இன்றி இனிய குரலில் கேட்போர் பரவசமுறும் வண்ணம் அழகாகப் பாடும் ஆற்றலும் ஏற்பட்டது. ஆனால்........

சம்பிரதாயச் சங்கீதத்திற்கு அந்த அளவு போதுமா? இசைக்கு, சுருதி ஞானம், லய ஞானம், ராக ஞானம் முதலியன அடிப்படைகளாகும். அதற்கு மேல் ஸ்வர ஞானமும் கூடினால் அல்லவோ இசையிலே ஓரளவாவது நிபுணத்துவம் பெற்றதாகக் கலைஞர்கள் ஒப்புக்கொள்வார்கள்? அந்த இடத்திலே தான் சிறிது தடை ஏற்பட்டது.

ஸ்வர ஞானத்தைப் பெற வேறொரு வித்துவானின் ஆதரவை நாடவேண்டிய அவசியம் கிருஷ்ணப்பாவுக்கு ஏற்பட்டது. யாரை அடையலாம்? யார் அன்புடன் ஏற்று ஆதரிப்பர்? ஒன்றும் புரியவில்லை.

## 8. தூண்டுகோல்

**(1886)**

ஆஞ்சனேயர் ஆலயத்தில் கண்களை மூடியபடி அமர்ந்து பாஷ்பம் பெருகப் பக்திகானத்தைப் பொழிந்து கொண்டிருக்கும் கிருஷ்ணப்பாவின் அருகே திம்மையா அவர்கள் வந்து நின்றார். சிறிது நேரம் அந்தக் கானத்தை ரசித்து அநுபவித்தார். பாடுபவர் நிலை, பாட்டின் தன்மை, சாரீரத்தின் மேன்மை முதலியன அவர் உள்ளத்தை உருக்கின. 'இது பட்டை தீர்க்கப் பெறாத வைரம். சரியான இடத்தில் இது சேர்ந்தால் கருத்தைக் கவரத்தக்க ஜொலிப்புக் கூடுமே!' என்றெல்லாம் அவர் சிந்தனை ஓடிற்று. 'நம்மால் ஏதாவது செய்ய முடியுமானால் செய்யலாமே' என எண்ணினார். பாடிக் கொண்டிருக்கிற பாடல் முடிகிற

வரையில் காத்திருந்தார். அது முடிந்ததும் வாத்ஸல்யந் ததும்புங் குரலில் கிருஷ்ணப்பாவை அழைத்தார். "உன் பெயரென்ன அப்பா?" என்று கேட்டார்.

"என் பெயர் கிருஷ்ணப்பா" என்று அடக்கமான குரலில் பதில் வந்தது.

"உனக்கு இந்த ஆஞ்சனேயரிடம் பரம பக்திபோல் தோற்றுகிறதே!"

"ஆம் பிரபு. இவர் கருணை மூர்த்தி. ஏழை பங்காளர். என் நிலையிலே நல்ல மாறுதலை உண்டுபண்ணிய உயர்ந்த தெய்வம்."

"உன் பாட்டைக்கேட்டுக் கொண்டிருந்தேன். சாரீரம் இனிமையாக இருக்கிறது. நன்றாகப் பாடுகிறாய். யாரிடமாவது சிட்சை உண்டா?"

"ஆம். ஒரு வித்துவான் என் மீது கருணை காட்டித் தம்மால் இயன்ற வரையில் சொல்லிக் கொடுத்தார்."

"இயன்ற வரையில் என்கிறாயே, அதன் பொருள்?"

"ஐயா, சங்கீதம் பெரிய அமுதக் கடல். அதில் கரை காண்பவர் வெகு வெகு அபூர்வமாகவே இருப்பர் என்று எனக்குத் தோன்றுகிறது. ஓரளவாவது ஞானம் பெற அரும்பாடு பட்டே தீரவேண்டும். அப்பாடு எவ்வளவானாலும் நான் படத் தயாராக இருக்கிறேன். ஆனால் தக்க குருவைத் தேடி அடைந்தல்லவா அந்தப் பாட்டைப் பட முடியும்? அதற்கு எனக்கு வழி புரியவில்லை."

"சிறந்த குருவை அடைந்து பயிலுவதில் உனக்கு ஆர்வந்தான் என்று சொல்."

"கரும்பு தின்னக் கைக் கூலியா? தாசன் எங்கே எங்கே என்று காத்துக் கொண்டல்லவா கிடக்கிறேன்?"

"சரி. அப்படியானால் என்னோடு வா" என்று கூறித் திம்மையா கிருஷ்ணப்பாவை உடன் அழைத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினர்.

அவர் மைசூரில் ஒரு பெரிய வர்த்தகர். அவருடைய வண்டி பல தெருக்களைக் கடந்து ஒரு தெருவை அடைந்து ஒரு வீட்டின் முன் நின்றது. கிருஷ்ணப்பாவுக்கு அளவற்ற வியப்பு. 'இந்தப் பிரபுவுக்குச் சோதிடம் முதலியவற்றில் அளவுகடந்த திறமை இருக்குமோ என்ற எண்ணம் ஏற்பட்டது. ஏனெனில் கிருஷ்ணப்பாவுக்கு அந்த வீடு புதிதல்ல. நாள்தோறும் குறைந்தபட்சம் இரு முறையாவது தரிசித்துவரும் வீடுதான். சங்கீத வித்துவான் கரூர் ராமசாமி அவர்கள் வீடுதான் அது.

அன்று சுப்பராயதாசர் வீட்டுப் பஜனையின்போது தாய் ராமசாமி அவர்களிடம், 'என் மகனுக்கு இசை போதித்துக் கண்திறந்து விடவேண்டும்' என்று கேட்டுக்கொண்ட சமயத்தில் கிருஷ்ணப்பாவின் உள்ளத்திலே அந்நிகழ்ச்சி பற்றிப் பெறுமானமே இல்லை; சிந்தனையே இல்லை. ஆனல் சிறிது காலத்தில் தன்மைகளில் மாறுதல் பெற்ற—புதிய—கிருஷ்ணப்பாவின் உள்ளம் அந்தப் பழைய நிகழ்ச்சியை எண்ணி எண்ணிப் பார்த்து அசை போடத் தொடங்கிற்று. 'ஆகா! அம்மா அன்று கோரியது உடனடியாகவே கைகூடியிருந்தால் இவ்வளவு நாள் நாம் எவ்வளவோ முன்னேறியிருக்கலாமே!' என்று மனம் ஏங்கிற்று. ஏக்கம் வரவர வளர்ந்துகொண்டே வந்தது. அதன் விளைவாக நாள்தோறும் காலையிலும் மாலையிலும்—அந்தப் பக்கம் போகிற போதெல்லாம்—அந்த வித்துவானின் இல்லத்தைத் தெய்வம் கோயில் கொண்டிருக்கும் ஆலயத்தைத் தரிசிப்பது போலப் பக்தியோடு பார்ப்பதுண்டு. சில சமயம்

வீட்டினுள்ளிருந்து உயர்தரமான இசை ஒலிக்கும். நின்று கேட்பதும் உண்டு. 'வயசானதாலோ, வேறு எந்தக் காரணத்தாலோ அன்று நம் தாய் கேட்டதற்கு இவர் சரியாகப் பதில் சொல்லவில்லை. அத்தகையவரிடமிருந்து இப்பிறவியில் நமக்கு இசைப் பயிற்சி எங்கே கிட்டப் போகிறது!'—இதுவே ஏக்கத்தின் காரணம்.

இந்த நிலையில் முன் பரிசயம் சிறிதும் இல்லாத பிரபு ஒருவர் திடீர் என்று முன் தோன்றித் தெய்வத்தின் அருளே போல இசை பயிலப் பரிவுடன் உதவுவது ஒரு வியப்பு. அதிலும் எந்த வித்துவானைப் பற்றிச் சதா மனம் நினைத்து வந்ததோ அவரிடமே கூட்டிச் சென்றது மற்றொரு வியப்பு. 'இவையனைத்தும் ஆஞ்சநேய மூர்த்தியின் அருளே என்பதில் தடை என்ன?' என்று எண்ணி எண்ணி அக்கடவுளை நினைந்து வணங்கிற்று கிருஷ்ணப்பாவின் இளம் உள்ளம்.

திம்மையாவும் ராமசாமியும் ஒருவரையொருவர் நன்கு அறிந்தவர்கள். பரஸ்பரம் மதிப்பு உடையவர்கள். இருவரும் வணக்கஞ் செலுத்திக்கொண்டனர். குசலப் பிரச்னம் செய்துகொண்டனர். பின்னர்த் திம்மையா பேச ஆரம்பித்தார்.

"இதோ, என்னுடன் வந்திருக்கிறானே, இந்தப் பையனைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

ராமசாமி கிருஷ்ணப்பாவைக் கூர்ந்து நோக்கினார்.

"நான்தான் கிருஷ்ணப்பா. நாடக மண்டலியில் இருந்த விசுவநாதையாவின் மகன்."

"ஓ! பட்டர் பிள்ளையா? தெரியுமே. நன்றாகத் தெரியும்."

"அப்படியா?" என்று மகிழ்ச்சியுடன் கேட்டார் திம்மையா. தாம் கோரி வந்த காரியம் எளிதாக முடிந்து விடும் என்ற சந்தோஷம் அவருக்கு.

"ஆமாம். முன்னாலேயே பட்டர் குடும்பத்தைப் பற்றித் தெரியும். ஒரு சமயம் சுப்பராயதாசர் வீட்டிலே பஜனையில் கச்சேரி செய்தபோது பட்டரின் சம்சாரம் இந்தப் பையனைப்பற்றி என்னிடம் பேசினார்கள். இவனுக்கு இசைப் பயிற்சி அளிக்க என் உதவியைக் கோரினார்கள்."

"பேஷ் பேஷ்! மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே, கடவுளின் திருவிளையாடல்!"

"மனிதரின் திருவிளையாடலே சில சமயங்களில் மிக்க ஆச்சரியமாக இருக்கிறபோது தெய்வத் திருவிளையாடலைப் பற்றிக் கேட்பானேன்?"

"உண்மைதான். அந்த அம்மாள் கேட்டதற்கு நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள்?"

"கடவுளின் சித்தப்படி நடக்கட்டும் என்றேன்."

"சரி என்று உடனே சம்மதிக்கவில்லையா?"

"ஆமாம். வாலிப காலத்தில் என்றால் தயங்காமல் எந்தப் பொறுப்பையும் உடனே ஏற்றுக்கொண்டுவிடலாம். இப்போது அப்படிச் செய்வதற்கில்லை பாருங்கள்."

"வாஸ்தவந்தான்."

"மேலும்......."

"மேலும்?.......சும்மாச் சொல்லுங்கள்."

"இக்காலத்துப் பிள்ளைகளின் போக்கே வேறு. கலையில் முன்னேற, பக்தி, சிரத்தை, ஒழுக்கம், உழைப்பு எல்லாம் வேண்டாமா? இக்காலத்துப் பிள்ளைகளிடம் அத்தகைய பண்புகளைக் காண்பது துர்லபம். வீணை

ஒரு பையனை மாணவனாக ஏற்றுக்கொண்டு, நம் மனசுக்கும் உடம்புக்கும் சிரமத்தைத் தேடிக்கொண்டு, அதற்குச் சிரம தட்சிணையாகப் பெயரையும் கெடுத்துக்கொள்வதைவிடச் சும்மா இருப்பதுவே சுகம் அல்லவா?''

"ஆயிரத்தில் ஒரு வார்த்தை. ஆனால் இந்தக் கிருஷ்ணப்பாவும் ஆயிரத்தில் ஒரு பையன் என்று எனக்குத் தோன்றுகிறது. அதனால்தான் நான் இவ்வளவு தூரம் மெனக்கெட்டு அவனையும் கூட்டிக்கொண்டு இங்கே வந்திருக்கிறேன்.''

"ஓகோ! நீங்கள் இப்போது இங்கே விஜயம் செய்தது இந்தப் பையனை உத்தேசித்துத்தானா?''

"ஆமாம். தாங்கள் என் வேண்டுகோளுக்கு இணங்கி இவனுக்கு இசை போதிக்க வேண்டும். அதற்குரிய சிரம தட்சிணைப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். இப்போது சிறிது காணிக்கை சமர்ப்பிக்கச் செய்கிறேன்....''

திம்மையா தம் சட்டைப் பையிலிருந்து பணப் பையை உருவி ஒரு நூறு ரூபாயைக் கிருஷ்ணப்பாவிடம் கொடுத்தார். அதை ராமசாமியின் முன் சமர்ப்பித்து வணங்கும்படி பணித்தார்.

கிருஷ்ணப்பா காணிக்கை செலுத்திக் குருவை வணங்கி எழுந்ததும் மீளவும் சொன்னார்.

"சீக்கிரத்திலேயே ஒரு நல்ல நாளைப் பார்த்துப் பாடத்தைத் தொடங்கிவிட வேண்டுகிறேன். திறந்த மனத்துடன் வித்தியாதானம் செய்யும் தங்களுக்கு இந்தப் பையனால் எந்தவிதமான சிரமமும் ஏற்படாது. அதற்கு நான் உத்தரவாதம்.''

"அந்த அம்மாளின் வேண்டுகோளுக்கும் தங்களின் கோரிக்கைக்கும் இடையே இரண்டு விஷயங்கள் உள்ளன.

ஒன்று பணம்; மற்றொன்று பையனைப்பற்றிய உத்தரவாதம். பணம் மனிதனுக்குத் தேவைதான். எனினும் இந்த இடத்தில் நான் அதைக் காட்டிலும் பையனைப்பற்றிய உத்தரவாதத்தையே மிகப் பெரிதாக நினைக்கிறேன். கண்ணியம் நிறைந்த தங்கள் மூலம் அது எனக்குக் கிடைத்துவிட்டது. இனிப் பையனுக்கு வித்தியாதானம் செய்வதில் எந்தத் தடையும் இல்லை. இன்று முதல் அவன் நலம் என் பொறுப்பில். கடவுளின் திருவருள் துணை நின்று அனைவரின் ஆவலையும் நிறைவேற்ற வேண்டும்.''

பெரியோர்களின் உரையாடல் கிருஷ்ணப்பாவின் உள்ளத்தில் உணர்ச்சி அலைகளை மேலும் மேலும் வீசி விட்டது. பல்காலமாக எதிர்பார்த்திருந்த, கிட்டுதற்கரிது என்று எண்ணி எண்ணி ஏங்கிக்கொண்டிருந்த மகத்தான வாய்ப்பு நிச்சயமாகக் கிட்டியதில் பெரு மகிழ்ச்சி. பேச நா எழவில்லை. பெரியோர் முன் பேசவேண்டிய அவசியமும் இல்லை. திம்மையாவின்பால் நன்றி ஒரு புறம் பொங்கிக்கொண்டிருந்தது. மற்றொரு புறத்தில் வித்துவானின் அருள் மொழியால் ஏற்பட்ட பக்தியுணர்ச்சி பெரும் புயலாக வீசிக்கொண்டிருந்தது. அனைத்திற்கும் பொதுவாகக் கிருஷ்ணப்பாவின் கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகியபடி இருந்தது. இதன் இடையே இருதயத்தில் மாருதியின் நினைவும் நிரம்பியிருந்தது.

## 9. குருகுல வாசம்

**(1888)**

"இதற்கு முன் நீ வேறு யாரிடமாவது இசை பயின்றது உண்டா?'' என்று கிருஷ்ணப்பாவை வினவினார் ராமசாமி.

திம்மையா கிருஷ்ணப்பாவை அழைத்துச் சென்று ராமசாமியிடம் ஒப்படைத்துச் சென்றபின் ராமசாமி கிருஷ்ணப்பாவிடம் கேட்ட முதற் கேள்வி இதுதான்.

"தகப்பனாரும் தமையனாரும் பாடுகிறபோதெல்லாம் கேட்டுக்கொண்டு இருந்ததுண்டு. ஆனால் அவர்களிடம் பயிலவேண்டும் என்கிற ஆர்வம் எனக்கு ஏற்பட்டதில்லை. எனக்குப் பயிற்சி அளிக்கவேண்டும் என்று ஏனோ அவர்களுக்கும் தோன்றவில்லை. இப்போது நான் நாடகக் குழுவில் பயிற்சி பெற்று வருகிறேன். அங்கே சங்கீத வித்துவான் ஒருவர் இருக்கிறார். அவர் அன்பு வைத்துச் சிறிது போதித்திருக்கிறார்."

"என்ன என்ன சொல்லிக் கொடுத்தார்?"

"சரளி வரிசை, ஜண்டை வரிசை, அலங்கார வரிசை, சில வர்ணங்கள், சில கீர்த்தனங்கள்."

"எங்கே, ஏதாவது ஒரு வர்ணம் பாடு."

கிருஷ்ணப்பா வர்ணம் பாட ஆரம்பித்ததும் ராமசாமி இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டார். கருத்து ஒன்றிலேயே நிலைப்பதற்காகச் சிலர் இப்படிக் கண்ணை மூடிக் கொள்வதுண்டு.

வர்ணம் முடிந்தது. "கீர்த்தனை ஒன்று பாடு" என்றார் ராமசாமி. கிருஷ்ணப்பா கீர்த்தனை பாடி முடித்ததும், "நாளை மறுநாள் நல்ல நாள். அன்று காலையில் வா" என்றார்.

குறித்த நாளில் குறித்த நேரத்தில் பாடம் ஆரம்பம் ஆயிற்று; சரியான முறையில் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

இசைப் பயிற்சி அளிப்பதில் சிலர் ஒரு சம்பிரதாயத்தை அநுஷ்டிப்பதை நாம் இன்றும் காண்கிறோம். ஒரு

மாணவன் சில காலம் ஒரு குருவினிடம் பயிற்சி பெற்றிருப்பான். எக்காரணத்தினுலோ அந்த மாணவன் வேறு ஒரு குருவை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் முன் பயிற்சியை அந்தப் புதிய குரு அப்படியே ஏற்றுக்கொள்வதில்லை. 'முன் வழி வேறு, என் வழி வேறு' என்று கூறி மீளவும் அடியிலிருந்து ஆரம்பித்துச் சொல்லித் தருவார்.

பணம் பெற்றுப் போதிக்கப் பெறும் இடங்களில் இது அதிகம். நியம குருகுல முறையிலுங்கூட இப் பழக்கம் உண்டு. இதனுல் மாணவன் எந்த நன்மையை அடைகிருனே, குரு எந்த நலனைப் பெறுகிருரோ; வித்தியார்த்தியின் காலம் வீணுவது கண்கூடு.

ராமசாமி சிறந்த வித்துவான்தான். ஆனுல் அவர் மேற்கூறிய முறையை அநுஷ்டிக்கவில்லை. அடிப்படைப் பயிற்சிகளை அப்படியே ஏற்றுக்கொண்டு மேல் பாடங்களை உடனேயே தொடர்ந்து விட்டார். திம்மையா, 'ஓர் ஏழைச் சிறுவனைத் தற்செயலாகக் கண்டோம்; நம்மால் ஆனதைச் செய்தோம்' என்கிற அளவில் இருந்து விடாமல் அடிக்கடி ராமசாமி அவர்களின் இருப்பிடத்திற்கு வருவார்; பாடம் நடைபெறுகிறபோது கேட்டு ஆனந்திப்பார். நாளுக்கு நாள் கிருஷ்ணப்பா முன்னேறி வருவது கண்டு மகிழ்வார். மாணவனின் குரு பக்தி, கலை பக்தி, ஆர்வம், உழைப்பு முதலியவற்றைக் கண்டு உவகை கொள்வார்.

"இசை பயிலும் மாணவனுக்குப் பல நியதிகள் உண்டு. குருவினிடமும் கலையினிடமும் குன்றாத பக்தி வேண்டும். உணவிலும் உறக்கத்திலும் நிர்ணயம் மிக முக்கியம். வெயில், மழை, பனி முதலியவற்ருல் உடல் நிலை

பாதிக்கப் பெருதவாறு கவனித்துக் கொள்ளுதல் அவசியம். மற்றும் பொய் பேசுதல், கெட்ட சகவாசம், பிறரைப் பரிகசித்தல் முதலியன தவிர்க்கப்பட வேண்டும்.

"அடுத்தபடியாகச் சாதகம் செய்யும் முறை. சாதகம் செய்வதற்கு ஏற்ற நேரம் அதிகாலே என்பது தொன்று தொட்டுப் பழக்கத்தில் இருந்து வருவது. சுத்தமான தண்ணீருக்கு உள்ள அபாரமான சக்தி விவரிப்பில் அடங்காதது. புற அழுக்கை மட்டுந்தான் அது போக்கும் என்பதில்லை. உடலின் உள் உறுப்புக்களே நல்ல முறையில் போஷிக்கும் திறனும் அதற்கு உண்டு. குறிப்பாகக் குரலே அது வெகு நன்ருகச் சுத்தம் செய்யும். அதனுல் முன் நாட்களில் பல பெரியோர்கள் நீரில் இருந்து சாதகம் செய்திருக்கிருர்கள். சாரீரம் பாறைபோல் உள்ளவர்கள் கூட இந்த முறையினுல் சிறந்த பலனேப் பெற்றிருக்கிருர்கள். சாரீரம் வசதியற்றதாக இருப்பவர்கள் அகார சாதனேயிலே அதிகக் கவனம் செலுத்தவேண்டும். ஸ்வரங்களில் நிலேத்து நின்று பயில வேண்டும்.

"ஒவ்வொரு மாணவனும் இளம் பருவத்தில் உடற்பயிற்சியில் நிரம்ப அக்கறை கொள்ளவேண்டும். காலேயில் சாதகம் முடிந்த பின்—குளிப்பதற்கு முன்—தவருமல் உடற் பயிற்சி செய்ய வேண்டும்.

"நாபீ கமலத்திலிருந்து நேரிடையாகக் குரல் வெளிப்படுவதுதான் சிறப்பான முறையாகும். அந்த முறையிலேதான் நாதத்தின் ஜீவனே உணர முடியும். நீண்ட காலத்திற்குக் கை கொடுக்கக்கூடிய முறையும் அதுதான். நாபீ கமலத்திலிருந்து நேரிடையாகக் குரல் வெளிப்பட வேண்டுமானுல் பாடவோ, சாதகம் செய்யவோ உட்காருபவர்

பதுமாசன முறையில் அமர வேண்டும். அப்பொழுது தான் குரலும் காத்திரமாகவும் சுத்தமாகவும் வெளிப்படும்; ஸ்வர அசைவுகளும் மாசற்று விளங்கும்."

ராமசாமியின் இந்த உபதேச மொழிகள் கிருஷ்ணப்பாவின் இளம் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தன. உபதேசத்தை ஏற்ற நாள் முதல் அதிகாலையில் துயில் நீங்கி எழுதல், நீரில் இருந்து சாதகம் செய்தல், உடலுரப் பயிற்சிகளை—ஏற்கனவே சகாக்கள் பலரோடு செய்து பழகியவற்றை—மேலும் முறையோடும் அக்கறையோடும் பழகுதல் ஆகிய அம்சங்களில் குறையே இல்லை. பண்பட்ட உள்ளத்திலே தோன்றி வளர்ந்து வந்த குரு பக்தி, தெய்வ பக்தி, கலை பக்தி ஆகியவற்றோடு மேற் குறித்த செயல் முறைகளும் கூடவே கிருஷ்ணப்பாவின் குருகுல வாசம் மிக உந்நத நிலையைப் பெற்றது. இசைப் பயிற்சியும் அதற்கேற்ப வளர்பிறை போல் வளர்ந்து வந்தது.

## 10. அரசவை இசையரங்கு

**(1890)**

ஒரே சமயத்தில் ஒரு மாணவன் ஏதாவது ஒரு துறைக்குமேல் ஈடுபாடு கொள்வானாகில் அவனுடைய புத்தி எந்த ஒன்றிலும் நிலைத்திராது. பாடெல்லாம் வீணாகி இறுதியில் எந்த ஓர் அம்சத்திலுமே பிரகாசம் பெறுதற்கு இயலாது போய்விடும். இது அநுபவம் மிகுந்த அறிஞர்களின் கருத்து. ராமசாமியின் அபிப்பிராயமும் அதுவே தான். ஆகையால் அவர் கிருஷ்ணப்பாவை நாடக மண்டலியின் தொடர்பை விட்டு விடுமாறு பணித்தார். கிருஷ்ணப்பாவின் முன்னேற்றத்தில் ஆர்வம் உடைய நாடகக் குழுவினரும் அதற்கு இணங்கினர். அத

ஞல் கிருஷ்ணப்பா ஏகாக்கிர சித்தத்துடன் இசையில் நன்கு முன்னேற முடிந்தது.

குருகுல வாச காலத்திலேயே, கச்சேரி செய்யும் தகுதி கைவரப் பெறுதபோதே கச்சேரி செய்யத் துடி துடிக்கும் மாணவர் பலர் உண்டு. பெற்ருேரோ, வேறு பிரமுகர்களோ அதற்கு உடந்தையாக இருப்பதும் உண்டு. தாட்சிண்ணியத்தைத் தவிர்க்க முடியாத சில குரு மார்களுங்கூடச் சிஷ்யனின் தகுதியின்மையை நன்கு உணர்ந்தும் அநுமதித்து விடுவதும் உண்டு. ஆனல் அதன் விளைவு? அபூர்வமாகச் சிலர் அந்த விபரீத விளைவி லிருந்து தப்பலாம். ஏனையோர் பக்குவமற்ற காலத்திலே பறிக்கப் பெற்ற காயைப்போல ஆகிவிடுவர்.

கிருஷ்ணப்பா வெகு விரைவில் இசையில் முன்னேறி யும் கச்சேரி செய்து புகழ் பெறுவதற்கு அவசரப்பட வில்லை. அப்படி அவசரப்பட்டிருந்தாலும் ராமசாமி அதற்குக் கண்டிப்பாக அநுமதி தந்திருக்கமாட்டார்.

'கற்கக் கசடற' என்ற மூதுரைக்கிணங்கக் கிருஷ் ணப்பாவின் குருகுல வாசமும், இசைப் பயிற்சியும் நீண்ட காலம் மிக நன்ருகவே நடைபெற்றன. ஆரம்ப காலத்தில் மேல் ஸ்தாயியில் பாடச் சிரமப்பட்ட நிலை, அபாரமான, முறையான சாதகத்தின் விளைவாக மாறி, சாரீரம் மிக நல்ல பக்குவத்தைப் பெற்றது; இனிமையாகவும் காத்திரமாகவும் ஒலித்தது; தொட்ட இடமெல்லாம் வெகு சரளமாகப் பேசிற்று; உச்ச ஸ்தாயியில் வெகு அநாயாசமாகப் பாட முடிந்தது.

நாடகத் தொடர்பையும் விட்டு விட்டுக் கிருஷ்ணப்பா குருகுல வாசம் செய்த காலத்தில் தாயும் மகனும் ஜீவனம் நடத்த என்ன வழி? பிரபு திம்மையா அந்தக் கவலே

தலைகாட்டவே விடவில்லை. நஞ்சுண்ட ராவும் உதவி புரிந்தார்.

மாணுக்கன் போதிய பரிபக்குவம் பெற்றுவிட்டான் என்று ஆசிரியர் உணர்ந்தார். நல்ல நாள் ஒன்றில் தம் மனப்பூர்வமான ஆசியை அளித்து, "இனி நீ மேடை ஏறிக் கச்சேரி செய்யலாம்" என்று கூறினுர்.

கிருஷ்ணப்பாவுக்கு அளவற்ற சந்தோஷம். பக்தி உணர்விலுைம் நன்றியறிதலாலும் கண்கள் நீரைப் பொழிந்தன. குருவின் முன் தரையிலே விழுந்து நமஸ்கரித்தார்.

சிறந்த குருவினிடம் உயர்ந்த சங்கீதத்தை முறையோடு பயின்றவர்கள் எல்லாருக்குமே உடனடியாக ஆதரவு கிட்டிவிடும் என்று சொல்வதற்கில்லை. கிருஷ்ணப்பா விஷயமும் அப்படித்தான் இருந்தது. அத்தி பூப்பது போல வெகு அபூர்வமாக இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கச்சேரி செய்யும் வாய்ப்புக் கிட்டிற்று. திம்மையாவும் நஞ்சுண்ட ராவும் தங்கள் செல்வாக்கிஞல் சில கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்தனர். எனினும் அந்தத் துறையில் கிருஷ்ணப்பாவுக்குப் போதிய வருவாய் கிட்டவில்லை.

கச்சேரிகள் மூலம் போதுமான வருமானம் இல்லாமற் போகவே கிருஷ்ணப்பா மறுபடியும் நாடகக் குழுவிலே சேர்ந்துகொள்ள நேரிட்டது. கிருஷ்ணப்பாவுக்கு அதில் முழு விருப்பம் என்று சொல்ல முடியாது. அரும் பாடுபட்டுப் பயின்ற கர்நாடக சங்கீதம் நாடக மேடைத் தொடர்பால் பாழாகிவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சினுர். ஆனல் திம்மையா, நஞ்சுண்டராவ் இவர்களின் நோக்கம் வேறு. பெயரளவிலே நாடகத்திலே தொடர்பு கொண்டிருந்தால் மாதந் தோறும் சொற்பம் பொருள் வருவாய் இருக்கும் என்பது ஒன்று; என்ருவது மகாராஜா

அவர்கள் கிருஷ்ணப்பாவின் இசையைக் கேட்க நேர்ந்தால் அதனால் அவருக்கு நன்மை ஏற்படலாம் என்பது மற்றொன்று.

அச்சமயத்தில் ரங்காசாரி என்பவர் மைசூரின் திவானாக இருந்தார். அவர் நாடகக் கலைக்கும், கலைந்து போன தர்மஸ்தல நாடக மண்டலிக்கும் புத்துயிர் அளிக்க முன் வந்தார். முன்பு அந்த மண்டலியார் நாடகங்களை நடத்தினால் வர்த்தனை முறையில் அரசாங்கம் போஷிப்பு அளித்தது. ரங்காசாரி அம்முறையை மாற்றினார். மிகப் பழமையான கூத்து முறைகளை இயன்ற வரையில் மாற்றி நாடகப் பாணியை அதில் இணைத்தார். நடிகர்களின் ஊதியத்தை வருஷ வர்த்தனை முறையிலிருந்து மாதாந்தர ஊதிய முறைக்கு மாற்றினார். வடமொழியிலும் பிற மொழிகளிலும் உள்ள சிறந்த கதைகள் பலவற்றைப் பொறுக்கி நாடகமாக்கி நடிக்கச் செய்தார். அவற்றுள் பிரகலாத சரித்திரம், அம்பரீஷ சரித்திரம், துருவ சரித்திரம் ஆகிய மூன்றும் குறிப்பிடத் தக்கன.

திம்மையாவும் நஞ்சுண்ட ராவும் திவான் ரங்காசாரியைச் சந்தித்துக் கிருஷ்ணப்பாவைப்பற்றிப் பேசினார்கள். ரங்காசாரி அவர்களிடம் பின்வருமாறு கூறினார்.

"இன்று நீங்கள் கோரும் செயல் முன்பே மகாராஜாவின் அருளாணையின்படி நிறைவேற்றப் பெற்றது. கர்நாடக சங்கீதத்தை முறையாகப் பயிலும் ஆர்வத்தால் கிருஷ்ணப்பா இடையே நாடகத் தொடர்பை நிறுத்திக்கொண்ட போதும் யாரும் ஆட்சேபிக்கவில்லை, இப்போது உங்கள் கோரிக்கையையும் நான் நிராகரிக்கவில்லை. விசுவநாத பட்டர் சிறந்த நடிப்புக் கலைஞர். அவர் குமாரனுக்கு உதவுவது உங்கள் கடமை மட்டும் அல்ல; என் கடமை, அரசாங்

கத்தின் கடமை எல்லாமே அதில் இருக்கின்றன. ஆகவே கிருஷ்ணப்பா இன்றே வந்து நாடகத்திலே சேர்ந்துகொள்ளட்டும். முன்பு பெற்ற ஊதியத்தைவிட ஒரு ரூபாய் அதிகமாகவே கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்" என்று உறுதி கூறினர்.

இப்போது கிருஷ்ணப்பாவின் முன்னேற்றத்திலே அக்கறை கொண்டவர்களின் எண்ணிக்கை இரண்டிலிருந்து மூன்முக அதிகரித்தது. இவர்கள் மூவரும் கலந்து கதையிலும் நடிப்பிலும் தொடர்பு அதிகம் இல்லாத சூத்திரதாரி வேஷத்தைக் கிருஷ்ணப்பாவுக்கு அமைத்துக் கொடுத்தனர்.

சில காலத்துக்குப் பிறகு மகாராஜா ஒரு நாடகத்தைக் கண்டு மகிழ்ந்தார். அதில் கிருஷ்ணப்பாவின் இசையை மிகவும் ரசித்து மெச்சினர். பிறகு வெகு சீக்கிரத்திலேயே மகாராஜாவும் திவானும் கலந்து பேசியதன் விளைவாகக் கிருஷ்ணப்பாவுக்கு ராஜ சபையில் கச்சேரி செய்யும் வாய்ப்பு அடிக்கடி கிட்டலாயிற்று.

## 11. ராம மந்திரம்

**(1890)**

கர்நாடக சங்கீத உலகில் மைசூர் வீணை சேஷண்ணு அவர்கள் மிகவும் புகழ் பெற்றவர். வீணை என்ற சிறந்த இசைக் கருவி அவர் கையாள்வதற்கென்றே ஏற்பட்டதோ என்று அனைவரும் பிரமிக்கக்கூடிய முறையில் அந்த வாத்திய வித்தையிலே தேர்ந்து பிரகாசித்தவர் அவர். ஆனல் அவருடைய வாழ்நாளில் அந்தக் கலையைப் பயிலவும், பயின்ற பின் அதைப் பிரகாசிக்கச் செய்யவும் அவர் பட்ட பாடு!

அவருடைய சிறப்பினையும், நாதோபாசனையே வாழ்க்கை லட்சியமாகக் கொண்ட அவர் வாழ்நாட்களிலே நிகழ்ந்த பல அரிய சம்பவங்களையும் முற்றும் விவரிப்பதெனின் மிக விரியும். ரசிகர் பரம்பரையும் கலைஞர் பரம்பரையும் இன்றும் அவரைப்பற்றி வியந்து பேசுவதை நாம் கேட்கிறோம்.

இந்த நாளைப்போல் அந்நாட்களில் சங்கீதம் மலிவடையவும் இல்லை, நலிவடையவும் இல்லை. அக்காலத்தில் இசைக் கலைஞர்களுக்குப் பல்வேறு வகைகளில் பெருவாரியான ஆதரவு இருந்ததில்லை. அரசாங்கங்களும் சில ஜமீன்களும் மற்றும் அங்கங்கே வாழ்ந்து வந்த வள்ளல்களுமே கலைஞர்களை ஆதரித்து வந்தனர். இத்தகைய இடங்களில் எல்லாம் எப்போதுமே ஆதரவு கிட்டிக்கொண்டிருப்பதில்லை. ஆதரவு கிட்டிய சந்தர்ப்பங்கள் போக ஏனைய காலங்களில் கலைஞர்கள் வாழ்க்கை நடத்த மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

சேஷண்ணவும் பல காலம் கஷ்டப்பட்டவர்தாம். கலைச் செருக்கை ஒதுக்கி வைத்து வைபவம் நடைபெறும் இடங்களுக்கு அவர் வலுவிலே சென்றதுண்டு. தம் புலமையை வெளிக் காட்டிப் பொருளும் புகழும் பெற்றதுண்டு. அடிநாட்களில் அப்படிக் கஷ்டங்களை ஏற்றுத் திறமையை வெளிக் காட்டிப் புகழைச் சேகரித்துக்கொண்டதனல் பின் நாட்களில் அவர் உலகப் புகழுக்கும் நிறைந்த பொருளுக்கும் உரியவர் ஆனர்.

அவருடைய அடிநாளைய வாழ்வில் இனிய சம்பவங்கள் மிகக் குறைவு; இல்லை என்றே சொல்லலாம். மனத்தை அறுக்கத் தக்க கசப்பு அநுபவங்கள் நிறைய உண்டு. அவற்றை யெல்லாம் அவர் மிகுந்த சகிப்புத்தன்மையுடன் எதிர்த்து நீந்திக் கரையேறினர்.

அவர் 1852-இல் பிறந்தவர். அவருடைய தந்தையார் சிக்கராமப்பா அவர்களே சேஷண்ணுவுக்குச் சங்கீத குரு. சிறு பிராயத்திலேயே சுருதி, லய, ஸ்வர, ஞான பாகங்கள் நிறைந்த இசைப் பயிற்சியை அளித்தார். தகப்பனுருக்கு மகனின் ஆற்றலில் மட்டற்ற மகிழ்ச்சி. ஏழாவது பிரா யத்திலேயே சேஷண்ணுவின் புலமை அரசவையில் சுடர் விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கிற்று. இருபத்தைந்தாவது பிராயத்தில் வித்தையில் சம்பந்நராகிவிட்ட சேஷண்ணு ஊரிலேயே அடைந்து கிடக்காமல் வாத்திய சகிதம் வெளிக் கிளம்பிவிட்டார்: பல ஊர்களுக்கும் சென்று தம் திறனே வெளிக் காட்டத் தொடங்கினுர். இவருடைய கச்சேரி கோயம்புத்தூரில் 1877-இல் முதல் முதலாக நடைபெற்றது. கேட்டவர்கள் பரவசமாயினர். அந்தக் கச்சேரியில் அக்காலத்தில் பிரபல மிருதங்க வித்துவானுகத் திகழ்ந்து வந்த தஞ்சாவூர் நாராயணசாமி அப்பா அவர் களோடு இவருக்குப் பரிசயம் ஏற்பட்டு விரைவிலேயே நட்பாக முதிர்ந்தது.

நாராயணசாமி அப்பாவை 'நாராயணசாமப்பா' என் றும் கூறுவர். 'நாஞ ஸாமராவ்' என்பதே இவரது இயற் பெயர் என்பர். மகாராட்டிர பரம்பரையைச் சார்ந்தவர். செல்வக் குடிப் பிறப்பு. தேஜோவான். சாமர்த்தியமாக வும் ரத்தினச் சுருக்கமாகவும் பேசும் ஆற்றல் உடையவர். கலையார்வத்தினுல் கலைக்காகவே அதைப் பயின்றவர். செல்வ நிலையிலும் கலைத்துறையிலும் நிறைந்தவராதலால் செல்லுமிடங்களிலெல்லாம் —யாருடைய கச்சேரிக்காவது பக்கவாத்தியம் வாசிக்கச் சென்றாலும் அங்குங்கூட—இவ ருக்கு விசேஷ மரியாதைகள் நடைபெறும். நட்பு ஏற்பட்டு வளர்ந்த பின் கற்றாரைக் கற்றார் காமுறும் முறையில்

சேஷண்ணாவின் வீணைக் கச்சேரிகளுக்குப் பெரும்பாலும் இவரே விரும்பிப் பக்கவாத்தியம் வாசித்து வரலானர்.

பல முறை பல திசைகளுக்கும் சென்று திக்விஜயம் செய்த சேஷண்ணா தாம் கையாளும் வீணை வாத்தியத்திற்கும், தாம் பிறந்து வளர்ந்த ஊராகிய மைசூருக்கும் எல்லையில்லாத புகழைத் தேடி அளித்தார். இத்தகைய அவதார புருஷருக்குக் கிட்ட வேண்டிய சிறந்த மரியாதைகள் மைசூர்ச் சம்ஸ்தானத்திலே நான்காம் **கிருஷ்ணராஜ உடையார்** அவர்கள் பட்டத்துக்கு வந்த உடனேயே கிட்டின. மகாராஜா அவர்கள் பட்டம் பெற்று அரியாசனத்தில் அமர்ந்ததுமே முதற் காரியமாக முதல் தர்பாரில் சேஷண்ணாவுக்குக் கண்டாமணித் தோடாக்களை இரு கரங்களிலும் அணிவித்து **'வைணிக சிகாமணி'** என்ற சிறப்புப் பட்டத்தையும் சூட்டிக் கௌரவித்தார். அவரைத் தம்முடைய குருவாகவும் கொண்டு போற்றி வந்தார். அவருக்குக் கலையிலே அத்தனை பக்தி; சேஷண்ணாவிடம் அவ்வளவு மதிப்பு!

சேஷண்ணாவை யாருமே வெறுமென, 'சேஷண்ணா' என்று குறிப்பிடுவதில்லை. 'வீணை' என்ற வாத்தியத்தின் பெயரும் அவர் பெயருடன் முன்னால் இணைந்தே இருக்கும். அவருக்கு வீணை மட்டுமே கை வந்த வாத்தியம் அல்ல; மற்ற வாத்தியங்களிலும் அவருக்குப் புலமை உண்டு. அந்த நாளில் புழக்கத்தில் இருந்த இசைக் கருவிகளில் அவர் கையாண்டு இனிமையாக வாசிக்காத கருவியே இல்லை என்றால் மிகை அன்று.

தாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மைசூரில் அவதார தெய்வங்களான ராமனுக்கும் கிருஷ்ணனுக்கும் விசேஷ உற்சவங்களை நடத்தி, அவற்றில் சிறந்த இசை விருந்துகளை

ஏற்படுத்திப் பக்த கோடிகளுக்குப் பரமானந்தத்தை அளிக்கும் செயலைத் துவக்கி வைத்த முழுப் பெருமையும் சேஷண்ணு அவர்களையே சாரும்.

இவருடைய வீணை வாசிப்புப் பரமசுத்தம் உடையது. கமகங்களின் அசைவுகளும் குழைவுகளும் நெஞ்சைத்தொட்டுப் பரவச முறச் செய்யும். லயம் ஆணி அடித்தாற்போல.

வாழ்க்கையில் உத்தமராகப் பிரகாசித்தவர். சாந்தமான தோற்றம். தயையான பார்வை. கருணை உள்ளம். வைதிகப் பற்று. சதாகாலமும் வாத்தியமும் கையுமாகவே இருப்பார்; அதை இன்னும் எப்படி யெல்லாம் ஆளலாம் என்று சிந்தித்தபடி இருப்பார். இப்படிக் காலமெல்லாம் நாதோ பாசனையே குறிக்கோளாக வாழ்ந்து இணையற்ற புகழுக்கு உரியவராக விளங்கிய அந்த இசையுலக ஜோதி 1926-இல் பூவுலகிலிருந்து பொன் உலகை நோக்கிப் புறப்பட்டுவிட்டது. அதன் புகழொளி மட்டும் இன்றும் கர்நாடக சங்கீத உலகில் பலருடைய கருத்துக்கும் கலைப் பயிற்சிக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

கரூர் ராமசாமி அவர்களிடம் குருகுல வாசம் செய்த பிறகு கிருஷ்ணப்பாவுக்குக் கிரிபட்ட தம்மையா, கரகிரி ராயர் இவர்களிடம் பாடம் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. அத்துடன் சேஷண்ணு அவர்களிடம் சிட்சை பெறும் பாக்கியமும் கிட்டிற்று. அந்தக் காலங்களில் லயத் துறையில் தெளியவேண்டிய அநேகம் விஷயங்கள் நன்கு புலனாயின. அதன் பயனாக வெகு சீக்கிரத்திலேயே குறை சிறிதும் அற்ற முறையில் நிறைவான கச்சேரி செய்யுந் தகுதி கிருஷ்ணப்பாவுக்கு ஏற்பட்டுவிட்டது.

கிருஷ்ணப்பாவின் இசைப் புலமை ஊரெங்கும் பரவத் தொடங்கிற்று. அன்பர்கள் பலர் அங்கங்கே கச்சேரி

நிகழ்த்த ஏற்பாடு செய்தனர். எடுப்பிலே பொருள் வருவாய் அதிகம் இல்லாவிட்டாலும் புகழ் மேலும் மேலும் அதிகரிக்கலாயிற்று. சிறந்த அன்பர்கள் பலரின் நட்பும் பெருகலாயிற்று. அந்த நண்பர்களுக்கெல்லாம் கிருஷ்ணப்பாவின் இசையில் மட்டுமே பிரேமை அல்ல; அந்த இசைக் கலைஞரின் தூய உள்ளத்திலே சுடர்விட்டுப் பிரகாசிக்கும் தெய்வ பக்தியிலும் பிரேமை; லயிப்பு. நாளடைவில் ஏற்பட்ட பழக்கத்தின் மிகுதியினால் கிருஷ்ணப்பாவினுடைய உள்ளத்தின் ஆழத்திலே துடித்துக் கொண்டிருக்கும் ஓர் ஆவலை நண்பர்கள் அறிந்தார்கள்.

முதலில் ஆஞ்சனேயரை வழிபடத் தொடங்கிய கிருஷ்ணப்பாவுக்கு நாளடைவில் அந்த ஆஞ்சனேயர் வழிபடும் தெய்வமாகிய ஸ்ரீ ராமபிரானிடமும் விசேஷ பக்தி ஏற்பட்டு வளர்ந்து வந்தது. அதன் விளைவாகத் தினந்தோறும் ராம மந்திரஞ் சென்று உள்ளம் உருகப் பக்திப் பாடலை இசைத்து ஸ்ரீ ராமபிரானை வழிபடும் பழக்கம் ஏற்பட்டது. மைசூரில் அங்கங்கே ராம மந்திரங்கள் பல உண்டு. அவற்றில் கிருஷ்ணப்பா சென்று பக்திப் பாடலால் துதி செய்து சேவிக்காத ராம மந்திரமே கிடையாது.

'நிரம்பக் கச்சேரிகள் செய்ய வேண்டும். சங்கீத மேதைகள் பலரும் மனமார ஒப்புக்கொள்ளும் முறையில் கச்சேரி செய்யவேண்டும். புகழ் பெருகவேண்டும். நிரம்பப் பொருள் சேர்க்கவேண்டும். தருமங்கள் நிரம்பச் செய்ய வேண்டும். வாய் ஓயாது ராமபிரானை வாழ்த்த வேண்டும்....'

இப்படியாகக் கிருஷ்ணப்பாவின் உள்ளத்திலே ஒரு கோடி எண்ணங்கள், ஆசைகள். இவை முதலிலே ஏற்பட்டவை. ஓரளவு இதில் வெற்றியைக் காணத் தொடங்கினதும் மனம் மற்றோர் ஆவலைக் கொண்டது. 'ஸ்ரீ ராம

பிரானுக்குச் சிறந்த முறையிலே மந்திரம் ஒன்றை அமைக்க வேண்டும்' என்று விரும்பினர்.

கிருஷ்ணப்பாவினுடைய நெஞ்சத்தின் ஆழத்திலே தழைத்து வரும் இந்த ஆவலை நண்பர்கள் சூசகமாக அறிந்துகொண்டார்கள். நண்பர்களில் அன்பிலும் செல்வத்திலும் சிறந்தவர் திம்மையா. அவர் பிரபல வியாபாரி அல்லவா? அந்தத் துறையிலே அவருக்கு நண்பர்கள் பலர். அவர்களிடமெல்லாம் அவருக்கு நல்ல செல்வாக்கு உண்டு. சம வயசு உடையவர்கள், சிறியவர்கள், பெரியவர்கள் அனைவரையும் அவர் ஒன்று கூட்டினர், விஷயத்தை வெளியிட்டு அவர்களோடு கலந்து ஆலோசனை செய்தார். அனைவரும் திம்மையாவின் கோரிக்கையை அங்கீகரித்தனர். தங்களால் இயன்ற அளவு அத்திருப் பணியிலே பங்கு கொள்வதாக உறுதி கூறினர். திம்மையா உற்சாகத்துடன் செயலில் ஈடுபடலானர். நல்ல நாள் ஒன்றிலே சந்தைப் பேட்டை என்னும் இடத்திலே ஸ்ரீ ராம மந்திரத்திற்கு அஸ்திவாரம் இடப்பெற்றது; தொடர்ந்து ஆக்க வேலைகள் நடைபெறலாயின.

இதையெல்லாங் கண்ட கிருஷ்ணப்பாவுக்கு ஏற்பட்ட அகமகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. 'நம்முடைய ஆவல் இத்தனை சடுதியில் செயலாக உருப்பெறத் தொடங்கி விட்டதே! எல்லாம் ஸ்ரீ ராம பிரானின் அருள்; மாருதியின் செயல்' என்று கிருஷ்ணப்பாவின் பக்தி யுள்ளம் கடவுளை வாழ்த்திக் கொண்டே இருந்தது.

'கச்சேரிகள் மூலம் வருகிற பணமெல்லாம் மந்திர நிர்மாணத்திற்கு; நாடகக் கம்பெனியிலிருந்து கிடைக்கிற ஊதியம் வீட்டுச் செலவுக்கு'—இப்படி ஒருவரையறை செய்து கொண்டு அவர் ஊண் உறக்கம் எதிலுமே கவனம் இல்லாமல் இரவு பகல் எந்நேரமும் நிர்மாண அலுவல்

களிலே ஈடுபட்டார். சில மாதங்களுக்குள் கிருஷ்ணப்பா மனங்குளிர ராம மந்திரம் பூரண உருப் பெற்றது. அவர் இந்த நற்பணிக்கு மூலகாரணமாக விளங்கியதால் அனைவரின் அன்பும் மதிப்பும் அவருக்குக் கிடைத்தன. அதன் பிரதிபலிப்பே போலப் பாலெஸ் நாடக மன்றத்திலும் கிருஷ்ணப்பாவின் சம்பளத் தொகை முப்பது ரூபாயாக உயர்வடைந்தது.

## 12. முத்திராதானம்

(1891)

கிருஷ்ணப்பாவின் பக்தி வழிபாடுகள் துதிப் பாடல்களைப் பாடுவது, ராம நாமத்தை ஜபிப்பது முதலிய நிலைகளைக் கடந்தன. பகவானைப் பூஜிக்கவும் வேண்டும் என்ற அவா தோன்றிற்று. அதற்குரிய சம்ஸ்காரங்களைப்பற்றி ஒரு பெரியவர் கூறினர்.

"அப்பா, நீ மேலும் மேலும் நல்ல காரியங்களில் ஈடுபாடு கொள்வதைக் காண எனக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகிறது. சிறு வயசு முதலே பக்தியால் நிறைந்தது உன் உள்ளம். அந்தப் பக்தியை மேலும் போஷித்து வளர்க்கப் பக்தி கானம் ஓர் உதவி. அந்தக் கானம் பரிமளிக்க உதவுவது இனிய சாரீரம். இவ்வகைகளால் நீ பலரின் அன்பைப் பெற்றாய், தெய்வ அருளைப் பெற்றாய், நற்பணிகள் பல புரிந்து வருகிறாய். ஆனால் இனி நீ செய்ய நினைக்கும் காரியத்திற்குச் சம்ஸ்காரம் தேவை" என்றார்.

"சம்ஸ்காரமா? அது என்ன?"

"குல தர்மங்களை அநுசரித்து ஒவ்வொரு பரம்பரையில் ஒவ்வொரு வகையான சம்ஸ்காரங்கள் உண்டு. அவற்றில்

முத்திரா தானம், உபநயனம் இப்படிச் சில. பின்னுட்களில் கர்மாக்கள், பூஜை புரஸ்காரங்கள் முதலியன செய்வதற்கு மேற்குறித்த சம்ஸ்காரங்கள் மிக அவசியம். முன் நாட்களில், யார் எப்படி இருப்பர் என்கிற பிரச்னை இல்லாத காலங்களில் பெற்ருேர்கள் தங்கள் மக்களுக்குச் சிறு பிராயத்திலேயே மேற்குறித்த சம்ஸ்காரங்களைச் செய்து வைத்துவிடுவதுண்டு. அவ்வாறு செய்யப் பெருதவர் பின்னராவது செய்துகொண்டால்தான் நற்பணிகளில் நேரிடையாக ஈடுபாடு கொள்ளலாம். அதன்படி நீ முத்திரா தானம் முதலில் செய்து கொள்ளவேண்டும்."

"எப்படிச் செய்து கொள்வது? எங்கே செய்து கொள்வது? யார் செய்து வைப்பர்?"

"மத தர்மங்களைப் பரிபாலனம் செய்வதற்கென்று அங்கங்கே மடங்கள் உள்ளன. அவற்றில் பெரியோர்கள் இருக்கிருர்கள். இம்மாதிரி காரியங்களை அவர்கள் செய்து வைப்பர்."

"இப்போது நான் எந்த மடத்திற்குச் செல்ல வேண்டும்?"

"நஞ்சன் கூடு என்ற க்ஷேத்திரத்தில் ராகவேந்திர மடம் இருக்கிறது. அங்குள்ள பெரியோர்களை வணங்கி உன் கோரிக்கையைத் தெரிவித்தால் அவர்கள் ஆகவேண்டியவற்றை அன்போடு செய்து வைப்பர்."

"அப்படியா? மிகவும் சந்தோஷம் சுவாமி. நான் இதோ இப்பொழுதே நஞ்சன் கூட்டிற்குப் புறப்படுகிறேன். நமஸ்காரம்."

'ஸ்ரீ ராமபிரானே அருள் கூர்ந்து நம் காரியங்களை நேரிய வழியிலே கொண்டு செலுத்துகிருர். எல்லாம் அவன் அருள்'—இப்படி எண்ணி மகிழ்ச்சியுற்றது கிருஷ்ணப்பாவின் உள்ளம்.

ராகவேந்திர மடத்தில் பெரியோர் பலர் இருந்தனர். கிருஷ்ணப்பாவின் தோற்றமும் விநயமான பேச்சும் அவர்கள் மனத்தைக் கவர்ந்தன. "இங்கே சில தினங்கள் தங்கி இரு" என்று அப் பெரியவர்கள் கட்டளை இட்டனர். அவர்களுக்குப் பணிவிடைகள் புரிந்து கொண்டு அவர் சில நாள் அங்கே தங்கியிருந்தார். அவரிடம் பூரண திருப்திகொண்ட மடாதிபதிகள் மனமுவந்து கிருஷ்ணப்பாவுக்குப் புனிதமான முத்திரா தானத்தைச் செய்து வைத்து ஆசிகூறி விடையளித்தனர்.

## 13. தமிழ்நாட்டு யாத்திரை

**(1892)**

முத்திராதானம் என்ற பவித்திரமான சம்ஸ்காரத்தைப் பெற்றுக் கொண்டது முதல் கிருஷ்ணப்பாவின் உள்ளம் மேலும் தூய்மை பெற்றது; இறைபணியில் அதிகமான ஈடுபாடு கொண்டது. குருவாரந்தோறும் ராம மந்திரத்தில் சிறப்பான முறையிலே பஜனை நடத்த ஏற்பாடு ஆயிற்று. அதிலே கிருஷ்ணப்பாவோடு மற்றும் பலரும் கலந்து கொள்வர். பிரதோஷ புண்ணிய காலங்களில் மிக உயர்வான முறையிலே அங்கே அநேகம் வித்துவான்களின் கச்சேரி நடைபெறும். கிருஷ்ணப்பாவும் கச்சேரி செய்வதுண்டு. நவமி தோறும் விசேஷ உற்சவம் நடைபெறும். இவற்றிற்கான பொருட் செலவுகளைச் செய்ய அங்குள்ள வியாபாரச் செல்வர்கள் முன் வந்தார்கள்.

இவ்வளவெல்லாம் இருந்தும் கிருஷ்ணப்பாவின் உள்ளத்திலே குறை ஒன்று இருந்து வந்தது. மேற் குறித்த நிகழ்ச்சிகளால் அந்தக் குறை மனத்தில் அதிகமாக உறுத்தலாயிற்று. 'கச்சேரி செய்ய என்று அமர்ந்தால் தங்கு

தடையின்றி மளமளவென்று பாட நல்லவையாக நிரம்பக் கீர்த்தனைகள் நம்மிடம் இல்லையே!' என்று அவருக்குப் பட்டது. 'இதற்கு என்ன செய்யலாம்?' என்று பலவாறு யோசித்து ஒரு சிறந்த முடிவுக்கு வந்தார். 'தென்னாட்டை நோக்கிப் புறப்பட வேண்டும். அங்கே உள்ள மகா வித்துவான்களைப் பரிசயங்கொள்ள வேண்டும். அவர்களிடம் சிறந்த கிருதிகளைப் பாடம் செய்ய வேண்டும்' என்று முடிவு செய்தார்.

முதலில் சென்னை. பிறகு திருச்சி. அப்புறம் கோயம்புத்தூர். பின்னர் மதுரை. அங்கிருந்து திருநெல்வேலி, ராமநாதபுரம்—இப்படியாகப் பல ஊர்கள். கடைசியில் தஞ்சை. அங்கங்கே சில நாட்கள் தங்கல். அவ்விடங்களில் உள்ள சிறந்த வித்துவான்களின் நட்பு; சல்லாபம்; மரியாதை செலுத்தி மரியாதை பெறல் முதலியன.

இவ்வாறாகப் பல ஊர்களுக்கும் சென்று பல நன்மைகளைப் பெற்ற பின் கிருஷ்ணப்பா திருவையாறு என்னும் பஞ்சநத க்ஷேத்திரத்திற்கு வந்தார். அந்தப் புண்ணியத் தலத்தைப் பற்றிக் கிருஷ்ணப்பா முன்னமே கேள்விப்பட்டிருந்தார். ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் அவர்கள் நாதோபாசனையையே பிறவிக் குறிக்கோளாகக் கொண்டு அங்கே வாழ்ந்து வந்த விவரங்களை அவர் அறிந்திருந்தார். தியாகையர் அவர்கள் இயற்றியருளிய சிறந்த கிருதிகளின் மகிமையும் முன்பே தெரிந்ததே. அத்தகைய திவ்வியத் தலத்திலே காலடி வைத்ததும் கிருஷ்ணப்பாவுக்குப் பக்தி புணர்வினால் உடலில் புளகம் போர்த்தது; கண்கள் பாஷ்பத்தைப் பெருக்கின.

தியாகப் பிரம்மத்தினிடம் அளவிறந்த பக்தி பூண்டு அவரைக் குருவாகக் கொண்டு பணிவிடை செய்து அவர் அருளிய புனிதமான கிருதிகளை அவரிடமிருந்து நேரில் பயி

னும் மகத்தான பேற்றைப் பெற்றவர்கள் இருவர்: சுந்தர பாகவதர், கிருஷ்ண பாகவதர். அவர்கள் பரம உத்தமப் பிறவிகள். கலையைத் தெய்வார்ப்பணமாகக் கருதும் இயல்பினர். எளிய வாழ்க்கை வாழ்ந்து கொண்டு நாதோபாசனை செய்தவர்கள். தியாகராஜ கிருதிகளைப் பெற்றுப் பொக்கிஷம்போல் அவற்றைப் பேணி, தகுந்த பாத்திரங்களுக்கு அளித்து உலகம் உஜ்ஜீவிக்கக் காரணர்களாக இருந்தவர்கள். பயில்வதும், போதிப்பதும், இசைப்பதும் அந்த நாட்களில் நினைத்தவர் நினைத்தபோது நினைத்த இடங்களில் செய்வனவாக இருக்கவில்லை; உடல் உள்ளத் தூய்மையோடு தெய்வத் திருமுன் அல்லது தெய்விகம் சூழ்ந்த இடத்தில் தெய்வ நினைப்போடு புரியும் செயல்களாக அவை இருந்து வந்தன.

கிருஷ்ணப்பா இந்தப் புண்ணிய புருஷர்களைக் கண்டு வணங்கினர்; பயபக்தியுடன் பேசினர். அவர்கள் கிருஷ்ணப்பாவை நன்கு உணர்ந்து கொண்டனர். அதனால் உடனடியாகவே கிருதிகளைப் போதிக்க ஆரம்பித்துவிட்டனர். ஒரு நாள் ஒரு பொழுதைக்கூட வீணடிக்காமல் அவர்கள் அருள் புரிந்ததனால் கிருஷ்ணப்பாவுக்கு வெகு சீக்கிரத்திலேயே நூறு கிருதிகள் வரை பாடமாகி விட்டன.

அங்கிலேயில் ஒரு நாள் பெரியவர்கள் மந்தஹாசத்துடன், "போதும் அல்லவா? திருப்திதானே? மனக்குறை தீர்ந்ததா?" என்றார்கள். அவர்களுடைய அன்பை எண்ணிக் கிருஷ்ணப்பாவின் உள்ளம் கசிந்தது ; கண்களில் நீர் துளித்தது.

கிருஷ்ணப்பா அவர்கள் பாதங்களில் பணிந்து எழுந்து நாத் தழுதழுக்க ஊருக்குச் செல்ல விடை கேட்டார்.

பெரியவர்கள் மகாப் பிரசாதமாக ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் திருஉருவப் படம் ஒன்றை அருளி மிக்க வாத்ஸல்யத்துடன் ஆசி கூறி ஊருக்குச் செல்ல அநுமதி அளித்தார்கள்.

## 14. திருமணம்

**(1893)**

திருவையாற்றிலிருந்து பெற்று வந்த தியாகப் பிரம்மத்தின் திருஉருவப் படத்தைக் கிருஷ்ணப்பா வேதோக்த முறைப்படி பிரதிட்டை செய்தார். தினசரி பக்தி சிரத்தையுடன் ஆராதனை வழிபாடுகள் நடத்தினர். பஞ்சமிதோறும் விசேஷ ஆராதனைகள் நிகழ்த்தினர். தியாகராஜ சுவாமிகள் சித்தி அடைந்த பகுள பஞ்சமியில் சிறப்பாக உற்சவங் கொண்டாடினர். அந்தப் புநித தினத்திலேதான் திருவையாற்றிலே ஆண்டுதோறும் மகத்தான உற்சவ வழிபாடுகள் பல காலமாக நடைபெற்று வருகின்றன. கர்நாடக சங்கீதக் கலையிலும் தியாகப் பிரம்மத்தினிடமும் பக்தியுடையவர்கள் செயலுக்குத் தக்கபடி அங்கங்கே தியாகோற்சவத்தைக் கொண்டாடுவதும் அந்தப் பொன்னுளிலேதான்.

கிருஷ்ணப்பாவுக்கு இப்போது இருபத்து நான்கு வயது நிறைந்திருந்தது. அவருடைய சிறந்த யோக்கியதைகளும், உடல் வனப்பும், வாலிபப் பருவமும் பெண்ணைப் பெற்றவர்களின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. அவருடைய திருமணப் பேச்சு எழுந்தது. அவருக்குப் பெண் தரப் பலரும் போட்டியிட்டனர். அநேகமாகத் தினசரி கிருஷ்ணப்பாவின் வீட்டிற்கு யாராவது வந்தவண்ணம் இருந்தனர்; திருமணம் பற்றிப் பேசினபடி இருந்தனர். அவர் முதலில் இசையவில்லை. தாய் பல பல

சொல்லிப் பன்முறை வற்புறுத்தி இசைய வைத்தார். தமையனார் சுப்பராயன் பெண் பார்த்துத் தீர்மானிக்கும் பொறுப்பை மேற்கொண்டார்.

பரம்பரையினால் உயர்ந்ததும் செல்வத்தால் குறைந்ததும் ஏனைய நல்ல அம்சங்களில் நிறைந்ததுமான குடும்பம் ஒன்றிலே கிருஷ்ணப்பாவுக்குத் திருமணம் நிச்சயித்தார் சுப்பராயன்.

பெண்ணின் பெயர் **துங்கம்மாள்**. தெய்வத்தின் திருவருளால் குறிப்பிட்ட நன்னாளில் கிருஷ்ணப்பாவுக்கும் துங்கம்மாளுக்கும் திருமணம் இனிது நிறைவேறிற்று. நஞ்சுண்ட ராவ், திம்மையா முதலிய நண்பர்களும், பல இசைக் கலைஞர்களும், நாடக மண்டலியைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர். அரசாங்கத்திலிருந்து ஆசிச் செய்தியும் பரிசுகளும் வந்தன.

அதுவரை வறுமை, இசைப் பயிற்சி, நாடகத் துறை, இறை வழிபாடு, வெளியூர்ப் பிரயாணங்கள் என்று இப்படிப் பலவகைகளிலும் காலத்தைச் செலவிட்டு வந்த கிருஷ்ணப்பா திருமணம் நிகழ்ந்த நாளிலிருந்து வீட்டிலே பொருந்தி இருந்து இல்லறத்தில் மனத்தைச் செலுத்திச் சிறந்த முறையில் குடும்பத்தை நடத்தி வந்தார். தாயைப் பேசும் தெய்வமாகப் பாவித்துப் போற்றி வந்தார். உள்ளூரிலேயே வேறிடத்தில் வாழ்ந்து வந்த தமையனாரிடமும் அவர் மனைவியாரிடமும் மிக்க மரியாதையோடும் அன்போடும் பழகி வந்தார். தாயும் தமையனும் அவருடைய உயர்வு கண்டு உள்ளம் பூரித்தனர்.

## 15. திக் விஜயம் !

**(1900)**

சுமார் ஏழு ஆண்டுகள் கிருஷ்ணப்பா மைசூரில் நிலையாக இருந்து குடும்பம் நடத்தி வந்தார். பிறகு மறுபடியும் அவர் மனம் கிளர்ந்தெழுந்தது. அரும்பாடு பட்டுப் போஷித்து வளர்த்திருந்த தம்முடைய யோக்கியதையை எங்கும் பிரகாசிக்கச் செய்ய வேண்டும்; அதன் தரத்தைப் பிற வித்துவான்கள் எப்படி மதிப்பிடுகிறார்கள் என்பதை அறிய வேண்டும் என்ற எண்ணங்கள் அவர் உள்ளத்தில் எழுந்தன. உடனே தென்னாட்டை நோக்கிப் புறப்பட்டார்.

அப்போது தென் பிரதேசத்தில் கர்நாடக சங்கீத உலகில் பலர் மேன்மையுடன் பிரகாசித்து வந்தனர்.

வேணுகானம் கும்பகோணம் சரப சாஸ்திரிகள், கோட்டுவாத்திய விற்பன்னர் திருவிடைமருதூர் சகாராமராவ் சகோதரர்கள், வயலின் மகா வித்துவான் திருக்கோடிகாவல் கிருஷ்ணையர், வீணை மேதை தனம்மாள் ஆகியவர்களும்; வாய்ப் பாட்டுத் துறையில் உமையாள்புரம் வித்துவத் சகோதரர்கள், எட்டையாபுரம் ராமசந்திர பாகவதர், மடவார்குளம் முத்தையா பாகவதர், தலை ஞாயிறு சோமு பாகவதர், நாமக்கல் நரசிம்ம ஐயங்கார், பாலக்காடு அனந்தராம பாகவதர், கோனேரிராஜபுரம் வைத்தியநாதையர், ராமநாதபுரம் (பூச்சி) ஸ்ரீநிவாச ஐயங்கார், முதலியோரும்; தாள வாத்தியத் துறையில் பழனி கிருஷ்ணையர், உமையாள்புரம் சுந்தரமையர், புதுக்கோட்டை மான்பூண்டியா பிள்ளை, ஆகி

NRWM69
N56



யோரும், நாகஸ்வரக் கலையில் மதுரை பொன்னுசாமி பிள்ளை, செம்பொன்னர் கோயில் ராமசாமி பிள்ளை, திருமருகல் நடேச பிள்ளை, கூறைநாடு நடேச பிள்ளை முதலியோரும் மற்றும் பலரும் இசைக் கலை வல்லோர்களாகத் திகழ்ந்துகொண்டிருந்தார்கள். இவர்களுடைய கலைத் திறமையைத் தாம் கேட்டறியவும் இவர்கள் முன்னிலையில் தம் யோக்கியதையைக் காட்டவும் ஆவல் கொண்ட கிருஷ்ணப்பா இம்முறை நீண்ட நாளைய சுற்றுப் பிரயாணத் திட்டம் ஒன்றை வகுத்துக்கொண்டு மைசூரிலிருந்து புறப்பட்டார்.

முன் நாட்களில் 'திக்விஜயம்' என்ற சிறப்பான செயல் ஒன்று இருந்து வந்திருக்கிறது. மிகப் பழைய புராணங்கள் முதல் மிகச் சமீப காலச் சரித்திரம் வரை இந்தத் திக்விஜயங்களைக் கூறும் அரிய செய்திகள் பல. அந்த முறை அரச பரம்பரைக்கு மட்டுமேயன்றிக் கலைப் பரம்பரைக்கும் உரித்தாயிருந்து வந்திருக்கிறது. கிருஷ்ணப்பாவின் சுற்றுப் பிரயாணத்தைத் திக்விஜயம் என்பது பொருத்தமே. ஆனல் அவர் அவ்வாறு எண்ணித் தம் பிரயாணத்தைத் தொடங்கவில்லை. இசைக் கலை சம்பந்தமாகத் தம்மிடம் அதற்குரிய திண்மை இருக்கிறது என்று அவர் எண்ணவும் இல்லை. 'கற்றது கைம் மண்ணளவு; கல்லாதது உலகளவு' என்ற நினைப்பை ஒருபோதும் அவர் மறந்தவரே அல்லர்.

அந்தச் சுற்றுப் பிரயாணத்திலே அவர் கருதியது வேருகவும் நடந்தது வேருகவும் இருந்தது. சென்ற இடங்களிலெல்லாம் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன் படுத்திக்கொண்டு மேற்கூறிய மேதைகளில் பலருடைய இன்னிசையை அவர் கேட்க முடிந்தது; ஆனல் தம்முடைய

105870

புலமையை வெளிக் காட்டத் தக்க செவ்வி அவருக்குக் கிட்டவே இல்லை. அவரை அவையில் இருத்திப் பாடச் செய்து அவருடைய இசையைக் கேட்க யாருமே முன் வர வில்லை.

இதற்காக அவர் சிறிதும் வருத்தப்படவில்லை, மனம் இடிந்து அயர்ந்துபோய் ஊர் திரும்பிவிடவும் இல்லை. விடா முயற்சி மூலம் வெற்றி கண்டு உரமேறிய அவர் உள்ளம் இதிலும் வெற்றி காணும் வழியை ஆராயத் தொடங்கிற்று.

'...இசைப் புலவர்களைக் கண்டு அவர்கள் நல்லிசையைக் கேட்கவும் நம் புலமையை வெளிப்படுத்தவும் புறப்பட்டோம். இசைப் புலவர்களைக் கண்டாயிற்று; நல்லிசைகளைக் கேட்டாயிற்று. பிரயாணத் திட்டத்தில் ஒரு பகுதி நிறைவேறிவிட்டது. நம் புலமையை வெளிக்காட்டுவது மட்டும் நடக்கவில்லை. அதற்கு மனித சகாயம் முன் நிற்கும் என எதிர் பார்த்தோம்; அப்படி அது நிற்கவில்லை. ஆகையால் இனித் தெய்வ சகாயத்தை நாடுவோம். மனிதர்கள் விரும்பாத நம் இசையைத் தெய்வமாவது விரும்புகிறதா என்று பார்க்கலாம். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நிர்ப்பந்தமாகத் தெய்வத்தைக் கேட்கச் செய்யலாம். தெய்வமும் விரும்பவில்லை என்று ஏற்பட்டால் அதற்கு மேல் என்ன செய்வது என்பதை அப்பொழுது யோசித்துக் கொள்ளலாம். இப்போதைக்குத் தெய்வத்தை நம்பிச் செயலில் ஈடுபடலாம். திருவருள் எப்படியோ அப்படி நடக்கட்டும்!' என்று முடிவு கொண்டார். அந்தக் கணம் முதல் தம்முடைய வெறும் சுற்றுப் பிரயாணத்தை க்ஷேத்திராடனமாக மாற்றிக்கொண்டார்.

மைசூரிலிருந்து கிளம்புகிறபோது அவர் தனியே கிளம்பவில்லை. ஏழெட்டுப் பேர் அடங்கிய ஒரு குழுவாக,

ஓரளவு பொருள் வசதியோடு கிளம்பியிருந்தார். அந்த முன்னேற்பாடு இப்போதைய அவர் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பெரும் உதவியாக இருந்தது.

கிருஷ்ணப்பா பிரசித்திபெற்ற ஊர்களுக்கெல்லாம் சென்று அங்கங்கே கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு அபிஷேக அர்ச்சனை ஆராதனைகளைச் சிறப் புற நடத்தி வைத்தார். அன்றன்று அங்கங்கே பகவத் சந்நிதியிலே அமர்ந்து தம் பக்க வாத்திய வித்துவான் களுடன் விமரிசையாகக் கச்சேரி செய்து வரலானார். அவர் முயற்சி வீண் போகவில்லை. அவருடைய இசையை ஆலயங்களில் எழுந்தருளியுள்ள தெய்வங்கள் மட்டுமே கேட்கவில்லை; அவைகளைத் தரிசிக்க வருகிற பக்தகோடி களையும் கேட்கச் செய்தன. பலர் வியந்து புகழ்ந்து பாராட்டவே செய்தனர். இவ்வாறு மைசூர்க் கிருஷ்ணப் பாவின் தெய்வ பக்தியும் இசைப் புலமையும் தென்னாட்டின் பல பகுதிகளிலும் பரவி முழங்கலாயின.

கிருஷ்ணப்பா கும்பகோணத்தை அடைந்தார். அங்கே ஸ்ரீ மங்களாம்பிகை ஸ்ரீ கும்பேசுவரர் இரு மூர்த்திகளுக் கும் விசேஷ ஆராதனைகள் நடத்தினார். பக்க வாத்தியங்கள் சகிதம் சந்நிதியில் அமர்ந்து கச்சேரி செய்தார். அன்று அங்கே ஏராளமான ஜனத்திரள். கர்நாடக சங்கீதத்தை வரிசையறிந்து ரசிக்கும் ஆற்றல் வாய்ந்த பலர் அந்தக் கூட்டத்தில் இருந்தனர். அவர்கள் சிரக்கம்பம் கரகோஷம் முதலியன செய்து கிருஷ்ணப்பாவின் இசையை ரசித்தனர். அதிலிருந்து கிருஷ்ணப்பாவின் புகழ் எங்கும் நன்கு பரவி விட்டது.

# 16. இரட்டைச் சாதுரா!

**(1901)**

அப்போது திருவாவடுதுறை ஆதீனத்தில் பண்டார சந்நிதிகளாகப் பட்டத்தில் வீற்றிருந்தவர்கள் சுப்பிர மணிய தேசிகர் அவர்கள். அவர் சிறந்த மேதை. இசைக் கலைஞர்களையும் தமிழ்ப் புலவர்களையும் நன்கு ஆதரிக்கும் பெருந்தகை. சைவ மதம் செழிக்கப் பலவகை யாலும் பாடுபட்டவர். தேவாலயங்களின் வழிபாடுகள் ஒழுங்காக நிகழும்படி கவனித்துக்கொள்வதைத் தம் வாழ் நாள் தொண்டாக மேற்கொண்டவர். தாம் ஒரு பெரிய மடாதிபதி என்ற செருக்குச் சிறிதும் இல்லாதவர். நேர்மையிலே பிழை கண்டால் நெருப்பாய்ச் சுடுகிற இயல் பினர். ஏழை எளியவர்களிடம் கருணை மிக உடையவர். மகா வைத்தியநாதையர் முதல் பல சிறந்த மேதைகளின் இசையைக் கேட்டுப் பாராட்டிப் பட்டங்கள் அளித்து மகிழ்ச்சி பெற்றவர்.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த செம்மலின் செவியில் கிருஷ்ணப்பாவின் இசைப் புலமை பற்றிய செய்திகள் விழுந்தன. 'கர்நாடக சங்கீதக் கலையை மைசூரில் இருந்த படி பயின்று அதில் சிறப்பும் பெற்ற ஒருவர் தென்னாட்டை நோக்கி வந்திருக்கிறார் என்றால் அவரைக் கௌரவிப்பது நம் கடமை' என்று தேசிகர் எண்ணினார்.

அவருடைய அழைப்பின்பேரில் கிருஷ்ணப்பா தம் கோஷ்டியுடன் திருவாவடுதுறை ஆதீனத்திற்குப் புறப் பட்டார். வரவேற்பு, உபசாரம் முதலிய மரியாதைகள் சிறப்பாக நடந்தன. மகா சந்நிதானம் அவர்கள் கிருஷ் ணப்பாவிடம் அன்பு மொழிகள் பேசி அளவளாவினார். மிதமாகப் பேசும் பழக்கம் உள்ள கிருஷ்ணப்பாவின் சுவை

யான சொற்கள் சந்நிதானம் அவர்களுக்கு இனித்தன. கலைக்காகக் கிருஷ்ணப்பா பட்ட பாடுகளையெல்லாம் கேட்கக் கேட்கத் தேசிகர் அவர்கள் உணர்ச்சி வசப் பட்டார்.

அந்த மடத்திலே கிருஷ்ணப்பாவின் கச்சேரி நடைபெற் றது. அவருடைய கோஷ்டி பக்கவாத்தியங்களோடு அல்ல; திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் அவர்கள் வயலின்; கும்பகோணம் அழகனம்பி பிள்ளை அவர்கள் மிருதங்கம்.

திருக்கோடிகாவல் என்ற ஊர் திருவாவடுதுறைக்கு மிக மிக அண்மையில் உள்ளது. குறுக்கே ஓடுகிற காவேரி யின் இரு கரைகளுந்தான் அவ்விரு ஊர்களுக்கும் எல்லை கள். அந்த ஆறு ஒன்று மட்டும் அங்கே குறுக்கிடாமல் இருந்தால் திருக்கோடிகாவலையும் திருவாவடுதுறையையும் ஓர் ஊர் என்றே கூறிவிடலாம். எக்காலமும் இசை முழக்கம் நிகழ்ந்துகொண்டிருக்கும் இடம் திருவாவடுதுறை மடம். இணையற்ற இசைக் கருவி மேதையாகத் திகழ்ந்த கிருஷ்ணையரின் இருப்பிடம் திருக்கோடிகாவல். இவ்வாறு ஆற்று வெள்ளம் வேறு பிரித்து வைத்த அவ்விரு ஊர்களை யும் இசை வெள்ளம் ஒன்று கூட்டுவித்தது.

மகா வித்துவான் கிருஷ்ணையர் அவர்கள் 1857-இல் பிறந்தார். எனவே கிருஷ்ணப்பாவுக்குப் பன்னிரண்டு வயது மூத்தவர். அவருடைய தாய் மாமன் ஊர் மாயூரத் தின் அண்மையில் உள்ள மரத்துறை. வாய்ப்பாட்டு மகா வித்துவான் கோனேரி ராஜபுரம் வைத்தியநாதையர் அவர்களின் பூர்விகமும் அந்த ஊர்தான். கிருஷ்ணையர் பிறந்ததும் அங்கேதான்.

அது சங்கீதக் கலையிலும் பாகவத சம்பிரதாயத்திலும் மிகுந்த ஈடுபாடு உடைய பரம்பரை. கிருஷ்ணையரின் தகப்ப

னூர் குப்புஸ்வாமி பாகவதர். அவர் ஹரிகதா காலட்சேபம் செய்வதில் மிகுந்த திறமை உடையவர்; சம்ஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மகாராஷ்டிரம், தமிழ் ஆகிய பல மொழிகளிலும் சிறப்பான பயிற்சி உடையவர்; சமகால விற்பன்னர்களால் நன்கு மதிக்கப் பெற்றவர்.

கிருஷ்ணையருக்கு அடிப்படைப் பயிற்சி முற்றும் தகப்பனாரிடமே நடைபெற்றது. பின்னர்க் கொத்தவாசல் வேங்கடராம பாகவதர் அவர்களிடம் சில வருஷ காலம் குருகுல வாசம் நடைபெற்றது. கிருஷ்ணையருக்குப் போதுமான சாரீர வசதி இல்லை. ஆனால் சிறந்த ஞானம் இருந்தது. இதனை உணர்ந்த அவருடைய குருவும் தகப்பனாரும் அவரை வாத்தியத் துறையில் ஈடுபடுத்த முடிவு செய்தனர்.

சாத்தனூர்ப் பஞ்சுவையர் அவர்கள் அப்போது வயலின் வாத்தியத்தில் சிறந்து விளங்கிக்கொண்டிருந்தார். கிருஷ்ணையரைப் பெரியோர்கள் அவரிடம் குருகுல வாசத்தில் ஈடுபடச் செய்தார்கள். பஞ்சுவையரும் வாய்ப்பாட்டிலேதான் மிக மிகப் பிரகாசித்தார். எனினும் வயலின் வாத்தியத்திலும் நல்ல தேர்ச்சி உண்டு. கிருஷ்ணையருக்கு உபதேசிக்க அவருடைய ஆற்றல் போதுமானதாகவே இருந்தது. அவருக்கு ஏராளமான கீர்த்தனைகளும் தில்லானா, ஜாவளி, பதம் முதலியவைகளும் பாடம் உண்டு.

சீக்கிரத்திலேயே கிருஷ்ணையர் வயலின் இசைப்பதில் தேர்ச்சி பெற்றார். அந்நாட்களில் ஜகப்பிரசித்தர்களாக விளங்கிய தஞ்சாவூர் பிடில் சுப்பராயர், திருவாலங்காடு வீணை தியாகராஜ சாஸ்திரிகள் ஆகியவர்களிடம் சென்று பணிவுடன் பழகினார். அவர்கள் இசைக்கும் முறைகளைக்

கேட்டு மனத்தில் நன்கு பதித்துக்கொண்டு அவைகளேயும் கையாண்டு மேன்மை யடையத் தொடங்கினர். அவர் சதா காலமும் வயலினில் சாதகம் செய்வது சரளி வரிசை, வர்ணங்கள் ஆகியவைதாம்.

அவர் சொந்த மனோதர்மத்தில் மிருந்தவர். பிறரிட மிருந்து அறிந்தது ஒரு பங்கு என்றால் தம் புத்தியைக் கொண்டு, கற்றதை விமரிசைப்படுத்திக்கொண்டது ஒன்பது பங்கு எனலாம். நான்கு ஸ்தாயிகளிலும் துரித காலம், சௌக காலம் முதலியவற்றை அநாயாசமாக வாசிக்கப் பயின்றார். ஒற்றைத் தந்தி சாதகத்தில் தேர்ந்தார். ஸ்வர கமகங்களில் பரிசுத்தத்தை நிலை நிறுத்திக்கொண்டார். இக்காரணங்களால் கேட்பவர் பிரமிக்கத் தக்கவாறு வாசிப்பதில் வல்லவர் ஆனார். மகா வைத்தியநாதையர், வேணு கான விற்பன்னர் கும்பகோணம் சரப சாஸ்திரிகள் இவர்களுக்கு அதிபால்யத்திலிருந்தே பக்கவாத்தியம் இசைக்கத் தொடங்கிவிட்டார்.

அவர் கலைத்திறனைப் பற்றியும் குணாதிசயங்களைப் பற்றியும் இன்றும் வியந்து புகழ்ந்து பேசாதவர் இல்லை. அவரிடம் யாரும் எப்போதும் காணக் கூடியது எளிய தோற்றந்தான். ஆடம்பரத்திற்கும் அவருக்கும் வெகு தூரம். அன்புக்கு அடிமையாகும் இயல்பினர். அட்ட காசத் தன்மையுடையவரைத் திட்டமிட்டுச் செயலாற்றிக் கொட்டத்தை அடக்கி ஆளும் தீரர். பொருளைத் தேடுவதி லும் அதைக் காப்பாற்றுவதிலும் மிகவும் கருத்து உடைய வர். அவருடைய சரித்திரம் மிகப் பெரிது; அதில் புதைந்து கிடக்கும் மாணிக்கங்கள் போன்ற சம்பவங்களும் மிகப் பல.

திருவாவடுதுறை மடத்தில் அந்த நாட்களில் அடிக்கடி ஏதாவது வைபவங்கள் நடைபெற்ற வண்ணம் இருக்கும்.

அச்சமயங்களில் வித்துவான்கள் பலரும் அங்கே கூடுவர். விமரிசையாக விநிகை நடைபெறும். இசைப் புலவர்கள் விசேஷ சம்மானங்கள் பெறுவர். அங்கே நடைபெறும் கச்சேரிகளுக்கெல்லாம் கிருஷ்ணையரே பக்கவாத்தியமாக வயலின் இசைப்பார்.

வைபவ காலங்களில் மட்டுந்தான் திருவாவடுதுறை மடத்தில் இசை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்பதில்லை. தேசிகர் அவர்கள் மனத்திலே கலையுணர்ச்சி பொங்குகிற போதும், வெகு தூரத்திலிருந்து யாத்திரை மார்க்கமாக வித்துவான்கள் யாராவது அந்தப் பக்கம் வருகிறபோதும் மடத்திலே இசை நிகழ்ச்சிக்குரிய பிரத்தியேக ஏற்பாடுகள் நடைபெறுவதுண்டு. அந்தச் சந்தர்ப்பங்களிலும் கிருஷ்ணையர் இசைஅரங்கை அலங்கரித்து இசைமாரி பொழிவார்.

அந்த மடத்திற்குக் கிருஷ்ணையர் எப்படியோ அப்படியேதான் கும்பகோணம் அழகனம்பி பிள்ளை அவர்களும். அதற்குக் காரணம் திருக்கோடிகாவலைப் போலவே கும்பகோணமும் திருவாவடுதுறையின் சமீபமான ஊர் என்பது மட்டுமல்ல. அப்போது கிருஷ்ணையர் வயலின் வாத்தியத்திலே எப்படி இணையற்ற வித்துவானாகத் திகழ்ந்தாரோ அப்படியே அழகனம்பி பிள்ளையும் மிருதங்க வாத்தியத்தில் மிக்க மேம்பாடுடன் விளங்கினார் என்பதுதான். அண்மையில் இத்தகைய இரு மேதைகள் இருந்து வருகிறபோது திருவாவடுதுறை மடத்தில் இசையரங்கு மிகச் சிறப்பாக அடிக்கடி நடைபெறக் கேட்பானேன்?

இந்த இரண்டு புலிகளையும் திருவாவடுதுறை மடத்தில் அன்று கிருஷ்ணப்பா சந்தித்தார். அதற்கு முன் இவ்வளவு உயர்ந்த வித்துவான்களின் பக்கவாத்தியங்களுடன் கிருஷ்ணப்பா கச்சேரி செய்ததே இல்லை.

கிருஷ்ணையரின் தோற்றத்தைக் கண்டு கிருஷ்ணப்பா ஏமாந்து போய்விட்டார். அதே போல, 'மைசூர்ப் பிராந்தியத்திலே பிறந்து வளர்ந்த இந்த மனிதர் கர்நாடக சங்கீதத்தில் என்ன பிரமாதமான சாதனையைச் செய்திருக்கப் போகிறார்?' என்று கிருஷ்ணையரும் மிக லேசாக எண்ணி விட்டார். இருவருடைய எண்ணங்களும் செயலில் வெளிப் பட்டன. ராகம், ஸ்வரம் இரண்டையும் பாடுவதிலும் வாசிப்பதிலும் அவர்கள் தங்கள் தங்கள் ஆற்றலை வெளிக் காட்டி ஒருவரை ஒருவர் விஞ்சப் போட்டியிட்டனர். ரசிகர்களுக்கு மிகமிகக் கொண்டாட்டம்! அழகநம்பி பிள்ளை இந்தப் போட்டியைச் சற்றும் பொருட்படுத்தாமல் சிறிதும் வஞ்சனையின்றி இருவருக்கும் சமமாக, மிக நன்றாக வாசித்து வந்தார். தேசிகர் அவர்களுக்குப் பரம ஆனந்தம். கூடியிருந்த ஏனைப் பிரமுகர்களும் ரசிகர்களும் சிரக்கம்பம், கரகோஷம் முதலியவற்றால் தங்கள் உற்சாகத்தை வெளி யிட்ட வண்ணம் இருந்தனர்.

'ஓ!....இவர் பெரிய பேர்வழி! பார்த்தால் பசு; பாய்ந் தால் புலி! இந்த வயலின் வாத்தியம் இவர் கைகளில் என்ன பாடு படுகிறது! எத்தகைய அபூர்வ சங்கதிகள்! எவ்வளவு குழைவான கமகக் கோவைகள்! ஸ்வர வரிசைகளின் அழகுதான் என்ன! எங்கும் எவரிடமும் இதுவரை கேட் டறியாத முறையில் பிரமிக்கத்தக்க வகையில் அல்லவா இருக்கிறது இவருடைய வாசிப்பு!...' என்று கிருஷ்ணப்பா கிருஷ்ணையரைத் தமக்குள் வியந்துகொண்டார்.

கிருஷ்ணையரும் கிருஷ்ணப்பாவை மனத்தினுள் மெச்சிக்கொண்டார்.

'வீணை சேஷண்ணா, கரூர் ராமசாமி முதலியவர்களி டம் இவர் குருகுலவாசம் செய்திருக்கிறார்; திருவையாறு

சுந்தர பாகவதர், கிருஷ்ண பாகவதர் இவர்களிடம் தியாக ராஜ கிருதிகளை நேரில் பாடம் செய்திருக்கிறார் என்றெல் லாம் கேள்விப்பட்டபோது, 'என்னத்தைச் செய்தால் என்ன? மைசூர்க்காரர் சங்கீதம் இங்கே மேவாது' என்று தான் எண்ணினேம். நம் எண்ணம் முற்றும் தவறு என் பதை இவர் இப்பொழுது மெய்ப்பித்து விட்டார்...!'

இவ்வாறு இருவரும் ஒருவரை யொருவர் மனத்தி னுள் நன்கு மதித்துக் கொண்ட பின் அவர்கள் செயல் களில் போட்டி மனப்பான்மையும் முரண்பாடான போக் கும் மறையலாயின. அழகனம்பி பிள்ளையைப்போல அவர் கள் செயல்களிலும் அதிக ஒற்றுமை வெளிப்பட்டபோது தேசிகரும் மற்றவர்களும் முன்னிலும் அதிக உற்சாகத்தை யும் சந்தோஷத்தையும் அடைந்தனர்; அங்கங்கே அவற்றை வெளியிடவும் செய்தனர்.

கச்சேரி முடிவடைந்தது. கிருஷ்ணையர் வாத்தி யத்தை உறையில் இட்டுக்கொண்டே தம் இயற்கைப்படி, "பேஷ், பேஷ்! வெகு பிரமாதம்!" என்றார். கிருஷ்ணப்பா மரியாதை உணர்ச்சி பொங்கக் கிருஷ்ணையருக்குக் கரங் குவித்து அஞ்சலி செய்தார்.

"நான் பிறவி எடுத்ததன் பயனை இன்றுதான் பெற் றேன். கர்நாடக சங்கீதம் என்றால் என்ன, அதன் உண் மைச் சொரூபம் எது என்பவற்றை இன்றுதான் ஓரளவு அறிந்து கொண்டேன். தங்கள் ஞானத்தையும் வாசிப்புத் திறனையும் புகழ்ந்து பேச எனக்குச் சற்றும் யோக்கியதை இல்லை. வாய்ப் பாட்டுப் பாடுவது போல் வாத்தியத்தை இசைக்கும் வல்லமையுடைய தங்களை மனிதப் பிறவியாகக் கருத என்னால் முடியவில்லை. தங்கள் இசை ஞானம் தெய் வாம்சம் பொருந்தியது!"

கிருஷ்ணப்பா இவ்வாறு கூறிக்கொண்டே போனார். தேசிகர் மேடை நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்தார். பிறகு கிருஷ்ணையரை அழைத்துக் கேட்டார்.

"கச்சேரி எப்படி? இந்த வித்துவானைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

தேசிகர் கிருஷ்ணையரிடம் இவ்வாறு கேட்பது இது முதல் தடவை அன்று. 'புழக்கடைப் பச்சிலை' என்று கிருஷ்ணையரைப் புறக்கணியாத செயலால் தம் பெருமை, ஞானம், விதரணை மூன்றையும் அவர் நிலை நாட்டியிருந்தார். ஆகவே கிருஷ்ணையரின் வித்துவத்திலும் அவருடைய அபிப்பிராயத்திலும் தேசிகருக்கு அளவற்ற மதிப்பு. அவரை அடைந்து தங்கள் புலமையை வெளிப்படுத்திப் புகழும் பொருளும் பெற வேண்டும் என்று ஆவலோடு வருகிற இசைக் கலைஞர்கள் பலர். அவர்களைக் கிருஷ்ணையர் வரவேற்று, அன்பாய்ப் பேசி, கூட இருந்து கச்சேரிகளை நடத்தி வைத்து, அவர்கள் கலைத் திறன் பற்றித் தேசிகருக்கு எடுத்துக்கூறி ஏராளமான சம்மானங்களை வாங்கியளிப்பார். அந்த முறைப்படியே அவர் அன்றும் பதில் சொன்னார்.

" 'கச்சேரி எப்படி? இந்த வித்துவானைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்று மகா சந்நிதானம் இரண்டே வாக்கியங்களில் கேட்டு விட்ட கேள்விக்கு நான் பதில் சொல்வதானால் மிக விரிவடையும். நான் அறிந்த வரையில் இந்த ஆதீனத்தில் பிரவேசித்து இந்த இசையரங்கில் அமர்ந்து செயலாற்றிய எவரும் சாமானியராக இருந்ததே இல்லை. அதை இந்த மேடையின் பிரபாவம் என்று சொன்னாலும் மகா சந்நிதானத்தின் ஞான விசேஷம், கலையபிமானத்தின் உயர்வு என்று சொன்னாலும்

ஒன்றேதான் என்பது என் அபிப்பிராயம். 'மைசூரி லிருந்து யாரோ ஒருவர் வந்திருக்கிறாராம்; ஏதோ சுமா ராகப் பாடுகிறாராம்' என்று இராமல் உடனடியாக அவரை வரவழைத்துக் கௌரவிக்க ஏற்பாடு செய்த மகா சந்நிதா னத்தின் நற்செயலால் இன்று இங்குள்ள அனைவரும் உயர் தரமான ஒரு கச்சேரியைக் கேட்க முடிந்தது. அத்துடன் இவருக்கு வாசிக்க என்னை அழைத்ததால் இவருடைய பெருமையை நேரில் அறியும் வாய்ப்பு எனக்கும் கிட்டிற்று. அவர் என்னைப்பற்றி முதலில் என்ன எண்ணினாரோ தெரி யாது; நான் அவரைப்பற்றி ஆரம்பத்தில் மிக லேசாகத் தான் எண்ணினேன். அதன் விளைவைத்தான் மகா சந்நி தானம் உள்பட இங்குள்ள அனைவரும் நேரில் காணும்படி ஆயிற்று. போகப் போக நாங்கள் ஒருவரை ஒருவர் நன்கு உணர்ந்து கொண்டோம். அதன் விளைவாக என் மனம் இப்போது ஓர் உண்மையை உணர்ந்தது. ஒருவர் எங்கே பிறந்து வளர்ந்தாலும் உண்மையான கலையார்வமும் இசை யிடமும் கடவுளிடமும் குன்றாத பக்தியும் வகையறிந்த உழைப்பும் இருந்தால் கண்டிப்பாகப் பிரகாசிக்க முடியும் என்பதுதான் அந்த உண்மை. ஸ்ரீ கிருஷ்ணப்பா சிறந்த கர்நாடக சங்கீத வித்துவான் என்பதில் சந்தேகமே இல்லை. இவர் உத்தம காயகர்."

கிருஷ்ணையர் இவ்வாறு கூறினதும் தேசிகர் அவர்கள் பரம சந்தோஷமடைந்து, "அப்படியானால் இவரை, 'காயக சிகாமணி' என்று அழைக்கலாமா?" என வினவினர்.

கிருஷ்ணையர் சற்றும் தியங்காமல், "ஆகா! தாராள மாக" என்று வாயாரச் சொன்னர்.

தேசிகரின் கட்டளைப்படி அவர் சந்நிதானத்தில் வித்துவான்கள் நன்கு சம்மானிக்கப் பெற்றனர். கிருஷ்

ணப்பா அவர்களுக்கு விசேஷ வெகுமதிகளாக இரட்டைச் சாதராக்களும், நவரத்தினங்கள் இழைத்த சந்திர ஹாரம் ஒன்றும் கிடைத்தன. அறிஞர் பலர் கூடியிருந்த அந்த அவையில் தேசிகர், கிருஷ்ணப்பாவை, 'காயக சிகாமணி' என்று அழைத்து இசைக் கலையைக் கௌரவித்தார். கிருஷ்ணப்பா தமக்குக் கிடைத்த பெருமை முற்றும் தாம் உபாசித்து வரும் நாதப் பிரம்மத்திற்கு உரியது என்ற முழு நினைவோடு தம் குருமார்களையும் நாத ரூபியான பரம் பொருளையும் கருத்தில் நினைத்துக் கரங் குவித்து அஞ்சலி செய்தார்.

## 17. தெய்வம் தந்த புகழ்!

(1901)

மகத்தான ஆதரவையும் எதிர்பாராத சம்மானங்களையும் புலமையைப் பறை சாற்றத் தக்க சிறப்புப் பட்டத்தையும் திருவாவடுதுறை மடத்திலே பெற்ற கிருஷ்ணப்பா நேரே சென்னை சென்றார். அங்கே திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருக்கும் பார்த்தசாரதிப் பெருமான் கோயிலிலும் வழக்கம்போல் அவருடைய விசேஷ ஆராதனைகள் நடைபெற்றன. பிறகு தேவார்ப்பணமாக இன்னிசைக் கச்சேரியும் நிகழ்த்தினர்.

பக்த கோடிகள் பலர் பெருமாளின் திருச்சந்நிதானத்தில் நடைபெறும் கிருஷ்ணப்பாவின் கச்சேரியிலே தம்மை மறந்து நின்றனர். அவர்களிடையே அப்போது சென்னையிலே மிகப் பிரபலஸ்தராக வாழ்ந்து வந்த எம். முனிசாமி நாயுடு அவர்களும் இருந்தார்.

அவர் சென்னையில் தொண்டை மண்டல சபை என்ற பெயரில் மிகச் சிறப்பான முறையில் சங்கீத சபை

ஒன்றை அமைத்து இசைக் கலைஞர்களுக்கெல்லாம் பேரா தரவு அளித்து வந்தவர். இசையிலும் மொழியிலும் மிகுந்த பற்று உடையவர். அவர்மூலம் நன்மை பெறாத இசைக் கலைஞரே இல்லை. இன்றும் அவர் புகழ் பிரகா சித்துக் கொண்டிருப்பதற்கு மிக முக்கிய காரணம் கர்நாடக சங்கீதக் கலை வளர அன்று அவர் செய்த அபார சேவைதான்.

கிருஷ்ணப்பாவின் திறமைபற்றி முனிசாமி நாயுடு ஏற்கனவே கேள்வியுற்றிருந்தார். இன்று நேரில் அவரு டைய இசையைக் கேட்டதும் அவர் தகுதியைப்பற்றித் தாம் முன்னரே அறிந்திருந்தது மிகக் குறைவு என எண்ணினர். உடனேயே அவரை ஆதரிக்கக் கருதினர். விரைவில் தொண்டை மண்டல சபையில் கிருஷ்ணப்பாவின் இன்னிசைக் கச்சேரி வெகு சிறப்பாக நடந்தேறியது.

கர்நாடக சங்கீதக் கலைஞர்களுக்கு முனிசாமி நாயுடு அவர்கள் அந்த நாளில் ஒரு முத்திராதிகாரி போல விளங்கி வந்தார். அவர் பார்த்து ஒரு வித்துவானை ஆதரித்தால் மற்றவர்கள் அனைவருமே அவர் சென்ற வழியே செல்லும் மனப்பான்மை உடையவர்களாக இருந்தார்கள். ஆகையால் முனிசாமி நாயுடுவின் ஆதரவைப் பெற்ற கிருஷ்ணப்பா சென்னையில் அடுத்தடுத்துப் பல பிரமுகர்களின் ஆதரவு களையும் நிரம்பப் பெறத் தொடங்கினர்.

அவருடைய உள்ளம் பழைய விஷயங்களை எண்ணிப் பார்த்தது. முன்பு மனிதர்கள் யாரும் அவரை மதிக்க வில்லை; அவருடைய சங்கீதத்தைப் பொருட்படுத்திக் கேட்க முன்வரவில்லை. ஆனல் தெய்வங்களின் சந்நிதி களிலே தொடர்ந்து ஊர் ஊராய்ப் பாடுவது என்று ஆரம் பித்தார். இப்போது மனிதர்கள் அவரை மதிக்க ஆரம்

பித்துவிட்டனர். ஆகையால் இந்தப் புகழெல்லாம் தெய்வம் தந்ததே என்று நம்பித் திருவருளை மனமார வாழ்த்தி வணங்கினர்.

## 18. 'கானவிசாரத்'

(1903)

சுற்றுப் பிரயாணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு மைசூர் திரும்பிய கிருஷ்ணப்பாவுக்குப் புதிய கௌரவம் காத்துக் கொண்டிருந்தது. 'தென்னாடு சென்று வெற்றி கண்டு திரும்பியவர்' என்ற முறையில் அங்கே உள்ளவர்கள் அவரை மிகச் சிறப்பாகக் கொண்டாடத் தலைப்பட்டார்கள். அடுத்தடுத்து அவருக்கு மைசூர் வட்டகையிலும் மற்றப் பிராந்தியங்களிலிருந்தும் கச்சேரி அழைப்புகள் வர ஆரம்பித்தன. அநேகமாக அங்கும் இங்குமாக மாசத்தில் இரண்டு மூன்று கச்சேரிகளுக்குக் குறையாமல் நடைபெற்று வந்தன. 'கச்சேரிக்கு மைசூரிலிருந்து கிருஷ்ணப்பாவை வரவழைக்க உத்தேசம்' என்று சொல்லிக் கொள்வதில் ஒரு பெருமையைக் காணலாயினர், சென்னைப் பிராந்தியத்தைச் சார்ந்தவர்கள்.

இந்தச் சமயத்தில் மைசூரில் நடைபெற்றுவந்த நாடக மண்டலியிலும் அவருடைய அந்தஸ்து உயரத் தொடங்கிற்று. அவருடைய மாதச் சம்பளம் நாற்பது ரூபாயாக உயர்ந்தது. சின்னஞ்சிறு காரியம் முதல் பெரிய பெரிய விஷயங்கள் வரையில் அனைத்திற்கும் அவரைக் கலந்து அவர் ஆலோசனையை ஏற்று அதன்படியே யாவும் செய்யும் பழக்கத்தை நாடக மண்டலியார் மேற்கொண்டனர். இறுதியில் அவரையே மண்டலியின் நிர்வாகி யாக்கிக் கௌரவிக்கலானார்கள்.

'உத்தர ராம சரிதம்', 'வீரசிம்மன் சரிதம்', 'விராட பர்வம்' முதலியவற்றை மிகத் திறம்பட அமைத்து, நடிகர் களைப் பழக்கி வெற்றிகரமாக நாடகங்களை நடத்திவந்தார் கிருஷ்ணப்பா. மண்டலி தம் கைக்குள் அடக்கம் என்கிற எண்ணத்தோடு தாமே கதாநாயகனுக வேஷந் தாங்கமாட் டார். எந்த எந்தப் பாத்திரத்தை யார் யார் தாங்கினுல் நாட கத்திற்கு வெற்றி கிடைக்குமோ அதை நன்கு ஆய்ந்து சீர் தூக்கி அது அதற்கு உரியவர்களிடம் அந்த அந்தப் பாத்தி ரத்தின் பொறுப்பை ஒப்படைப்பார். தமக்கு ஏற்ற ஒரு பாத்திரத்தை மட்டுமே தாம் மேற்கொள்வார். அடி நாட் களில் 'முரட்டு நடிகர்' என்று பேர்வாங்கிய அவர் பின்நாட் களிலும் அத்தகைய பாத்திரங்களையே ஏற்று நடிப்பார். அதனுலேயே அவருக்கும் மண்டலிக்கும் எப்போதும் வெற்றி கிடைத்து வந்தது.

இவ்வாருகக் கிருஷ்ணப்பா இசைத் துறையிலும் நாடகத் துறையிலும் தெய்வ வழிபாடுகளிலும் குடும்ப விஷயங்களிலும் நட்பு உறவுகளிலும் அனைவரும் கொண் டாடத் தக்க முறையில் விளங்கி வந்தார். அன்பர்கள் அனைவரும் அவருடைய முன்னுள் நிலையையும் இந்நாள் நிலையையும் அடிக்கடி எண்ணியும் பேசியும் அகமகிழ்ந் தனர். இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல விரைவில் மைசூர்ச் சம்ஸ்தானத்திலும் அவர் வெகுவாகக் கௌர விக்கப்பெற்று மகாராஜா அவர்களால் 'கானவிசாரத்' என்ற சிறந்த பட்டமும் அளித்துப் போற்றப் பெற்றுர்.

## 19. தாய்க்கு அளித்த உறுதிமொழி

(1904)

கிருஷ்ணப்பாவின் பேரும் புகழும் ஓங்கி வளர்வதைக் கண்டு சிலர் உள்ளத்தில் பொருமைத் தீ கொழுந்துவிட்டு

எரியத் தொடங்கிற்று. நேர்மையான முறையில் அவரை அணுக முடியாத சிலர் 'ஆள் வைத்து அடிப்பது', 'அவர் இருக்கும் இடத்தை அழிப்பது', 'அவர் உடலை, உயிரை அழித்துவிடுகிற முறையில் விஷ மருந்திடுவது'—முதலிய ஊறுகளில் தங்கள் கருத்தைச் செலுத்தலாயினர்.

இந்த விவரங்கள் கிருஷ்ணப்பாவுக்கு முன் அவருடைய அன்னையாருக்குத் தெரியவந்தன. கவலையால் அவர் உள்ளம் பதறத் தொடங்கிற்று. ஓய்வின்றி அலைந்து கொண்டிருக்கும் மகனை அழைத்துச் சொன்னார்: "இருட்டிலே எங்கும் செல்லாதே. பகலிலுங்கூடத் தனியே எந்த இடத்திற்கும் போகாதே. யாராவது ஏதாவது கொடுத்தால் வாங்கி உட்கொள்ளாதே. அன்புடையவர் போல் நடிப்பவரிடம் ஏமாந்து போய்விடாதே...." இப்படி என்ன என்னவோ உபதேசங்களைப் பொழிந்து தள்ளினார். அப்படியெல்லாம் எதுவும் நடக்காதென்றும் பகவானின் அருளை நம்பி வாழ்வதே நாம் செய்யக்கூடிய காரியம் என்றும் கிருஷ்ணப்பா தம் தாய்க்குச் சமாதானம் சொன்னார்.

விவேகம் நிறைந்த மகனுடைய சொற்கள் தாயின் உள்ளத்திற்கு இதமாகவும் உண்மையாகவும் பட்டன. என்றாலும் எத்தகைய விவேகத்திற்கும் ஞானத்திற்கும் அப்பாற்பட்டதல்லவா தாய்ப் பாசம்?

"மகனே, நீ கூறியவை முற்றும் உண்மையே. ஆயினும் நீ எதையுமே பொருட்படுத்தாத முறையில் வெகு அலட்சியமாக நடந்துகொள்வாய். நடக்கத் தகாத ஏதாவது நடந்துவிட்டால் அப்புறம் என்ன செய்ய முடியும்? ஆகவே நீ எப்போதும் விழிப்புடன் நடந்துகொள்வதாக எனக்கு உறுதிமொழி கொடு. அதன் பிறகுதான் என் மனம் நிம்மதி அடையும்."

"நல்லதம்மா. இயன்ற அளவு விழிப்புடன் நடந்து கொண்டு பிறர் சூழ்ச்சிகளிலிருந்து தப்ப முயல்கிறேன். பிறகு ஸ்ரீ ராமபிரான் விட்டவழி ஆகட்டும்."

"ஸ்ரீ ராமபிரானும் ஆஞ்சனேயரும் பக்கத் துணையிருந்து உன்னைக் காப்பாற்றட்டும்!"

அதுமுதல் கிருஷ்ணப்பா தனிமையில் எங்கும் செல்வதில்லை. ஆனால் தற்காப்புக்காக அவர் தனி முயற்சி எதுவும் எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியமே இருக்கவில்லை. மெய்யன்பர்கள் பலர்தான் எந்நேரமும் அவரைச் சூழ்ந்து வளைய வந்துகொண்டே இருந்தனரே!

ஆகார விஷயத்திலும் அவர் மிக எச்சரிக்கையாகவே இருந்தார். எந்த இடத்திலுமே எதையும் உட்கொள்வதில்லை என்றே தீர்மானித்துக் கொண்டார். இதனால் பல இடங்களில் பல நல்ல மனிதர்களின் பொல்லாப்புக்கு அவர் உள்ளாக வேண்டியிருந்தது. "நாங்கள் கொடுத்து வைக்காத பாவிகள்! ஒரு வாய்ப் பால்கூட எங்கள் அன்பின் அறிகுறியாகப் பருகமாட்டேன் என்கிறீர்களே!" என்று நொந்துகொண்டவர்கள் பலர். அப்போது கிருஷ்ணப்பாவின் கண்களில் நீர் துளிக்கும். ஆனால் நாளடைவில் எல்லாம் சரியாகப் போய்விட்டது.

## 20. வித்துவத் பரீட்சை!

(1904)

**ப**ங்களூரில் ரெயில்வே அதிகாரி **நரசிம்மையா** என்பவர் வீட்டில் கிருஷ்ணப்பாவின் கச்சேரி நடைபெற்றது. வித்துவத் பிரமுகர்களும் ரசிகப் பிரமுகர்களும் அவையில் நிறைந்திருந்தனர். கிருஷ்ணப்பாவின் அற்புத கானத்தைக் கேட்டு அளவிறந்த மகிழ்ச்சிக்குள்ளான அப்

பெரியோர்கள் ஒரு முகமாக அவரை மகா வித்துவான் என்று புகழ்ந்து கொண்டாடினர்.

கிருஷ்ணப்பா தம் இருப்பிடம் திரும்பினார். அவரை உடனே தம் இல்லத்திற்கு வருமாறு வீணை சேஷண்ணா சொல்லி அனுப்பினார். குருவின் கட்டளைப்படி உடனே கிருஷ்ணப்பா அங்கே சென்றார்.

சேஷண்ணா அவர்கள் வீட்டிலே இசைக் கலைஞர்கள் நிறைந்த பெரிய சபை கூடியிருந்தது. அவர்களிடையே தமிழ் நாட்டைச் சார்ந்த இசைப் புலவர் ஒருவர் இருந் தார். சேஷண்ணா சொன்னார் :

"கிருஷ்ணப்பா, நீ அடைந்து வரும் பெரும் புகழை எண்ணி எல்லோரும் மிகுந்த ஆனந்தம் அடைகிறார்கள். பங்களூரில் கலை மேதைகளும் ரசிகர்களுங்கூடி உன்னை 'மகா வித்துவான்' என்று சிறப்பித்துப் பாராட்டினார் களாமே? 'வித்துவான்' என்கிற பட்டம் பெறுவதற்கே எவ்வளவோ யோக்கியதை வேண்டும். அதிலும் 'மகா வித்துவான்' என்ற பட்டத்தைப் பெறுவதற்கு மிக மிக அதிகமான யோக்கியதாம்சங்கள் இருக்க வேண்டும். மேலும் கலைச் சிறப்பைக் குறிக்கும் பட்டங்களைத் தருதற் கும் பெறுதற்கும் ஒரு தனித் தகுதி வேண்டும். இங் குள்ள நாங்கள் இசைக் கலையில் ஓரளவு தேர்ச்சியுற்றவர் கள் என்பது எங்கள் அபிப்பிராயம்; மக்களும் அவ்வாறே கருதுகின்றனர். ஆகையால் நீ எங்கள் முன்பாகப் பாடி உன் தகுதியை நிலை நாட்டி எங்கள் பாராட்டைப் பெறு வாயானால் மற்ற இடங்களில் நீ பெற்ற சிறப்புகள் நிலைக் கும். இப்போது உன்னை அதற்காகத்தான் இங்கு அழைத்தேன்."

கிருஷ்ணப்பா மனசுக்குள் சஞ்சலப்பட்டார். 'முன் கூட்டியே திட்டமிட்டுச் செய்யப் பெறும் சூழ்ச்சியல்லவா இது? நம் குருநாதரும் இச்சதிக்கு எப்படி மனமொப்பி ஞரோ தெரியவில்லை. எவ்வாருயினும் குருநாதரின் கட்ட ளைக்கு அடிபணிவது நமது கடமை. அவர் அருளாசியே துணை நின்று நம்மைக் காப்பாற்றட்டும்' என்று வேண்டிக் கொண்டார்.

"என்ன யோசிக்கிருய் அப்பா?"

சேஷண்ணு இவ்வாறு கேட்டதுதான் தாமதம்; புழுங்கிக் கொண்டிருந்த நெஞ்சங்கள் வெடித்தன. மனப் புழுக்கம் வார்த்தைகளாகச் சிதறிற்று.

"வேறு என்ன யோசனை? இந்தச் சோதனையிலிருந்து தப்பமுடியாதே என்பதுதான்."

"சங்கீத வாசனையே இல்லாதவர்கள்முன் அட்ட ஹாசம் செய்வதும் அவர்களிடம் பாராட்டுப் பெறுவதும் போலவா இந்தச் சபையில் பாடுவது? அதுதான் தியக்கம்!"

"பாவம், வெளியூர் சென்று பேரும் புகழுமாய்த் திரும்பினவர் அந்தக் குதூகலத்திலே மிதந்து கொண் டிருக்கையில் இப்படி ஒரு சோதனையை எதிர்பார்க்கவே முடியாது!"

"அதிலும் அவருடைய குருவே தலைமை வகித்து இந்தச் சோதனையை நிகழ்த்துவதென்றுல்?"

இப்படிப் பலரும் மெல்லவும் உரக்கவும் கேலியாகவும் நிஷ்டூரமாகவும் பலவாறு பேசித் தத்தம் ஆத்திரத்தை விசிறிக் கொண்டிருக்கையில் தென் பிரதேசத்தைச் சார்ந்த சங்கீத வித்துவான் சொன்னுர் :

"ஐயா, மகா வித்துவான் அவர்களே! நீங்கள் இந்த அவையின்முன் பாடி உங்கள் புலமையை வெளிப்படுத்த நீண்ட நேரம் எடுத்துக்கொண்டு முழுக் கச்சேரி செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. நான் இப்பொழுது ஒரு சிறு பல்லவியைப் பாடிக் காட்டுகிறேன். அதைப் பிழையின்றிப் பாடி, நிரவல் செய்து, நாலைந்து ஆவர்த்தம் ஸ்வரம் பாடினலே போதுமானது" என்று கூறி உடனே ஆவேசம் வந்தவர்போல் ஒரு பல்லவியைப் பாடலானர்.

அவர் சொற்களில் வீசிய பொருமைக்கனலைக் கிருஷ்ணப்பா நன்கு உணர்ந்து கொண்டார். அந்தக் கனலின் வீச்சுக் கிருஷ்ணப்பாவின் உள்ளத்திற்கு வேதனையை அளித்தது; மற்றவர்கள் உள்ளத்திற்கு இதமாக இருந்தது. அந்த வித்துவான் தியக்கம் சிறிதும் இன்றிப் பளிச் சென்று பாடிய பல்லவியின் அமைப்பைக் கவனித்தார் கிருஷ்ணப்பா; அது நினைத்த உடனே பாடப் பெற்ற தல்ல; முன்கூட்டியே பல காலம் முயன்று அமைக்கப் பெற்ற பல்லவி; இம்மாதிரியான சவாலுக்கென்றே திட்ட மிடப் பெற்ற இடக்கான பல்லவி என்பதைப் புரிந்து கொண்டார்.

அந்த ஆறு அட்சரகாலப் பல்லவியைக் கிருஷ்ணப்பா நன்ருக மனத்தில் வாங்கிப் பதிவு செய்து கொண்டார். அந்தச் சதியான சோதனையும் வித்துவானின் நிபந்தனை களும் அவர் உள்ளத்திலே அளவற்ற ஆத்திரத்தை உண்டு பண்ணினலும், 'குருநாதரின் திருச்சந்நிதானத்தில் நிகழ் வன' என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அனைத்தையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டார். கூண்டில் சிக்குண்ட புலியின் நிலையில், குருநாதர் முன்பாகப் பேசு கிறோம் என்ற முழு நினைப்போடு, மிக அடக்கமாகச் சில வார்த்தைகள் சொன்னர்:

"குருநாதரே! என் வாழ்நாளிலே இன்றைய தினத்தை மிக முக்கியமான நாளாக நான் கருதுகிறேன். திசையெங்கும் சென்று நான் புகழ் தேட முயன்றாலும் தங்களுடைய அருளாசி இல்லாவிடில் எனக்கு அணுவேனும் புகழ் கிட்டாது. நான் ஒரு சிறிதேனும் பெருமை பெற்றிருப்பேனாயின் அது தங்கள் அருள் விசேஷத்தினாலேயே தான் இருக்க முடியும்; இதை யாருமே மறுக்க முடியாது. அவ்வாறிருக்கத் தாங்களே முன் நின்று தங்கள் கால் தூசுக்கும் இணையற்ற என்னைச் சோதித்துப் பார்ப்பதென்றால், அதில் தெய்வத்தின் மறைமுகமான அருள் ஏதோ இருக்கிறது என்றுதான் கருதவேண்டும். ஆகவே இந்தச் சோதனையை மகத்தான பாக்கியமாகக் கருதி மிகுந்த பக்தியுடன் தலைவணங்கி வரவேற்கிறேன்; கட்டுப்படுகிறேன்; செயலாற்றுகிறேன். அதற்கு அநுகுணமான இந்த வித்துவானின் சவாலையும் ஏற்கிறேன். அருச்சுனனும் ஏகலைவனும் குரு பக்தியிலே சிறந்தார்கள்; குருநாதர் வைத்த பரீட்சைகளில் தேறித் துரோணர் முன் பெருமை பெற்றார்கள். என் குருபக்தி சத்தியமும் நேர்மையும் உடையதானால் தங்கள் அருளால் எனக்கும் வெற்றி கிட்டும். ஆனால் இவ்வளவுக்குப் பின் நானும் ஒன்று கூற விரும்புகிறேன். இந்த வித்துவான் பல காலம் முயன்று மிகுந்த பிரயாசையுடன் பயின்று வந்து இப்பொழுது பாடிய இந்தப் பல்லவியைத் தங்கள் அருளால் திறம்படப் பாடி விடுகிறேன். அதை நான் பாடி முடித்ததும் பதிலுக்கு நானும் ஒரு பல்லவியைப் பாடுகிறேன்; இங்கேயே, இப்பொழுதே அமைத்துப் பாடுகிறேன். அதை இவர் பிழையின்றிப் பாட வேண்டும். இந்த என் வேண்டுகோளைத் தாங்கள் புறக்கணிக்கலாகாது."

பிறகு கிருஷ்ணப்பா அந்த வித்துவான் பாடிக் காட்டிய பல்லவியைப் பாடினர். சற்றுமுன் பேசிய அவர் பேச்சிலே தான் அடக்கம் தொனித்ததே தவிரக் கலை நிகழ்ச்சியிலே முழுக்க முழுக்கக் காம்பீரியமே மேலோங்கி நின்றது.

பல்லவி வெகு சிறப்பாக, வெற்றிகரமாக முடிவடைந்தது. என்னதான் மனத்திலே புழுக்கம் குமைந்து கொண்டிருந்தாலும் அவையில் கூடியிருந்தவர்களால் கிருஷ்ணப்பாவின் திறம் மிக்க செயலை வியந்து பாராட்டாமலிருக்க முடியவில்லை. உணர்ச்சியை அடக்கமாட்டாமல் சிரக்கம்பம் செய்தார்கள்; 'ஆகா! பேஷ்! பலே!' என்று ஆர்ப்பரித்தார்கள். அங்கங்கே கரகோஷமும் செய்தார்கள். சவால் விடுத்த கலைஞர் சிரத்தைத் தாழ்த்திக் கொண்டார்.

சேஷண்ணுவுக்கு அப்பொழுது ஏற்பட்ட அகமகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உள்ளமும் உடலும் உணர்ச்சி வசமாகக் கண்கள் பாஷ்பம் சொரிய இருப்பிடம் விட்டெழுந்து தம் மாணவரை ஆரத் தழுவிக் கொண்டார்.

"அப்பனே! நீ உண்மையிலேயே மகா வித்துவான் தான்; மைசூர்ச் சமஸ்தானத்தின் 'கான கேசரி' தான். உன் திறனை நான் முன்பே அறிந்தவன்தான். புதிதாகப் பரிசீலனை செய்து அறிய வேண்டிய அவசியம் என் வரையில் சிறிதும் இல்லை. அசூயை நிறைந்த உலகம் உன் புகழைக் கண்டு பொருமி மனம் போனபடி இழித்துப் பேசுவதை என்னல் சகிக்க முடியவில்லை. ஆகவே நாலுபேர் அறிய உன் ஆற்றலை வெளிப்படுத்தவேண்டும்; வம்பு பேசும் வாய்களுக்குப் பூட்டிட வேண்டும் என்கிற நோக்கத்துடனேதான் இப்படி ஒரு சபையைக் கூட்டி உன்னைப்

பாடச் செய்தேன். கடவுள் அருளால் நீ மேலும் மேலும் சிறப்பான பல புகழ் மாலைகளைப் பூண்டு நீடூழி காலம் நல்வாழ்வு வாழ்வாயாக!" என்று வாழ்த்தினர்.

அவர் பேசிக் கொண்டிருக்கையில் அவையில் கலைசல் ஏற்பட்டது. தென்னாட்டு வித்துவானுடன் சிலர் வெளியேறி இருந்தனர்.

குருவின் பாராட்டுரைகளைக் கேட்டபோது மாணவரின் உள்ளம் பின் வருமாறு எண்ணமிட்டது:

'....அப்பா, அரிச்சந்திரா, உன்னுடைய நேர்மையும் வாய்மையும் நான் அறியாதவையா? அல்லது என் போன்ற ரிஷிகளும்தேவர்களும் கடவுளர்களுந்தான் அறியாதனவா? உன்னுடைய சக்தியங் தவறாத தகைமையை நாங்கள் மட்டுமே அறிந்தால் போதுமா? பூவுலகம் முற்றும் அறிந்து புகழவேண்டாமா? மற்ற மானிடர்களும் உன்போல் சத்திய நெறியிலே நிற்கப் பழக வேண்டாமா? வானுள்ளளவும் கடல் நீருள்ளளவும் உன் கீர்த்தி பிரகாசிக்க வேண்டாமா? அதற்காகத்தான் உன்னை வன்மையாகச் சோதித்தேன். நீ என் கொடிய சோதனைக் கடலில் சளைக்காமல் நீந்திக் கரையேறிவிட்டாய். நீயே சத்தியசந்தன்!'

இப்படி விசுவாமித்திரர் சுடலையில் அரிச்சந்திரனிடம் கூறியது நினைவில் வந்தது. நாடக மண்டலியில் நடைபெறும் அரிச்சந்திர நாடகங்களில் அவர் பலமுறை கண்டு கண்ணீர் உகுத்த காட்சி அல்லவா அது? அதனல் உடனே பளிச் சென்று அந்த நினைவு வந்தது. 'அது நாடகம்; இது உண்மை நிகழ்ச்சி' என்று மனசில் எண்ணிக் கொண்டார். குருவின் மெய்யன்பை எண்ணிப் புளகாங்கிதமுற்று அவருக்கு அஞ்சலி செய்தார்.

# 21. எதிர்ப்பு ஒழிந்தது!

(1905)

சேஷண்ணு வீட்டிலே நிகழ்ந்த சம்பவம் தமிழ்நாட்டு வித்துவானின் உள்ளத்திலே கனிந்து கொண்டிருந்த பொருமைத் தீயைப் பகைமையாகக் கொழுந்து விட்டு எரியச் செய்தது. இருப்பிடம் சேர்ந்தவுடன் அவர் கிருஷ்ணப்பாவுக்குக் கடிதம் எழுதினுர். அதில் விசேஷமாகக் குறிப்பிடக் கூடியது ஒன்றும் இல்லை. '....நீர் வித்துவான் அல்ல; உமக்குக் கிடைத்து வரும் புகழ் தகாதது; உம்மை அடைந்துள்ள பட்டங்கள் உமக்குப் பொருத்தம் அற்றவை. நீர் வித்துவத் சபை நடுவே பாட வேண்டும்....' —திரும்பத் திரும்ப இதுவேதான். கிருஷ்ணப்பா மரியாதையை உத்தேசித்துத் தவருமல் பதில் எழுதி வந்தார்.

வம்பு வழக்குகளிலே மிகுந்த ருசி உடைய ஒருவர் தென்னுட்டில் அந்த நாளில் வாழ்ந்து வந்தார். அவரை ரசிகர் என்ருே, வித்துவான் என்ருே, சங்கீத ஆராய்ச்சியாளர் என்ருே பிரித்துக் கூற முடியாது. 'கிரிட்டிக்' என்று வழங்கப் பெறும் சொல்லால் அவரை அழைப்பது ஒருவாறு பொருந்தலாம்.

அவர் கருத்திலே நல்லது தென்படுவதே இல்லை. நல்லதில் குறை இடைப்பட்டால் அதுதான் மலையாக உருவெடுக்கும். அவரை அறிந்தவர்கள் இன்று கதை கதையாகப் பேசுகிருர்கள்.

மகா வைத்தியநாதசிவன் அவர்களைக் காணவென்று வித்துவான்கள் வருவார்கள். சிவன் வீட்டுத் திண்ணையிலே அமர்ந்திருக்கும் கிரிட்டிக் சரளி வரிசை பாடும்படி வந்தவ

ரைக் கேட்பார். 'சிறந்த வித்துவானுகிய நம்மை இவர் சரளி வரிசை பாடச் சொல்கிருரே; அரைப் பைத்தியமோ' என்று வந்தவர் யோசிக்கையில், "சரளி பாடத் தியங்குகிற பேர்வழிக்கு எங்கள் சிவனிடம் என்ன வேலே? போய் வாரும்" என்பார் அந்தக் கிரிட்டிக்.

உற்சவங்கள், வேறு வைபவங்கள் நடைபெறும் இடங்களுக்கு இந்தக் கிரிட்டிக் செல்வார். பாடினவர்கள் பாட்டிலே குறை கண்டு பிடித்து இவர் அலசுகிற அலசலில் பிறகு பாட இருப்பவர்கள் சொல்லாமல் கொள்ளாமல் நழுவி விடுவார்கள். கோணல் கேள்விகளைக் கேட்டு வித்து வான்களை இடறி விழச் செய்து அந்த நிகழ்ச்சியைத் துண்டுப் பிரசுரங்களில் வெளியிடுவார். இவர் வருகிற இடங்களில் இசைக் கச்சேரி அமைதியாக நடைபெறுவதே இல்லை என்பர்.

ஓரிடத்தில் ஒரு வைபவத்தை முன்னிட்டு வித்துவான் கள் குழுமியிருந்தால் அந்த இடத்தை நோக்கி இந்தக் கிரிட்டிக் வந்துகொண்டிருக்கிருர் என்று புரளி ஏற்பட் டாலே போதும்; வேறு வழியாக எல்லாரும் பிரயாணப் பட்டு விடுவார்கள்.

ஆயிரம் ரூபாய் கொண்ட பொற்கிழி ஒன்றை அமைத் துக் கட்டுக் காவல் எல்லாம் ஏற்படுத்துவார். "நான் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் தருபவர் இந்தப் பொற்கிழியைக் கைப்பற்றலாம்" என்று பிரகடனம் செய் வார்.

அரைகுறை யோக்கியதை உடையவர்கள் அவரைக் கண்டு அஞ்சுவர்; பூரண யோக்கியதை உடையவர்கள் அவரை அலட்சியம் செய்துவிடுவார்கள். ஆக யாருமே அந்தப் பொற் கிழிக்கு முயலாது போகவே, 'தற்போது

நிறைந்த யோக்கியதை உடையவர் எவருமே இசை உலகில் இல்லை' என்று பறை சாற்றுவார்.

யாராவது யாருக்காவது ஏதாவது சிறப்புப் பட்டம் தந்தால் இரு சாராரிடமும் சென்று, 'பட்டம் அளிக்க உனக்கென்ன தகுதி?' என்றும், 'பட்டம் பெற உனக்கென்ன தகுதி?' என்றும் கேட்டு வம்பு செய்வார்.

அவர் பணக்காரர் அல்லர். ஆனால் மேலே குறிப்பிட்ட அம்சங்களுக்காகக் கூசாமல் செலவிடுவார். இதற்கெல்லாம் மூலதனம், அவருடைய பொல்லாப்புக்கு அஞ்சிச் செல்வர்களும் மடாதிபதிகளும் அவ்வப்போது அளிக்கும் பொருள்தான்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் கிருஷ்ணப்பா காயக சிகாமணிப் பட்டம் பெற்று ஊர் திரும்பினதும் அந்தச் செய்தியை அறிந்த இந்தக் கிரிட்டிக் உடனே மடத்திற்குச் சென்றார். இவரை நன்கு அறிந்திருந்த தேசிகர் வரவேற்றுச் சுமுகமாகப் பேசினார்.

"மைசூரிலிருந்து வந்திருந்த வித்துவானுக்குச் சந்நிதானத்தில் காயகசிகாமணிப் பட்டம் அளித்ததாகக் கேள்விப்பட்டேன். உண்மைதானா?" என்று கேட்டார் கிரிட்டிக்.

"உண்மைதான்" என்றார் தேசிகர்.

"அது அவ்வளவு சரியில்லை என்பது என் அபிப்பிராயம்."

"ஏன்?"

"அவரிடம் எந்தச் சிறப்பைக் கண்டு பட்டம் அளித்தீர்கள்?"

"நன்றாகப் பாடினார்."

"அது போதுமா? பட்டம் பெறத் தக்க சங்கீதம் எவ்வளவோ சிறப்பாக, லட்சண லட்சியங்கள் நிறைந்த தாக இருக்க வேண்டும். அதை அறிந்தல்லவா பட்டந் தர வேண்டும்?"

"கவனியுங்கள். உங்களை இவ்விடம் நன்றாக அறியும். நம் மனத்திற்குத் திருப்தி ஏற்பட்டது; பட்டம் அளித்தோம். உங்களுக்கு விருப்பம் இல்லாவிடில் நீங்கள் அந்தப் பட்டத்தோடு அவரை அழைக்க வேண்டாம்."—

இப்படிக் கூறிவிட்டுத் தேசிகர் ஆசனத்திலிருந்து எழுந்து உள்ளே சென்றுவிட்டார். கிரிட்டிக்கின் உள்ளம் புழுங்கிற்று. அதே வேகத்துடன் கிருஷ்ணப்பாவைத் தாக்க முற்பட்டார். அதன் விளைவுதான் மைசூரில் வீணை சேஷண்ணா வீட்டில் நிகழ்ந்த சம்பவம். அதிலே அவர் முயற்சி தோற்றது.

அவர் அந்த அளவிலும் தம் முயற்சியை நிறுத்திக் கொள்ளவில்லை. திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் மைசூர்க் கிருஷ்ணப்பாவுக்குப் பட்டம் அளித்தது தவறு என்று சென்ற இடங்களில் எல்லாம் பிரசாரம் செய்துகொண்டிருந்தார். இது தேசிகருக்கும் தெரிய வந்தது.

திருவிடமருதூரில் உற்சவம். திருக்கல்யாண விழாவை ஒட்டி மைசூர்க் கிருஷ்ணப்பாவை வரவழைத்து இரண்டு நாள் தொடர்ந்து அவரைக் கச்சேரி செய்ய வைத்தார் தேசிகர். மகாலிங்க சுவாமி சந்நிதியில் நடைபெற்ற அந்தக் கச்சேரிகளில் இரண்டாவது நாளன்று முக்கியஸ்தர்கள் மூலம் கிருஷ்ணப்பாவைப் பாராட்டச் செய்தார். அந்த இடத்திலும் அந்தக் கிரிட்டிக் இருந்தார். ஆனல் அப்போது அவர் வாய் திறக்கவில்லை.

பின்னர்க் கிருஷ்ணப்பாவுக்குத் தமிழ் நாட்டிலிருந்து காரசாரமான கடிதம் வந்தபோது அதற்கு அவர் தந்த பதிலில் மேற்கூறிய விவரங்களை யெல்லாம் குறிப்பிட்டுச் சவுக்கடிகள் கொடுத்திருந்தார். அந்த அளவில் கிரிட்டிக் அடங்கினார்; ஆனால் அவருடைய பொறுமைத் தீ மட்டும் அவியவில்லை!

## 22. அரிய நட்பு

(1905)

கிருஷ்ணப்பாவுக்கு நஞ்சுண்ட ராவ், திம்மையா முதலிய பிரமுகர்கள் சிறந்த நண்பர்களாகவும் சீரிய போஷகர்களாகவும் விளங்கி வந்தார்கள். அவர்கள் தவிரச் சம நிலையில் குறிப்பிடக்கூடிய மற்றும் பல நண்பர்களும் இருந்தார்கள். அவர்களில **தேசிகாசாரி** என்பவர் உயிர்த் தோழர்.

இவர்கள் எல்லாரும் கிருஷ்ணப்பாவிடம் அடிநாளிலிருந்து அன்பு பூண்டு ஒழுகுபவர்கள். கிருஷ்ணப்பா இசையிலும் இறை பணியிலும் சிறந்து விளங்கத் தொடங்கியபின் அவரை அணுகி நட்புப் பூண்டவர்கள் மிகப் பலர். அவர்களில் உளங் கலந்த நண்பர் **ராகவேந்திர ராவ்** என்பவர்.

அவர் எக்ஸ்சேஞ்சு இலாகா சூப்பரின்டென்டெண்டாகப் பணியாற்றி வந்தார். இயல்பாகவே தெய்வ பக்தி மிக உடையவர். லளித கலைகளில் - குறிப்பாக நல்லிசையில்- ஆர்வம் நிரம்பியவர். சாத்துவிகமான போக்கு உடையவர். வாழ்க்கையில் ஒட்டியும் ஒட்டாமலும் நடந்துகொள்ளும் ஆற்றல் கைவரப் பெற்றவர்.

கிருஷ்ணப்பாவின் இசையும் பக்தியும் ஏனைய செயல்களும் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. வலுவில் அவர் வீடு தேடிச் சென்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு தம் நட்பை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினார். இருவரும் உளம் ஒன்றிப் பழகி வரலாயினர். ராகவேந்திர ராவ் குறிப்பறிந்து பல நன்மைகளைத் தாமாகவே கிருஷ்ணப்பாவுக்குப் புரிந்து வந்தார். தம் அலுவல் நேரம் போக மீதிப்போதெல்லாம் கிருஷ்ணப்பாவுடன் கழிப்பதிலேயே இன்பங் கண்டார். அலுவல் நேரத்திலும் அவர் நினைவாகவே இருந்தார்.

வாய்ப்பாட்டுத் துறையிலும் நடிப்புத் துறையிலும் கிருஷ்ணப்பா நல்ல தேர்ச்சியை அடைந்தும், செழிப்பான வருவாய் வந்தும் அவர் எப்பொழுது பார்த்தாலும் ஒரு மாணவனைப் போலச் சுறுசுறுப்பாக ஏதாவது காரியங்களில் ஈடுபட்டு உழைத்தபடி இருந்தார். முக்கியமாக எப்பொழுதும் சங்கீத சாதகஞ் செய்தபடி இருந்தார். ஓயாமல் பாடிப் பாடி ரத்தங் கக்குவார். அங்கிலைகளிலெல்லாம் ராகவேந்திரராவ் கூடவே இருப்பார். அதனால் கிருஷ்ணப்பாவின் சிறப்புகளை அணு அணுவாக அவரால் உணர முடிந்தது. இதனால் கிருஷ்ணப்பா ஒரு தெய்வப் பிறவி என்ற அசைக்க முடியாத அபிப்பிராயம் அவர் உள்ளத்தில் நிலைத்துவிட்டது.

## 23. சிஷ்ய பரம்பரை

(1905)

கிருஷ்ணப்பாவின் புகழ் எங்கும் சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கினதும் அவரிடம் இசை பயிலும் ஆர்வத்துடன் ஆண், பெண் பலர் அவரிடம் வந்து சேர்ந்தனர்.

'பட்டாரே பாடறிவார்' என்கிற பழமொழிப்படி அடி நாளில் பொருளுக்காகவும் இசைக்காகவும் நிரம்பப் பாடு பட்ட கிருஷ்ணப்பா எந்த மாணவ மாணவியரையும் புறக் கணிக்காமல் ஏற்றுக்கொண்டார். சாதியிலோ, பொருளா தார நிலையிலோ ஏற்றத் தாழ்வு பார்க்கவில்லை. ஏற்றுக் கொண்ட பின் போதிப்பதிலும் சிறிதும் பாரபட்சம் கிடை யாது. எல்லோரையும் சமமாகவே பாவித்து அக்கறை யோடு போதித்து வந்தார்.

அவருக்கு வைத்தியத் துறையிலும் நல்ல பரிசயம் ஏற்பட்டிருந்ததால் மாணவ மாணவிகள் யாருக்காவது ஏதா வது சுகக்கேடு நேர்ந்தால் தாமே தம் கைப்பட மருந்து கொடுப்பார்; வெந்நீர் அளிப்பார்; கஷாயம் போட்டுத் தருவார்; ஒத்தடம் கொடுத்தல் முதலிய பணிவிடையெல் லாம் செய்வார். அவசியமான போது அவர்களுக்காகப் பொருளும் செலவிடுவார். அனைவரையும் பெற்ற மக்களைப் போல் அன்போடு போஷித்துப் போதித்து வந்தார்.

ஆனல் மாணவ மாணவிகளில் அவருடைய அன்புக்கு ஏற்ற வகையில் நடந்துகொண்டவர் வெகு சிலர்; நயவஞ்சக மாகவும் குருத் துரோகமாகவும் நடந்துகொண்டவர் பலர்.

சிறந்த முறையிலே குருகுல வாசம் செய்த ஒரு சிலர்: பி. ராசப்பா, தொட்டராமு, நாரணப்பா, ராமையா, நாராயணசாமி, தபலா நஞ்சப்பா, சிவப்பா, வேங்கடாசலையா—இவர்கள் முதல் வரிசையைச் சார்ந் தவர்கள்.

இரண்டாவது வரிசை: டி. சௌடையா, ஆர். ஆர். கேசவமூர்த்தி, குரு ராஜப்பா, பி. தேவேந்திரப்பா, சீதாராம், மிருதங்கம் புட்டசாமி ஐயா ஆகியோர்.

மாணவிகள்: நீலம்மா, சாரதம்மா, சந்திரம்மா, கோலார் நாகரத்தினம்மாள், பங்களூர் நாகரத்தினம் மாள், பல்லாரி கிருஷ்ணம்மா—ஆகியோர்.

சி. நரசிம்மையா, ஆர். அனந்த கிருஷ்ண சர்மா, ரங்கசாமி ஐயங்கார்—இவர்கள் பிரபல வழக்கறிஞர்கள். இவர்களுக்கு முன்னும் பின்னுமாக இன்னும் எத்தனையோ பேர்கள் சீடர்களாக இருந்தனர்.

சௌடையா கிருஷ்ணப்பாவிடம் மாணாக்கராக வந்து சேர்ந்தது 1910-இல். ஆடி அமாவாசை நிறைந்த நாளில் பாடம் ஆரம்பமாயிற்று.

சௌடையாவுக்குத் தாய்மாமன்மார் இருவர்: ஒருவர் பெயர் சௌடையா, மற்றவர் பெயர் சுப்பண்ணா. முதல்வர் சப்-ஓவர்சியர்; மற்றவர் இசை வல்லுநர். அவரிடம் சௌடையா ஆரம்பப் பயிற்சி பெற்றிருந்தார். ஆனால் சௌடையாவின் தமையனாருக்குத் தம்பி இசை பயில்வதில் சிறிதும் விருப்பம் இல்லை. "இவனுக்குச் சங்கீதம் வராது; இது வீண் பிரயாசை" என்று குறுக்கே நின்று தடுத்தார்.

வியாசராய மடத்தைச் சார்ந்த அகோபிலாசார் என்ற பெரியவர் ஒருவர் இருந்தார். ஆறு சாத்திரங்களும் அறிந்தவர். சோதிடக் கலையிலே சிறந்த பாண்டித்தியம் உடையவர். அவரும் சௌடையாவுக்குச் சங்கீதம் வராது என்றார்.

இத்தனை தடைகள் இருந்தும் சுப்பண்ணா தம்மால் இயன்ற அளவு போதித்து வந்தார். மற்றொரு மாமாவாகிய சௌடையா கிருஷ்ணப்பாவிடம் கொண்டு சேர்த்துப் பாடத்தை ஆரம்பித்து வைத்தார்.

கிருஷ்ணப்பா வாய்ப் பாட்டு வித்துவான் மட்டும் அல்லர்; சிறந்த வயலின் வித்துவானும் ஆவார். இசைத்

துறையில் ஈடுபட்டவர்களில் பலருக்கு வாய்ப் பாட்டு, வாத்தியங்கள் அனைத்திலும் ஞானம் இருப்பது இயல்பு. சிலர் சிலவற்றில் ஓரளவு தேர்ச்சியுடையவர்களாய் இருப்பர். ஏதாவது ஒரு துறையிலே மட்டுந்தான் சிறந்தவராக இருப்பர். கிருஷ்ணப்பா அப்படி அல்ல. அவர் வயலின் வாத்தியத்தில் ஒரு கன வித்துவான். அவர் அந்தப் பெருமையை அடைந்ததற்கு மூல காரணமா யிருந்தவர் திருக்கோடி காவல் கிருஷ்ணையர் தாம்.

கிருஷ்ணப்பா தம் சிறு பிராயததில் - குருகுல வாச காலத்திலும் பிறகும் - வயலின் வாத்தியத்தைச் சாதாரணமாகப் பழகியிருந்தார். தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின் போது தான் அந்த வாத்தியத்தில் அவருக்கு அளவுகடந்த பிடிப்பு ஏற்பட்டது. அன்று திருவாவடுதுறை மடத்திலே அவர் கச்சேரியிலே கேதார கௌள ராகத்தையும் விரிபோணி வர்ணத்தையும் மற்றும் ஸ்வரப் பிரஸ்தாரங்களையும் கிருஷ்ணையர் வாசித்த அழகையும், அவர் கைகள் ஓடின லாகவத்தையும், அந்த வாத்தியத்திலிருந்து எழுந்த இனிய நாதத்தையும் கமகங்களையும் குழைவுகளையும் அவற்றைக் கண்டு தாம் அடைந்த பிரமிப்பையும், அங்கே பெற்ற பெருமையையும் அவரால் ஒரு கணங்கூட மறந்திருக்க முடியவில்லை. ஊர் திரும்பியதுதான் தாமதம்; எத்தனையோ முக்கிய காரியங்களை ஒதுக்கி வைத்துவிட்டு வயலினைச் சாதகஞ் செய்யலானார். முறையாகச் சாதகஞ் செய்து செய்து வெகு சீக்கிரத்திலேயே ஞானவான்கள் கொண்டாடுகிற வயலின் வித்துவான் ஆனார்.

சௌடையாவுக்குச் சாரீர வசதி இல்லை. கிருஷ்ணப்பா அவருக்கு வயலின் பயிற்றுவிக்கலானார். அதே மாதிரி வயலின் பயிற்சி பெற்றவர் குரு ராஜப்பா.

கிருஷ்ணப்பா மிக அன்போடு போதித்தார்; சௌடையா மிக அக்கறையோடு பயின்றார். பத்து மாதத்திற்குள் தீர்மானமான ஸ்வர ஞானம் பெற்று விதரணையுடன் வாசிக்கலானார் சௌடையா. அதைக் கண்ட அகோபிலாசார் தம்மிடமிருந்த சோதிட நூல்களை நதியிலே விடுத்தார்!

கிருஷ்ணப்பாவிடம் அமர்ந்த போது சௌடையாவின் வயது பதினான்கு. ஏழு ஆண்டுகள் குருகுல வாசம் தொடர்ந்து நடந்தது. குருவின் இருதய பூர்வமான அன்பு, ஆசி, போதனை ஆகியவற்றாலும் மாணாக்கனின் குருபக்தி, அக்கறை, மதி நுட்பம், சலியாத உழைப்பு இவற்றாலும் கருதிய செயல் பிரமாதமான பரிமளிப்பைப் பெற்றது. இருபத்தொன்றாவது பிராயத்தில் சௌடையா சிறந்த வயலின் வித்துவானாகத் திகழலானார். கிருஷ்ணப்பாவின் உள்ளம் பூரிப்புப் பெற்றது. ஆனால் அதை அவர் வெளிப்படையாகக் காட்டிக் கொள்வதில்லை. மற்றவர்களுக்குச் சௌடையாவின் திறமை பூரணமானதாகப் பட்டாலும், குரு மேலும் மேலும் உயர்வை எதிர்பார்த்தபடியால் லேசில் மாணவனின் வாசிப்பைச் சரி என்று ஆமோதிக்க மாட்டார்.

சௌடையா தலையெடுத்தபின் கிருஷ்ணப்பா தமது கச்சேரிகளுக்கு அவரையே பக்கவாத்தியமாக்கிக் கொண்டார். தம் அநுமதியின்றி வேறு எந்த வித்துவானுக்கும் வாசிக்கக் கூடாது என்று கட்டளையும் இட்டார். அவருக்கு வாசித்தாலே போதும் என்ற அளவுக்குக் குரு நிரம்பக் கச்சேரிகள் செய்து வந்தார். எனினும் சௌடையாவின் வாசிப்புத் திறமையைக் கண்ட பல வித்துவான்களும் ரசிகர்களும் அவரை மற்ற வித்துவான்களுக்கும்

வாசிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். "கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுப்பதானாலும் குருவின் அநுமதியின்றி அவரைத் தவிர வேறு எவருக்கும் வாசிக்க மாட்டேன்" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார் சௌடையா. அவருடைய குரு பக்தியை மெச்சிய ரசிகர்கள் அதிகமாக அவர் வாசிப்பைக் கேட்கும் ஆர்வத்தில் 'ஸோலோ' வாசிக்குமாறு அழைத்தனர். குரு அதை ஆட்சேபிக்கவில்லை.

சௌடையாவின் ஸோலோக் கச்சேரிகள் பல இடங்களில் அடிக்கடி நடைபெறலாயின. சிஷ்யனுடையவும் மற்றவர்களுடையவும் வற்புறுத்தலின் பேரில் கிருஷ்ணப்பா தாமே சில ஸோலோக் கச்சேரிகளுக்குச் சென்று முன்னணியிலே அமர்ந்து, மாணுக்கனின் வாசிப்புத் திறமையை அநுபவிப்பார். 'பயல் வெகு சூரன்! என்னமாய்த்தான் வாசிக்கிறுன்!' என்று தமக்குள் எண்ணி எண்ணி மகிழ்வார்.

1926-இல் தாராகாடு என்கிற ஊரில் சிவராமையர் அண்டு ஸன்ஸ் என்ற பெயரில் மர வியாபாரம் செய்து கொண்டிருந்த பிரமுகர் வீட்டிலே திருமண வைபவம். அவர் இசைக் கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார். முதல் நாள் செம்பை வைத்தியநாத பாகவதர் அவர்கள் கச்சேரி. மறுநாள் கிருஷ்ணப்பாவின் கச்சேரி. பக்க வாத்திய கோஷ்டியுடன் முதல் நாளே அங்கு சென்றிருந்த கிருஷ்ணப்பா செம்பை பாகவதர் கச்சேரியைக் கேட்டார். முதலில் 'வாதாபி கணபதிம்', பிறகு 'ரகுவர நன்னு'— இப்படி வரிசையாகப் பாகவதர் பாடப் பாட வியப்பே வடிவாகச் சிலைபோலச் சமைந்து போனுர் கிருஷ்ணப்பா. 'பரிமள ரங்கபதே' என்று பாகவதர் பாட ஆரம்பித்த போது வியப்பின் எல்லையைக் கடந்து விட்டார். "ஆகா! ஆகா! அற்புதம்! அற்புதம்!" என்று தம்மை மறந்து ஆர்ப்

பரித்தார். அருகே இருந்த சௌடையாவிடம், "என்ன சாரீரமடா இது! இந்தப் பாட்டைக் கேட்டபின் நாளைக்கு நாம் இந்த இடத்திலே எப்படிப் பாடுவது என்று தயக்கமாக இருக்கிறதே! நாளை இவரும் இங்கே இருப்பாரே!" என்றார். கச்சேரி முடிவடைந்தபின் செம்பை பாகவதரை அருகே அழைத்து மனமார, வாயார வாழ்த்தினார்.

"சௌடையா, என்னைத் தவிர இன்னும் சிலருக்கு மட்டும் உன்னை வாசிக்கச் சொல்லலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அந்தச் சிலரில் இவர்தாம் முதல்வர். இனி நீ இவர் கச்சேரிகளுக்கு வாசிக்கலாம்!" என்றார்.

1928-இல்தான் சௌடையா செம்பை பாகவதருக்கு முதல் முதலாகப் பக்கவாத்தியம் வாசிக்க ஆரம்பித்தார். குரு அநுமதித்த வேளை சிஷ்யருக்கு அதியோக வேளை என்று சொல்லவேண்டும். அப்போது செம்பை பாகவதர் தலைக் கிளம்பி எங்கும் வெற்றிக்கொடி நாட்டிவந்த காலம். அன்று முதல் அவருடைய முழு ஆதரவும் சௌடையாவுக்கேதான். அந்த நாளில் சௌடையா இல்லாமல் செம்பை பாகவதர் கச்சேரி இல்லை!

செம்பை பாகவதரின் கச்சேரியைக் கேட்டு அவர் சாரீர மேன்மையைக் கிருஷ்ணப்பா அநுபவித்து வியந்த மறுநாள் கிருஷ்ணப்பா செய்த கச்சேரியைச் செம்பை பாகவதர் கேட்டார். அதைப்பற்றி, அவரைப்பற்றி அவர் காலமான பின்பு இன்றும் பாகவதர் பசுமை நினைவோடு பேசுகிறார்:

"அன்றைய அவர் கச்சேரியை இன்றளவும் என்னால் மறக்க முடியவில்லை. 'நீவே பாலிஞ்சரா' என்ற கிருதியை அவர் இருதயபூர்வமாக, மனமுருகப் பாடினபோது ஸ்ரீ ராமசந்திரமூர்த்தி அங்கே பிரசன்னமானாலும் வியப்

பதற்கில்லை என்று சொல்லும்படியாகத்தான் இருந்தது. அவருடைய கானம் வெறும் விவகார பூர்வமான, ஓசை நயம் மட்டுமே உடைய பாட்டாக இல்லை. பக்தி கான மாகப் பிரவகித்தது. சங்கீதத்தின் ஜீவநிலை பக்திதான். அவரிடம் அன்று நான் அதைக் கண்டேன். சங்கீதத் தொழிலாளியாக அவரை என் உள்ளம் கருதவில்லை; புராணங்களும் சரித்திரங்களும் கூறும் பக்திமான்களில் ஒருவராகத்தான் மதிப்பிட்டது. இசைக் கலைக்காக அவர் பட்ட பாட்டை வேறு எவராவது பட்டிருப்பாரா என்பது சந்தேகந்தான். அவர் பாடுபட்டு முன்னுக்கு வந்து பிரகாசித்த உத்தம காயக ரத்தினம்!”

கிருஷ்ணப்பா மதித்துத் தம் சிஷ்யனை வாசிக்க அநு மதித்த மற்றொரு வித்துவான் அரியக்குடி ராமாநுஜ ஐயங்கார் அவர்கள். இவ்விருவருக்கும் அடிக்கடி வாசிக் கும் பேறு சௌடையாவுக்குக் கிடைத்துக்கொண்டே இருந்தது. அந்தச் சமயத்தில் சௌடையாவுக்குப் புகழ் மயம்!

அன்று முதல் இன்று வரை - அறுபத்தொன்றாவது பிராயத்திலும் - குன்றாத புகழுடன் சௌடையா விளங்கி வருவதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். ஆனால் அனைத்திற்கும் மூலம் அவருடைய தூய குரு பக்திதான் என்பதில் தடையே இல்லை.

மிருதங்க வாத்தியம் உள்ள அளவும் பெயர் நிலைத் திருக்கும் அளவுக்குப் புகழ் பெற்று வாழ்ந்தவர்கள் புதுக்கோட்டை மான்பூண்டியா பிள்ளை அவர்களும், அவருடைய சிஷ்யர் புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை அவர்களும். இருவருமே இன்று இல்லை. ஆனால்

புகழ் வானில் சிரஞ்சீவிச் சுடர்களாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

தட்சிணாமூர்த்தி பிள்ளை ஒரு சமயம் வாத்தியத்திற்கு மரம் தேர்ந்தெடுக்க மரவாடிக்குச் சென்றார். கூடவே மிருதங்க வித்துவான் பழனி சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் சென்றார். ஒரு வீதியின் முனைக்கு வந்ததும் தட்சிணாமூர்த்தி பிள்ளை மேல் வஸ்திரத்தை இடையிலே வரிந்து கட்டிக்கொண்டார். பாதரட்சைகளைக் கழற்றிக் கையில் எடுத்துப் பின்புறமாக மறைத்தபடி மெல்ல நடந்தார். சிறிது தூரம் சென்றதும் வீதியின் நடுப் பாகத்திலிருந்து விலகி ஓர் ஓரமாக நடந்தார். கூட வந்தவருக்கு இதெல்லாம் ஏன் என்பது விளங்கவில்லை; கேட்டார். பிள்ளையவர்கள் வாயில் கை புதைத்து ஏதோ அபிநயம் செய்தார். அதுவும் விளங்கவில்லை.

இருவரும் அந்த வீதியைக் கடந்து திரும்பினார்கள். பிள்ளையவர்கள் செருப்புகளைக் கீழே போட்டுவிட்டு அந்த வீதியை நோக்கிச் சிரந் தாழ்த்தி வணங்கினார். பின்னர்ப் பழையபடி அங்கவஸ்திரம், பாதரட்சைகளை அணிந்து நடக்கலானார். அப்போது அவரிடமிருந்து வெளிப்பட்ட நெடுமூச்சு, அவ்வளவு நேரமும் அவர் மூச்சை அடக்கியிருந்தாரோ என்று எண்ணும்படி இருந்தது.

"தம்பி, ஐயா வாழ்ந்தது அந்த வீதியிலேதான். நடு மையத்திலே வருகிறபோது சுட்டிக் காட்டினேனே, அது தான் அவர்கள் வசித்த வீடு. அங்கே வருகிறபோது பேசக்கூட நா எழும்புகிறதில்லை தம்பி!" என்றார்.

தட்சிணாமூர்த்தி பிள்ளை அவர்கள் குருவை மிஞ்சிய வியாபகத்தை அடைந்து அதனாலேயே குருவுக்குக் கீர்த்தியை அளித்துக்கொண்டிருக்கிற காலம். அத்தகைய

சந்தர்ப்பத்திலே கச்சேரியிலே குரு கஞ்சிராவும் மாணுக்கர் மிருதங்கமும் வாசிக்கிறபோது எங்காவது குருவுக்கு அதிருப்தி தோன்றினுல் வாயால் திட்டியபடி கையையும் ஓங்கி விடுவாராம் குரு, அது சபை என்பதையும் மறந்து. சிஷ்யர் தலை வணங்கி வாய் புதைப்பாராம். 'மாமியார் மெச்சின மருமகள் இல்லை; வாத்தியார் மெச்சின மாணுக்கன் இல்லை'. இன்னும் மேன்மை பெற வேண்டும் என்கிற நோக்கத்திலே குருவும் மாமியாரும் கடைசி வரையில் குறை கண்டு திருத்தினுல், மருமகளும் மாணுக்கனும் நிஜ பக்தியோடு அதை ஏற்ருல் நிச்சயமாக நன்மைதான். அப்படி ஏற்க அடிப்படை பக்தி. அதில் நிறைந்தவர், குறைந்தவர் இருவர் நிலையும் செயல் படுகிறபோது பளிச் சென்று தெரிந்து விடுகிறது.

ராம மந்திரத்தில் கிருஷ்ணப்பாவின் கச்சேரி. அதற்குச் சௌடையா வயலின். இயன்ற வரையில் அவர் நன்ருகவேதான் வாசித்து வந்தார். எங்கோ ஓரிடத்தில் ஏதோ சிறு பிழை. கிருஷ்ணப்பா கவனித்தார். கோபத்தால் விழிகள் சிவக்கச் சற்றும் தயை தாட்சிண்ணியமின்றி, அது பெரிய சபை என்பதையும் மறந்து பளார் என்று சௌடையாவின் கன்னத்திலே அறைந்துவிட்டார்!

சௌடையா தலை குனிந்தார். சற்றுப் பொறுத்து நிமிர்ந்த அவர் முகத்திலே எப்போதும் உள்ள மலர்ச்சி, கண்களிலே கவர்ச்சி நிறைந்த ஒளி, இதழ்களிலே சாந்தமான இளநகை—ஆகியவைதாம் தென்பட்டன. அவர் அந்நிகழ்ச்சியை உடனே மறந்துவிட்டார்; ஆனுல் அவர் குருவின் மகாப் பிரசாதம் என்று ஏற்ற அறை வெகு நேரமாகியும் அவருடைய அழகிய கன்னத்தைவிட்டு மறையவில்லை. கிருஷ்ணப்பாவின் கண்கள் அடிக்கடி அந்த விரல்

களின் தழும்பை நோக்கின. நெஞ்சில் உறுத்தல் இருந்து கொண்டே இருந்தது.

கச்சேரி முடிந்தது. தனிமையில் கிருஷ்ணப்பா சௌடையாவை அன்புக் குரலில் அழைத்தார். அரை நிமிஷம் வாத்ஸல்யத்தோடு நோக்கினர்.

"அடி பலமாக விழுந்துவிட்டதா?"

"அப்படி ஒன்றும் இல்லையே."

"பொய். அதோ உன் கன்னம் சொல்கிறதே!"

"எல்லாம் நான் நன்றாயிருப்பதற்காகத்தானே?"

"வாஸ்தவம். உன்னை இம்சிக்க வேண்டுமென்றோ, உன் மனசைப் புண்படுத்த வேண்டுமென்றோ, பலர் முன்பாக உன்னைச் சின்னத்தனப்படுத்த எண்ணியோ செய்ததில்லை. அபஸ்வரம் என் விரோதி. அதை என்னால் பொறுக்க முடிவதே இல்லை. அந்த ஆத்திரத்தை அடக்க மாட்டாமல் செய்துவிட்டேன். பீரோவில் மருந்து இருக்கிறது. போட்டுக் கொள்."

கிருஷ்ணப்பா பெரும்பாலான பொழுதைத் தம் சிஷ்யர்களிடையேதான் கழிப்பார். பாட போதனை, சாதகம் எல்லாம் ராம மந்திரத்திலேதான். காலை ஐந்து மணி முதல் பகல் பன்னிரண்டு மணி வரை தொடர்ந்து பாடங்கள் நடைபெறும். அதே போல மாலை ஐந்து முதல் இரவு ஒன்பது, பத்து வரை பயிற்சி. "வித்தை என்பது எளிதாகக் கிடைத்துவிடக் கூடியதல்ல; பிராப்தம் எப்படி இருந்தாலும் வித்தையை அப்பியசிக்க முயல்பவர் முழு மனத்தோடு, முழு நேரமும் வேறு நினைவோ, பேச்சோ, செயலோ இன்றித் தவம் செய்தே தீரவேண்டும்" என்று அடிக்கடி தம் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்வார் கிருஷ்ணப்பா. அத்துடன் அடிநாளிலே தாம் அநுபவித்த

துன்பங்களையும் அணு அணுவாக விவரிப்பார். "அப்படியெல்லாம் கஷ்டப்பட்டது, இப்போது கண்ணுக்குத் தெரிகிற பலனைக் கண்டு மனத்தில் கனவாகத் தோன்றுகிறது. நீங்களும் திரிகரணசுத்தியுடன் பாடுபட்டால் பலன் அடையலாம்" என்று கூறி உற்சாக மூட்டுவார்; பொறுப்பை உணர்ந்து பாடுபடச் செய்வார். அவ்வாறு அவர்களை ஆட்கொண்டு முன்னுக்குக் கொண்டு வருவதைத் தமது இன்றியமையாத கடமை என்று அவர் கருதினர்.

மாணவ மாணவிகளுக்குப் போதிப்பது, அவர்கள் சாதகம் செய்யும்போது உடனிருந்து கவனித்துத் திருத்துவது, இவை தவிர, தாம் தமக்காகச் செய்யும் சாதகத்தையுங்கூடக் கிருஷ்ணப்பா ராமமந்திரத்திலேயே, மாணவ மாணவிகள் முன்பாகவே செய்வார். அவ்வாறு செய்வது தம் தகுதிக்குக் குறைவு என்று அவர் எண்ணவில்லை. மாறாக, தம்முடைய சாதகங்கூட மாணவ மாணவியருக்குரிய பாடத்தின் ஓர் அம்சம் என்று பெரும் புத்தியுடன் பாவிப்பார். அந்த நன்னோக்கத்தினலேயே அவர் ஓய்வு நேரம் என்ற பேச்சுக்கே இடமின்றி எப்பொழுது பார்த்தாலும் சாதகம் செய்தபடி இருந்தார்.

கிருஷ்ணப்பா தம் சிஷ்யர்களுக்கு அளித்த மற்றொரு முக்கியமான நன்மை தேகப் பயிற்சி. அடிநாளில் அவர் பெரும் பொழுது அதில் ஈடுபாடு கொண்டவர். பின்னர்க் குருகுல வாச காலத்திலும் அதைத் தொடர்ந்து செய்து வந்தார். சரீர சௌக்கியத்தைப் பொறுத்ததே சாரீர சௌக்கியம் என்பது அவர் கருத்து. இளமை முதல் முதுமை வரையில் தேகப் பயிற்சி செய்யும் பழக்கத்தை அவர் மேற்கொண்டிருந்ததால் தம் சிஷ்யர்களுக்கும் அதன்

மேன்மையை விளக்கித் தினசரி உடற் பயிற்சி செய்வித்தார். தாமே அதையும் முறையாகப் போதித்தார். பின் வாங்கும் சிலரைப் பலவந்தமாக அதில் ஈடுபடுத்திப் பழக்கினர்.

சில சமயங்களில் பாட போதனை இரவு ஒரு மணி, இரண்டு மணி வரையிலே கூடத் தொடருவதுண்டு. சரி வராத இடங்களைத் திரும்பத் திரும்பத் திருத்துவார். அலுப்பே கொள்ள மாட்டார். சிஷ்யர்களால் போடப் பெற்ற அவர் படுக்கை சில நாட்களில் அவர் படுக்காமலே காலையில் சுருட்டி வைக்கப்படுவதும் உண்டு. சில நாள் இரண்டு அல்லது மூன்று மணி அளவில் படுக்கச் செல்வார். பிறகு சிஷ்யர்கள் ஒவ்வொருவராகத் தூங்கச் செல்வர். கடைசியாகச் சௌடையா வயலின் சாதகஞ் செய்து முடித்துவிட்டுப் படுக்கையில் போய்ப் படுத்ததும் கிருஷ்ணப்பா விழித்தெழுந்து சௌடையாவையும் எழுப்பிச் சாதகஞ் செய்யச் சொல்வார். குருகுல வாசஞ் செய்த ஏழு ஆண்டுகளில் தாம் தூங்கின நாள் மிக மிகக் குறைவு என்கிறார் சௌடையா.

## 24. உல்லாச தண்டனை!

**(1907)**

கிருஷ்ணப்பா இசைத் துறையிலும், இறை பணியிலும், நாடகக் கம்பெனி நிர்வாகத்திலும் மேம்பாட்டுடன் விளங்கியதன்றி மைசூர் நகரத்தின் முனிசிபல் கௌன்ஸில் தலைவராகவும் பதவி வகித்துப் பல பொது நலங்களில் ஈடுபாடு கொண்டிருந்தார்.

அவருக்குச் சொக்கட்டான், சீட்டாட்டம் முதலிய பொழுதுபோக்கு விஷயங்களில் விருப்பம் அதிகம். அதில்

சில நிபந்தனைகளை விதித்துக்கொண்டு எல்லோரும் அடங்கி நடக்க வேண்டும் என்ற கொள்கை உடையவர். 'கழுதை ஆட்டம்' போன்ற விளையாட்டுக்களில் தோற்றவர் ஜயித்தவரைப் பணிய வேண்டும் என்பது நிபந்தனை. அப்போது தோற்றவர் சிப்பாய் உடையுடன் காட்சி அளிக்க வேண்டும்; ஜயித்தவருக்கு ராணுவ முறையில் வணக்கஞ் செலுத்த வேண்டும் என்பன நிபந்தனையின் உள்பிரிவுகள். சிப்பாய் வேஷத்திற்குரிய உடைகள் ஆட்டம் நடக்கும் இடத்திலே எப்போதும் தயாராக இருக்கும். அவற்றைத் தயாரித்து ஆட்ட காலத்தில் ஆஜர்ப்படுத்திப் பிறகு பத்திரப்படுத்தி வைக்கும் பொறுப்பைக் கிருஷ்ணப்பாவே ஏற்றுக்கொண்டிருந்தார். அந்தச் செயலில் - விளையாட்டில் - அத்தனை ருசி அவருக்கு!

ஒரு நாள் கிருஷ்ணப்பா தோற்றுப் போனார். நிபந்தனைப்படி அவர் சிப்பாய் வேஷந் தரித்தார். நண்பர்களிடையே சிரிப்பும் கேலிப் பேச்சும் அமளிப்பட்டன. அந்தச் சமயம் பார்த்து அரண்மனைச் சேவகன் அங்கே வந்தான். "மகாராஜா அவர்கள் எங்கோ செல்லப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தங்களை உடனே அழைத்து வரச் சொன்னார்கள். வண்டி வெளியே காத்திருக்கிறது; தாங்கள் உடனே புறப்பட வேண்டும்" என்றான்.

முதலில் அவனுக்குக் கிருஷ்ணப்பாவை அடையாளம் புரியவில்லை. பிறகு விஷயத்தை ஒருவாறு ஊகித்துக் கொண்டான். அவன் அநுபவஸ்தன். அடுத்து நிகழப் போகிற செயலை அறிந்தவன். அதைக் காணும் ஆவலுடன் வாயைக் கையால் மறைத்துச் சிரித்தபடி அவரை உடனழைத்துச் செல்லக் காத்திருப்பவன்போல் நின்றிருந்தான்.

அவன் எதிரில் ராணுவ வணக்கஞ் செலுத்தக் கிருஷ்ணப்பாவுக்கு வெட்கம். ஆகவே, "இதோ, பின்னாலேயே வருகிறேன்; நீ முன்னால் போ" என்று கூறி அவனை அங்கிருந்து அனுப்பிவிட முயன்றார். ஆனால் அந்தக் காட்சியைக் காண ஆவல் மிகக் கொண்டிருந்த சேவகன், "வண்டி காத்திருக்கிறது...." என்று ஏதேதோ சொல்லிக்கொண்டு அங்கேயே நின்றிருந்தான். சேவகனும் கிருஷ்ணப்பாவும் ஒருவரை ஒருவர் வெல்ல முயன்ற செயல் நண்பர்கள் உள்ளத்தில் பெரியதொரு வேடிக்கை உணர்வை உண்டு பண்ணுவதாயிருந்தது.

தப்ப வழி இல்லை என்ற நிலையில் கிருஷ்ணப்பா மாமூலைச் செய்தே தீர்த்தார். நண்பர்கள் கொல்லென்று சிரித்தார்கள். சேவகன் சிரிப்பை அடக்க மாட்டாமல் தவித்தான். கிருஷ்ணப்பாவும் சிரித்துத் தம் வெட்க நிலையைப் போக்கிக் கொண்டார். பின்னர் உடை மாற்றிக்கொண்டு அவனுடன் கிளம்பி அரண்மனைக்குச் சென்றார்.

## 25. கனகாபிஷேகம்

**(1908)**

கிருஷ்ணப்பா நாளுக்கு நாள் சங்கீதத்தில் எப்படி மேம்பாடு அடைந்து வந்தாரோ அதே போல ராம பக்தியிலும், நாத சித்தியிலும் சிறப்பெய்தி வந்தார். தம்மிடம் உள்ள கலையை மேலும் மேலும் விருத்தி செய்துகொள்வதில் அவர் காட்டிய அக்கறை விவரிப்பில் அடங்காதது. அந்த முயற்சியிலே, கானமும் பக்தியும் இணைந்து நாத வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் சில சமயங்களிலே அவர் தம்மை மறந்த சமாதி நிலையை எய்தி விடுவதும் உண்டு.

ஒரு சமயம் உத்தம நண்பர் ராகவேந்திரராவின் விருப்பப்படி பொருக்கான சில பக்திப் பாடல்களை அவர் அற்புதமாகப் பாடிக்கொண்டே வருகையில், ஒரு பாடலை உள்ளம் உருக இழைத்து இழைத்துப் பாடினார். பாடிக் கொண்டே சமாதி நிலையை அடைந்துவிட்டார். சிஷ்யர் தம்பூராவை மீட்டியபடி இருந்தார். எதிரே அமர்ந்திருந்த ராகவேந்திரராவ் கிருஷ்ணப்பாவின் நிலை கண்டு உள்ளமும் உடலும் புளகம் போர்ப்ப, கண்களில் பாஷ்பம் பெருக அசையாமல் அவரையே நோக்கிக்கொண்டிருந்தார். வெகு நேரங் கழித்துக் கிருஷ்ணப்பா கண் திறந்தார்.

மற்றொரு சமயம் ராம மந்திரத்தில் இதே போல நிகழ்ந்தது. அப்போது அந்த மந்திரத்தின் தலைவர் திம்மையா அவர்கள். அவரும் அங்கே இருந்தார். கிருஷ்ணப்பா சமாதி நிலையை அடைந்ததும் திம்மையா அவசர அவசரமாக வெளியே சென்றார். இரண்டு பெரிய பைகளில் வெள்ளிக் காசுகளும், பொற் காசுகளும், ரத்தினங்களும் நிரப்பிக்கொண்டு வந்தார். சமாதி நிலையில் கனகாபிஷேகஞ் செய்தால் செய்கிறவர்களுக்கு மகத்தான புண்ணியம். ஆகவே தருணம் வாய்த்ததும் அவர் கிருஷ்ணப்பாவுக்குச் சமாதி நிலையில் கனகாபிஷேகம் செய்தார். ஆனால்.......

செயலைச் செய்கிறவர்களுக்கு மகத்தான புண்ணியம் என்றால் அதற்குப் பாத்திரம் ஆகிறவருக்கு?

கனகாபிஷேகம் கிருஷ்ணப்பாவின் சமாதி நிலையைக் கலைத்துவிட்டது. அவர் மிகவும் வருத்தப்பட்டார். திம்மையாவை உரிமையோடு கடிந்துகொண்டார்.

"உங்கள் நலனை மட்டும் கருதினீர்களே தவிர, அதனால் ஏற்படும் எதிராளியின் நிலைபற்றி நீங்கள் எண்ணிப்

பார்க்கவே இல்லையே! வருந்தி அழைத்தாலும் வாராத ஒன்று சமாதி நிலை. பூர்வ புண்ணியத்தாலும், கடவுளின் கருணையாலும் எப்பொழுதாவது சித்திக்கிறது அது. மெல்ல மெல்ல மனம் கடவுளிடம் லயிக்கிறபோது சலனப் படுத்தி அதைக் கலைக்கலாமா? இனிமேல்இப்படி எப்போது நேருமோ! அல்லது இனி இப்பிறவி முழுவதிலுமே நேராமலே போய்விடுமோ! யார் கண்டார்? நான் வருந்து கிறேன்" என்றார்.

அவர் எடுத்துக் காட்டிய பிறகே தாம் செய்தது சரியல்ல என்று திம்மையா உணர்ந்தார். தம் செயலுக்கு வருந்தி மன்னிப்புக் கோரினர். கனகாபிஷேகப் பொருள் அனைத்தையும் கிருஷ்ணப்பா பிராம்மண விநியோகம் செய்தார்.

அவர் வருத்தமும் கவலையுங் கொண்டதற்கு ஏற்ப அதன் பின்னர்ப் பல காலம் வரை அவருக்குச் சமாதி நிலை சித்திக்கவே இல்லை.

## 26. ராம தூதன்

(1920)

ஒரு முறை ராம மந்திரத்தில் பஜனை நடந்தபோது அங்கே ஒரு குரங்கு வந்தது. சிலர் அதை விரட்ட முயன்றனர். அது போகவில்லை; கல்லையும், கழியையும் வீசியும் அசையவில்லை. யாரையும் ஏதும் உபத்திரவம் செய்யவும் இல்லை. ஆனல் அங்கு அது வந்தது முதல் மக்களிடையே அமைதி சிறிதும் இல்லை.

சந்நிதியில் அமர்ந்து பஜனையில் ஈடுபட்டிருந்த கிருஷ்ணப்பாவுக்கு இந்த விவரம் தெரிந்தது. ஆஞ்சனேயரின் பக்தரான அவர் சட்டென்று எழுந்தார். குரங்கு இருக்

கும் இடத்திற்கு வந்தார். ஏற இறங்கப் பார்த்தார். ராம நாமத்தைக் கேட்கவென்று ஆஞ்சனேயரே நேரிலே வந்திருப்பதுபோல் அவருக்குத் தோன்றிற்று. "யாரும் ஏதும் தொந்தரவு செய்யாதீர்கள்" என்றார்.

பஜனை முடிந்தது. அனைவருக்கும் பிரசாதங்கள் விநியோகம் செய்யப் பெற்றன. கிருஷ்ணப்பா ஒரு தட்டில் பழம், பால், சுண்டல், நீர் முதலியவற்றை எடுத்துக் குரங் கின் முன் வைத்தார். அந்தக் குரங்கு அந்தத் தட்டிலே இருந்த எந்தப் பொருளையும் தொடவில்லை. பூ மாலைக ளிடையே புன்முறுவலுடன் காட்சியளித்துக்கொண்டிருந்த ராமபிரான் பிம்பத்தை நோக்கியபடியே இருந்தது. அதன் செயல் அனைவரையும் வியப்புக்கு உள்ளாக்கிற்று.

ராம மந்திரத்தின் அறைகள் பூட்டப் பெறுவதற்குரிய நேரம் கடந்தும் அந்தக் குரங்கு அசையவே இல்லை. அதன் புதுமைச் செயலில் ஏதோ கருத்து இருக்கிறது என்றெண்ணிக் கிருஷ்ணப்பா அதன் எதிரே கை கட்டி நின்று ஆலோசனையில் ஆழ்ந்திருந்தார்.

திடீரென்று ஆஞ்சனேயரை மனத்தில் நினைத்துக் கரங் குவித்தார். "ஆஞ்சனேய மூர்த்தி! ராமசந்திர பிரபு வுக்குப் பட்டாபிஷேக வைபவம் நடத்த வேண்டும் என்ற எண்ணம் இந்த மந்திர நிர்மாணம் ஆன நாளிலிருந்து என் உள்ளத்தில் இருந்துகொண்டே இருக்கிறது. அது இன்ன மும் நடைபெறாதது ஒரு குறைதான்; என் மனமறிய வேறு ஏதும் குறை இல்லை. பட்டாபிஷேகத்தை விரைவிலேயே நடத்தி வைக்க முயல்கிறேன்" என்றார்.

அவர் வாய்விட்டு இவ்வாறு சொன்ன சில நிமிஷங் களுள் அந்தக் குரங்கு தட்டில் இருந்த ராமப் பிரசாதங் களை சுவீகரித்துக்கொண்டு ஓடிவிட்டது.

## 27. பட்டாபிஷேகம்

**(1923)**

நீண்ட நாட்களுக்குப் பின் கிருஷ்ணப்பா மீண்டும் ஒரு முறை தட்சிண தேசச் சுற்றுப் பிரயாணத்திலே ஈடு பட்டார். இம்முறை ராமபிரானுக்கு மகா பட்டாபிஷேகம் நடத்தப் பொருள் திரட்டும் நோக்கத்துடன் புறப்பட்டார். சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சை, குடந்தை, மன்னார்குடி முதலிய பல இடங்களுக்குச் சென்றார். அப்போது குடந்தையில் வாழ்ந்து வந்த சிறந்த சத் கதா காலட்சேப விற்பன்னர் **திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள்** அவர்களின் பரிசயம் கிருஷ்ணப்பாவுக்குக் கிட்டிற்று.

பெருந்தன்மை நிறைந்த பல வித்துவான்களாலும், செல்வர்களாலும், பொது மக்களாலும் கிருஷ்ணப்பா அன்போடு வரவேற்று ஆதரிக்கப் பெற்றார். ஏராளமான கச்சேரிகள் நடைபெற்றன. பணமும் நிரம்ப வசூலாயிற்று. கிருஷ்ணப்பா பெருமகிழ்ச்சியுடன் மைசூர் திரும்பினார். உடனே ராமபிரானின் மகா பட்டாபிஷேகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

குறிப்பிட்ட நன்னாளில் வைபவம் தொடங்கிற்று. வேத முறைப்படி யாவும் நடைபெற்று வந்தன. பக்தி சிரத்தையுடன் நூற்றெட்டுத் தம்பதி பூஜைக்கு ஏற்பாடாகி யிருந்தது. கை வசமிருந்த பணமெல்லாம் செலவாகி விட்டது. தட்சிணை முதலிய செலவுகள் சுமார் ஐந்நூறு ரூபாய்க்கு மேல் ஆகவேண்டி இருந்தன. உடன் இருந்தவர்கள் எல்லாரும் சக்திக்கு இயன்ற அளவு உதவி விட்டார்கள். மேலும் உதவக்கூடியவர்கள் உண்டு. அவர்கள் அப்போது அருகில் இல்லை. என்ன செய்வது என்று

வகை புரியாமல் தத்தளித்தார் கிருஷ்ணப்பா. அப்போது எழுநூறு ரூபாய் தந்தி மணியார்டர் வந்தது! அனுப்பியவர் ஒரு வியாபாரி; அனுப்பப் பெற்ற இடம் பம்பாய் என்ற அளவுக்குத்தான் விவரம் கிடைத்தது. எல்லாம் ராமபிரான் அருளே என்று கரங் குவித்து அஞ்சலி செய்தார் கிருஷ்ணப்பா.

தம்பதி பூஜை ஆரம்பிக்கிற நேரத்தில் பழுத்த சதி-பதிகள் அங்கே வந்தார்கள். தங்களுக்கு இடம் வேண்டும் என்று கோரினார்கள். போதிய தம்பதிகளை முன்னதாகவே நியமித்துப் பூஜை தொடங்குகிற நேரத்தில் அதில் எப்படி மாறுதல் செய்வது? அவர்களோ விடாமல் வற்புறுத்தினார்கள். கிருஷ்ணப்பா தர்மசங்கடத்தில் சிக்கித் தவித்தார். "ராமா! இது உன் சோதனையா?" என்று மனங் கசிந்து கண்ணீர் உகுத்தார். முடிவில் குண்டப்பா என்பவருக்கு, தம்பதி பூஜையினால் கிடைக்கக்கூடிய வருமானத்தைப் போல் இரு மடங்குப் பொருள் தந்து இசைய வைத்து அவருடைய ஸ்தானத்தில் புதிதாகத் தோன்றிய விருத்த தம்பதிகளை அமர்த்திப் பூஜையைத் தொடங்கினார்.

பூஜை முடிந்தது. ஆராதனை நடந்தது. அவபிருத ஸ்நானம் நடைபெற்றது. மங்கள ஹாரதி எடுத்தார்கள். தம்பதிகளை வரிசைக் கிரமமாகப் பந்தியிலே இருத்திப் பரிமாறலானார்கள்.

கிருஷ்ணப்பா பந்தி விசாரணை செய்துகொண்டே வந்தார். அந்தக் கிழத் தம்பதிகளைப் பந்தியில் காணவில்லை. அவர் திகைத்துப் போனார். அறிவுக் களஞ்சியமாகையால் அதை வெளியிட்டால் பந்தியிலே உணவு கொள்ளும் மற்றவர்கள் மனத்திற்கு ஆயாசமாகுமே; பிராம்மண சந்தர்ப்பணையில் அபசாரம் நேருமே என்று மனசை அடக்கிக் கொண்டார். தாமே வெளிப்புறம் வந்து

தேடினார். ரகசியமாகச் சிலரிடம் விவரங் கூறித் தேடச் செய்தார். கார்கள் பறந்தன. ஊரெங்கும் சல்லடை போட்டுச் சலித்தார்கள். என்ன தேடியும் பயன் இல்லை. 'அவர்கள் விரும்பிக் கேட்டுத் தம்பதி பூஜை பெற்றும் உணவு கொள்ளாது போயினரே!' என்று கிருஷ்ணப்பா வுக்கு ஆயாசம். ஆயினும் அரும்பாடுபட்டு மனசைத் தேற்றிக்கொண்டு மற்றத் தம்பதிகளை உபசரித்து மேல் ஆகவேண்டிய அலுவல்களைக் கவனித்தார்.

எல்லாம் இனிது நிறைவேறின. கிருஷ்ணப்பா அன்று உணவு கொள்ள மறுத்துவிட்டார். அறிவிற் சிறந்த பெரி யோர்கள் பலர் சாஸ்திர சம்மதமான மேற்கோள்களுடன் சமாதானம் கூறினர். அப்படியும் அவர் பகல் உணவை நீக்கி இரவு ராமப் பிரசாதமாகச் சிறிது பாலும் பழமும் மட்டுமே உட்கொண்டார்.

## 28. மாருதியின் அறிவிப்பு!

(1924)

சென்னையில் வசித்து வந்த டாக்டர் ஸ்ரீநிவாச ராகவாசாரியார் அவர்கள் சிறந்த தியாகப் பிரம்ம பக்தர். அவருக்குக் கிருஷ்ணப்பாவிடம் அபார அன்பு. இருவரும் விரைவில் நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். மற்றும் சென்னை நகரில் உள்ள வைசியப் பிரமுகர்களில் பெரும் பாலோர் கிருஷ்ணப்பாவின் தோற்றம், பேச்சு, கானம், பக்தி முதலியவற்றில் லயித்தவர்களாக இருந்தார்கள்.

இவ்வளவெல்லாம் இருந்தும் கிருஷ்ணப்பாவுக்கு இசைக் கச்சேரியைப் பொறுத்தமட்டில் தமிழ் நாட்டிலே பேராதரவு இருந்தது என்று சொல்ல முடியாது. அநேக மாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் தாமாகவே தமிழ்

நாட்டுக்கு வந்து சென்ருர். ஒரு சில சமயங்களில் பிரமுகர்கள் சிலர் கச்சேரியை முன்னிட்டு அவரை வரவழைத்தார்கள். ஒரே ஒரு முறை தொண்டை மண்டல சபையில் கச்சேரி நடைபெற்றது. சென்னையிலே சபைகள் பல இருந்தும் அவரை விரும்பி அழைத்து எந்தச் சபையிலும் கச்சேரி நடத்தி வைக்கவில்லை. விரும்பி அழைக்கா விட்டாலும் அவராக வந்தபோதாவது சபைகள் ஆதரித்திருக்கலாம்; அதுவும் இல்லை.

ஆனல் சபை நிர்வாகிகளை மட்டும் இவ்விஷயத்திலே குறை கூறுவதில் பயன் இல்லை. உள்நாட்டு வித்துவான்களைப் பகைத்துக்கொண்டு அவர்கள் செயலாற்றுவதற்கில்லை. தமிழ் நாட்டு வித்துவான்களில் ஒரு சிலர் கிருஷ்ணப்பாவை மதிக்கவில்லை என்பது மறைக்க முடியாத உண்மை. அவர்களில் ஒரு சிலர் அவரை வெறுத்தார்கள்; தூஷித்தார்கள். ஓரிருவர் போருக்கே அழைத்தார்கள்.

கிருஷ்ணப்பா இவற்றை யெல்லாங் கண்டு ஆயாசமோ மனக்கலக்கமோ ஒருபோதும் கொண்டதே இல்லை. வீணர்களின் பூசல்களில் மனத்தை ஈடுபடுத்துவதில் இருமைக்கும் பயன் இல்லை என்பது அவர் முடிபு.

1924-இல் சென்னைக் காசி செட்டி தெருவிலுள்ள சத்திரத்தில் வைசிய அன்பர்கள் சிலர் கூடிக் கிருஷ்ணப்பாவின் கச்சேரிக்கு ஏற்பாடு செய்தார்கள். அழைப்பின்படி கிருஷ்ணப்பா தம் கோஷ்டியுடன் உரிய காலத்தில் வந்துவிட்டார்.

ஆனல் என்ன காரணத்தாலோ முயற்சி தடைப்பட்டுக் கச்சேரி நின்று போயிற்று. எல்லாம் ஈசன் செயல் என்ற முடிவில் கிருஷ்ணப்பா மைசூர் திரும்ப ஏற்பாடு செய்தார்.

அவர் அவ்விடத்தை விட்டுப் புறப்படுகையில் எங்கிருந்தோ வந்த இரண்டு குரங்குகள் அவரை அணுகி

அவர் ஆடையைப் பற்றி இழுத்தன; போக விடாமல் அவரைத் தடை செய்தன. அவர் அவற்ருேடு வேடிக்கை மொழிகள் பேசினுர். அவற்றின் செயலுக்குப் பொருள் ஏதோ இருக்க வேண்டும் என்று எண்ணினுர். பிரயாணத்தை நிறுத்திவிட்டார்.

சென்னை திருவல்லிக்கேணியில் சங்கீத சபை நடத்தி வந்த வாலாடி சுப்பிரமணிய ஐயர் அவர்களும், வைசியப் பிரமுகர்களும் கூடி அன்றிரவு ஆலோசனை செய்தார்கள்.

என்ன நடந்தது என்ற விவரம் கிருஷ்ணப்பாவுக்குத் தெரியாது; நின்றுபோன கச்சேரி நடைபெறப் போகிறது என்ற செய்தியை மட்டுமே அறிந்தார். அதற்கு மேல் தெரிந்துகொள்ள அவர் ஆசைப்படவில்லை.

கச்சேரி நடந்தது; ஆனுல் காசி செட்டி தெரு சத்திரத்தில் அல்ல; திருவல்லிக்கேணி சங்கீத சபையில். வசூலுக்குக் குறைவில்லை.

குரங்குகளின் சங்கேதத்திற்குப் பொருள் என்ன என்பது இப்போது உடன் இருந்தவர்களுக்கு விளங்கிவிட்டது. "அண்டினவரை ஆதரிக்க ஆஞ்சனேயர் பின் வாங்குவதில்லை. கிருஷ்ணப்பாவுக்கு ஆஞ்சனேயர் அருள் எப்போதும் உண்டு" என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

## 29. "விவகாரம் வேண்டாம்"

(1925)

பங்களூரில் ஒரு பிரமுகர் கிருஷ்ணப்பாவின் கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தார்; அது வசூலை எதிர்பார்த்து நிகழ்த்தப் பெறும் கச்சேரி. பிரமுகர் மிகவும் செட்டான

இயல்பு உடையவர். எந்தக் காரியத்தையும் பன்முறை யோசித்துச் செய்கிறவர். பொது ஜனங்கள் வெகுவாக வற்புறுத்தினதன் பேரில் கிருஷ்ணப்பாவின் கச்சேரிக்கு ஏற்பாடு செய்தவர்.

அங்கே உள்ள சுக்கிரீவன் கோயிலுக்குப் பின்னல் உள்ள வீட்டில் கிருஷ்ணப்பா தம் கோஷ்டியுடன் இறங்கியிருந்தார். விடியற்காலையில் எழுந்து பல் துலக்குகிற போது திடீரென்று அவருக்கு வயிற்று வலி கண்டது. நேரம் செல்லச் செல்ல நோயின் உபாதை அதிகரித்ததே தவிரக் குறையவில்லை. மாலை நாலு மணி ஆகிறபோது புழு வாய்த் துடிக்கலானர். யார் என்ன முயன்றும் பரிகாரம் கிடைக்கவில்லை.

கச்சேரி ஏற்பாடு செய்த பிரமுகர் கிருஷ்ணப்பாவை அழைக்க ஆள் அனுப்பினர். அவர் மூலம் நிலவரத்தை அறிந்து பிரமுகர் கடுங் கோபங் கொண்டார்.

"கச்சேரி ஏற்பாட்டுக்குச் செய்த செலவுகளின் நஷ்டத்தை யார் ஏற்பது? பொது ஜனங்களுக்கு யார் என்ன சமாதானம் சொல்வது? நான் கோர்ட்டில் வழக்குத் தொடருகிறேன்!" என்று இரைச்சல் போட்டார்.

கிருஷ்ணப்பாவின் உடல் நிலையைப் பரிசீலனை செய்த டாக்டர் எழுத்துருவில் அத்தாட்சி அளிக்கச் சித்தமாய் இருந்தார். சூழ இருந்தவர்கள், "வழக்கு நடக்கட்டும்; வித்துவான் காலையிலிருந்து படுகிற அவதியை விளக்கி நாங்கள் சாட்சி சொல்லுகிறோம்" என்றார்கள்.

கிருஷ்ணப்பாவுக்கு அம்மாதிரி விரசமான விவகாரங்களில் எல்லாம் சற்றும் விருப்பம் இல்லை. அவர் தமக்குப் பதிலாகப் பங்களூர்த் தாயியைக் கச்சேரி செய்ய அனுப்பினர். தம் சிஷ்யர்களையே அவருக்குப் பக்க வாத்தி

யங்கள் வாசிக்கச் சொன்னார். சௌடையா வயலின் இசைத்தார்.

கச்சேரி ஆரம்பமாயிற்று. சுக்கிரீவன் கோயில் புறம் இருந்த குரங்குகள் கூட்டமாக அங்கே வந்தன. யாரையும் இடைஞ்சல் செய்யாமல் இருந்துவிட்டுப் போயின.

கச்சேரி சிறப்பாக நடந்தது. ஆயிரம் ரூபாய்க்கு மேல் வசூல் ஆயிற்று.

## 30. நட்பின் பயன்

(1925)

கிருஷ்ணப்பாவின் உள்ளம் இடையறாது தெய்வ நினைப்பிலே ஈடுபட்டிருந்தது. அவருடைய நண்பர் ராகவேந்திரராவும் தம் அலுவல்களை யெல்லாம் முடித்துக் கொண்டு சீக்கிரமாகவே வந்துவிட்டார்.

கிருஷ்ணப்பா பாட அமர்ந்தார். சிஷ்யர் ஒருவர் பின்னே அமர்ந்து தம்பூரா மீட்டலானார். ராகவேந்திராவ் எதிரே உட்கார்ந்து கான ரசத்தைப் பருகத் தொடங்கினார்.

அன்று கிருஷ்ணப்பாவின் கானத்தில் என்றுமில்லாத சிறப்பு மிகுந்திருந்தது; தெய்வ மணம் திகழ்ந்தபடி இருந்தது; இசை நயம் மேம்பட்டு விளங்கிற்று. அவர் தம்மை மறந்து நீண்ட நேரம் பாடினார்; பாடிக்கொண்டே சமாதி நிலையில் ஆழ்ந்துவிட்டார்.

ஏற்கனவே ஒரு முறை சமாதி நிலையில் திம்மையா செய்த தவறு ராகவேந்திராவின் உள்ளத்திலே பதிந்திருந்தது. இப்பொழுது அம்மாதிரி யாரும் தவறு செய்து விடக்கூடாது என்று அவர் கருதினார். சிஷ்யருக்கு ஜாடை மூலம் எச்சரிக்கை செய்தார். கதவுகளை யெல்லாம் சந்தடியின்றி மூடிக்கொண்டு மெல்ல வெளியே சென்றார்.

வெளியிலிருந்த மற்றவர்களுக்கும் எச்சரிக்கை செய்து விட்டுத் தம் வீட்டை நோக்கி நடந்தார்.

வழி நெடுக அவர் மனக் கண்ணெதிரே கிருஷ்ணப்பா சமாதி இருக்கும் கோலமே காட்சியளித்துக் கொண்டிருந்தது. உள்ளம் தெய்வ நினைப்பிலும், தெய்விக கானத்திலுமே லயித்திருந்தது. அவை உள்ளத்தில் ஊன்ற ஊன்ற அவர் உடலில் ஒருவிதச் சோர்வு தோன்றி அதிகரித்துக் கொண்டே போயிற்று. ஒருவாறு சமாளித்துக்கொண்டு தம் வீட்டை அடைந்தார். தெருக் கதவைத் தட்டிவிட்டுக் களைப்பு மேலிடத் திண்ணையில் அமர்ந்தார்.

அவர் மனைவியார் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். ராம மந்திரத்திலிருந்து தாம் வந்த நிலையை அறிவித்து, "கண்கள் இருண்டு நா வறண்டு போகின்றன. குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்றார் ராகவேந்திரராவ்.

அந்த அம்மாள் உள்ளே சென்று தண்ணீருடன் திரும்பி வந்தார்; கணவரின் வெற்றுச் சடலத்தையே கண்டார்!

## 31. "மனிதருள் சிறந்தவர்—என் குரு"

(1925)

பல காலத்திற்குப் பிறகு, கிருஷ்ணப்பா பல முறை தமிழ் நாட்டுக்கு வந்து போன பிறகு, அவரிடம் தனி அபிமானம் கொண்ட ஒரு சிலர் பிரத்தியேக முறையில் அவரை அழைத்துக் கச்சேரி அமைத்து ஆதரிக்கலானார்கள். அந்த முறையில் 1925-இல் நெல்லிக்குப்பம் சபையிலிருந்து கிருஷ்ணப்பாவுக்குக் கச்சேரி அழைப்பு வந்தது. சௌடையா உள்ளிட்ட பக்க வாத்திய மாணவக் கோஷ்டி

யுடன் கிருஷ்ணப்பா புறப்பட்டார். தம் வருகை குறித்து வழக்கம்போல் சென்னைப் பிராந்தியத்தில் உள்ள நண்பர்களுக்குத் தபால் மூலம் தகவல் கொடுத்திருந்தார். சென்னையில் உள்ள டாக்டர் ஸ்ரீநிவாச ராகவாசாரியார் கிருஷ்ணப்பாவைச் சந்தித்து அவரோடு நெல்லிக்குப்பம் சென்றார்.

கச்சேரி சிறப்பாக நடைபெற்றது. அது முடிந்த பின் செளடையாவின் உடல் நிலையில் கோளாறு தென்பட்டது. மறுநாள் காலையில் ஜுரம். ஸ்ரீநிவாச ராகவாசாரியார் உடன் இருந்தது நலமாயிற்று. அப்படியும் செளடையா மிகுந்த சிரமத்தை அநுபவித்தார்.

இரவு புறப்பாடு. செளடையாவும் கிருஷ்ணப்பாவுடன் இரண்டாம் வகுப்புப் பெட்டியிலேயே அழைத்துச் செல்லப் பெற்றார். உடல் நிலை சரியில்லாததை உத்தேசித்து அவர் கீழேயே படுக்கையை விரித்துப் படுத்தார்.

"யாரும் தம்மைப்பற்றியும் தம்மைச் சார்ந்தவர்களைப் பற்றியும் உயர்வாகப் பேசுவது இயல்பு. அதிலும் அன்னை, தந்தை, குரு முதலிய மரியாதைக் குரியவர்களைப்பற்றி நிச்சயமாகக் குறைத்துப் பேச யாருக்கும் மனம் வராது; நா எழாது. நான் அந்த முறையில் என் குருவைப் பற்றிப் பேசவில்லை. அவருடைய சிறப்புக்களைத் தெள்ளத் தெளிய உணர்ந்து, அவ்வாறு உணர்ந்தவன் என்கிற முழு உறுதியோடு பேசுகிறேன். என் குரு மனிதர்தாம்; ஆனால் அன்பினாலும் பண்பினாலும் புத்தியினாலும் பக்தியினாலும் கானத்தாலும் தரும தானத்தாலும் அவரிடம் தெய்வத் தன்மை பொருந்தி இருந்தது என்பது. என் அசையாத நம்பிக்கை.

"அன்று நெல்லிக்குப்பம் சபைக் கச்சேரி முடிந்து இரவு சென்னையை நோக்கி ரெயிலில் செல்லும் போது நான் தாப ஜ்வரத்துடன் கீழே படுத்திருந்தேன். கண்களில் எரிச்சல் அசாத்தியமாக இருந்ததால் கண்ணை மூடிக் கொண்டிருந்தேன்; தூக்கம் இல்லை. குரு தூங்குகிறாரா விழித்திருக்கிறாரா என்பது எனக்குத் தெரியாது. நடு இரவு. தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்த என் உள்ளம் சங்கீத வழியில் ஈடுபட்டிருந்தது. அலங்காரம் பதினைறை எட்டாக்க, எட்டைப் பதினைாக்க உள்ளுக்குள் யோசனை. ஒன்றும் சரிவரவில்லை. அப்போது என் குருவின் குரல் ஒலித்தது.

" 'ஏனடா குழப்பிக் கொள்கிறாய்? எண்ணேழு ஐம்பத்தாறு; ஏழெட்டு ஐம்பத்தாறு; மிசிரம் செய்து கொண்டு பாடேன்!'

"நான் திடுக்கிட்டுக் கண்விழித்து அவரை நோக்கினேன். அவர் கண் மூடிப் படுத்திருந்தார்."

## 32. உபதேச குரு

(1925)

அருகே உள்ள காடு ஒன்றில் மகான் ஒருவர் வசித்து வந்தார்; பூர்வாசிரமத்தில் அவர் பெயர் ஸர்தார் கோபால ராஜ அரசு. அப்போது பட்டத்தில் இருந்த மைசூர் மகாராஜாவின் உறவினர். அவருடைய ஊர் மேலக்கோட்டையை அடுத்த திருநாராயணபுரம்.

அவரைப்பற்றி அறிந்த கிருஷ்ணப்பா அவர் வசிக்கும் இடம் தேடிச் சென்றார். அன்று ஏதோ தெய்வத்திரு நாள். திருநாராயணபுரம் சுவாமிகள் பூஜை ஆராதனை முதலியன நிகழ்த்தினர். அதை அறிந்து பக்தர்கள் பலர்

அங்கே வந்து குழுமியிருந்தனர். அது காட்டுப் பிரதேசமாக இருந்தும் வந்தவர்களுக்கெல்லாம் குறைவின்றி அமுது படையல் முதலியன நடந்தன.

அவரிடம் விபீஷண பூஜா விக்கிரகம் ஒன்று இருந்தது. தம்மைச் சீடனாக ஏற்றுக் கொள்ளுமாறு பணிந்து வேண்டிய கிருஷ்ணப்பாவைப்பற்றி அந்தப் பெரியவரும் அறிந்திருந்தார்; அந்த விக்கிரகத்தை அவருக்கு அளித்து ஆசி கூறினர்.

கிருஷ்ணப்பா அப்பெரியாரைத் தாம் தொண்டு புரிந்து வரும் ராம மந்திரத்திற்கு விஜயம் செய்யும்படி அழைத்தார். அவரும் அப்படியே வந்து மந்திரத்தைப் பார்வையிட்டார். கிருஷ்ணப்பாவின் பக்தியைக் கண்டார். ஸ்ரீ ராம தாரக மந்திரத்தை உபதேசித்தார்.

"ஸ்ரீ ராம மந்திரக் கட்டிடமும், ஸ்ரீ ராம பிரானின் தெய்வத் திருஉருவத் தோற்றமும், உன் ஆராதனை வழிபாடுகளும் மிகவும் சிறப்பாகவே இருக்கின்றன. ஆனால் மந்திரம் பூமித் தொடர்புடையதாக இருப்பதே நலமாகும். இதை அந்த முறைக்கு மாற்றி விடு. மாடி வேண்டாம்."

கிருஷ்ணப்பா தம் குருநாதரின் அருளாணையைத் தெய்வ வாக்காகவே கருதினர். 'ஒரு முறை மந்திர நிர்மாணம் செய்வதற்கே பெருமுயற்சி செய்ய வேண்டியிருந்ததே; இன்னொரு முறை அதே பணியை எவ்வாறு நிறைவேற்றுவது?' என்று அவர் தயங்கவில்லை. 'எல்லாவற்றையும் இனிது நிறைவேற்றி வைக்கும் எம் பெருமானின் திருவருள் துணை நின்று அதையும் நிறைவேற்றி வைக்கும்' என்ற அசையாத நம்பிக்கை அவர் உள்ளத்தில் இருந்தது.

## 33. பிரசன்ன ஸீதாராம மந்திரம்

(1928)

அப்பொழுது மைசூரில் முனிசிபல் சேர்மன் பதவியில் இருந்தவர் டி. ஜி. ராமையர் அவர்கள். இவர் பரம்பரை, செல்வம், கல்வி அறிவு, பட்டம், பதவி முதலியவற்ருல் மட்டுமன்றி இசை ஞானத்தாலும் மிகச் சிறந்தது.

இவருடைய தாய்மாமன்மார்களில் ஒருவரான டி. ஏ. துரைசாமி ஐயர் அவர்கள் பிரபல வழக்கறிஞர். சங்கீதக் கலையிலே அவர் அளவு கடந்த பற்றும் ஞானமும் உடையவர். முறையாக இசை பயின்றவர். சங்கீத மேதைகளாலும் மதித்துக் கொண்டாடப் பெற்ற வாய்ப்பாட்டு வித்துவான். பலகாலம் எர்ணுகுளத்தில் அவர் வெகு சிறப்பாகத் தியாகோற்சவ வைபவத்தை நடத்தினவர். அவருடைய குமாரர் டி. டி. நாராயணையர் அவர்கள். பல வகைச் சிறப்புக்களிலும் தந்தையை ஒத்த அவர் தபால் இலாகாவில் உத்தியோகத்தில் ஈடுபட்டு உயர்ந்த பதவியும் ராவ் சாகிப் பட்டமும் பெற்றவர்.

மற்ருெரு மாமன் டி. ஏ. கிருஷ்ணையர் அவர்கள். அவர் தேர்ந்த வயலின் வித்துவான். சிறந்த இசை வல்லுநர் பலருக்குப் புலமை விளங்கப் பக்கவாத்தியமாக வயலின் இசைத்துப் பெரும்புகழ் பெற்றவர்.

டி. ஜி. ராமையர் அவர்களின் சகோதரர் டி. ஜி. கிருஷ்ணையர் அவர்கள். இவரும் படித்துப் பட்டங்கள் பெற்று உத்தியோகத் துறையில் ஈடுபட்டவர். இவருக்கும் சங்கீதத்தில் ஈடுபாடு உண்டு. ஓய்வு பெற்றபின் சென்னையை நிலையான வாசஸ்தலமாக்கிக் கொண்டார். மயிலாப்பூரை அடுத்த சான்தோம் கடற்கரை அருகில் சில வீடுகளைக் கட்டினர். அதற்கு 'லலிதா நகர்' என்று பெயர்

சூட்டினர். அங்கே அவருடையவை பதின்மூன்று பங்களாக்கள்.

அவர் தேவியின் மேல் பல பாடல்களை இயற்றியுள்ளார். அவை 'லலிதா தாசர் கீர்த்தனைகள்' என்ற பெயரில் முழங்கி வருகின்றன. 'சிசுஜல்பன ஸாஹஸ்ரி' என்ற பெயரில் ஆயிரம் சுலோகங்களை இயற்றிப் புத்தகமாக அச்சிட்டுள்ளார். கர்நாடக சங்கீதத் துறையில் தற்போது அமோகமான புகழைப் பெற்று வரும் புல்லாங்குழல் வித்துவான் டி. கே. ராதாகிருஷ்ணனும் அவருடைய கானத்திற்குப் பக்க வாத்தியமாக வயலின் இசைத்து வரும் டி. கே. ராமசந்திரனும் இவருடைய குமாரர்களே. அந்தக் குடும்பத்திலே வழி வழியாகவே வந்து கொண்டிருக்கும் கர்நாடக சங்கீதம் இந்தச் சகோதரர்களால் நன்கு பிரகாசித்து வருகிறது.

இத்தகைய பரம்பரையிலே தோன்றிய டி. ஜி ராமையர் உள்ளத்தில் நிரம்ப இசைப் பற்றும் தெய்வ பக்தியும் உடையவராக விளங்கி வந்தார். இந்த இரு துறைகளிலும் ஈடுபடுகிறவர்களுக்குத் தம்மால் இயன்ற உதவிகளை அடிக்கடி செய்து வந்தார்.

திருநாராயணபுரம் சுவாமிகளின் கட்டளைப்படி கிருஷ்ணப்பா புதிய ராம மந்திரத்துக்கு ஏற்ற நல்ல மனை ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தார். நாராயண சாஸ்திரி ரோடு என்ற அழகிய வீதியிலே உள்ள ஒரு சிறந்த இடம் முனிசிபாலிடியின் ஆளுகையில் இருந்தது. அது எளிதில் கிட்டாது என்றே அன்பர்கள் நினைத்தார்கள். கிருஷ்ணப்பா அயரவில்லை. ஸ்ரீ ராமபிரானின் அருளை நம்பி முழு நம்பிக்கையுடன் டி. ஜி. ராமையர் அவர்களை அணுகினர்; அவருக்கு வெற்றியே கிட்டியது.

பெயரளவில் ஒரு விலை—900 ரூபாய் நிர்ணயம் ஆயிற்று. மிகமிகக் குறைந்த விலை என்று எல்லோரும் குதூகலித்தார்கள். ராமையர் அவர்கள் அனைவரின் பாராட்டுக்கும் பாத்திரர் ஆனார்.

முதல் வெற்றி முழு வெற்றிக்கு வழி கோலிற்று. செய்தி அறிந்த மைசூர்ப் பிரமுகர்கள் பலர் தாங்களாகவே இக்காரியத்தில் ஈடுபாடு கொள்ளலானார்கள்.

1925—இல் இப்பணி தொடக்கம் ஆயிற்று. பொருள் திரட்டும் நோக்கத்துடன் கிருஷ்ணப்பா அகில இந்தியச் சுற்றுப் பிரயாணம் தொடங்கினார். தக்க பக்க வாத்தியக் கோஷ்டியுடனும், சமையற்காரர், சாமக்கிரிகள் முதலிய வசதிகளுடனும் கிளம்பிப் பல இடங்களுக்குச் சென்றார்; பல கச்சேரிகள் செய்தார். இரண்டரை ஆண்டுகளில் எழுபத்தையாயிரம் ரூபாய் கொண்டு வந்தார்!

பல பெரியோர்களின் உதவி கொண்டு கிருஷ்ணப்பா தொடங்கிய பணி 1928—இல் முற்றுப் பெற்றது. மைசூரில் இன்று ஒளி வீசிப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ பிரசன்ன சீதாராம மந்திரம் பக்தர்கள் பலரின் வழிபாட்டுக்குரிய புனிதமான இடமானதுடன் மைசூரில் சிறந்த சங்கீத நிகழ்ச்சிகள் நடைபெற வசதி அளிப்பதாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது.

## 34. நிறைவு

(1931)

கிருஷ்ணப்பாவுக்கு ஆரம்ப காலத்தில் உச்சஸ்தாயியிலே பாடக்கூடிய சாரீர வசதி அமைந்திருக்கவில்லை. குருவின் உபதேசப்படி சாதகஞ் செய்து சாரீரத்தை வளப்படுத்திக் கொண்டார். தாம் பக்குவப்படுத்திக்கொண்ட குரல்

நயத்தைப் பாதுகாத்துக்கொள்வதில் அவர் மிக அக்கறை உடையவராக இருந்தார். சீதோஷ்ண நிலைக்கு ஏற்றவாறு உணவு, உடை அனைத்திலும் கவனம் செலுத்தினர்.

சுமார் ஆறு மணி நேரத்திற்கு அதிகமாகவே அயராமல் கச்சேரி செய்வார். இடையில் வீண் பொழுது போக்குக்கு இடம் அளிக்க மாட்டார். கச்சேரி நடுவே சாரீர வசதிக்கென்று எதையும் உட்கொள்ள மாட்டார். ஆறு மணி நேரமும் எந்த இடத்திலும் அவர் குரல் ஒலியில் அயர்வோ, பிசிறோ, தடிப்போ, வேறு குறைகளோ இரா. தொடக்கத்தில் இருந்த சுகம் இறுதி வரையில் குறையாது.

சங்கீத கலாநிதி, சாகித்திய சிரோன்மணி, மைசூர் வாசுதேவாசார் அவர்கள் கிருஷ்ணப்பாவின் அத்தியந்த சங்கீதத் தோழர். ஒருவரை ஒருவர் நன்கு மதித்து உயரிய முறையில் நடந்துகொண்டவர்கள். சிறந்த பல இடங்களிலும், ராஜ சபைகளிலும் ஒரே வைபவத்தில் முன்னும் பின்னுமாக இவர்கள் கச்சேரிகள் நடந்திருக்கின்றன; சில இடங்களில் சேர்ந்தும் பாடியிருக்கிறார்கள்.

வாசுதேவாசார் அவர்கள் இசையிலும், சாகித்தியம் செய்யும் திறனிலும் மட்டுமே வல்லவர் அல்லர். தாம் அறிந்த வித்துவான்களின் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டும் ஆர்வத்திலும், அதற்குரிய ஆற்றலிலும் தேர்ந்தவர். 'நான் அறிந்த வித்துவான்கள்' என்ற தலைப்பில் 'தினமணிக் கதி'ரில் பல வித்துவான்களைப்பற்றி எழுதியிருக்கிறார். அந்த வரிசையில் கிருஷ்ணப்பா அவர்களைப் பற்றிய குறிப்புக்களும் இடம் பெற்றுள்ளன.

93-ஆவது பிராயத்திலும் அயர்வு சிறிதும் இன்றிக் கலைப் பணியே மூச்சாக வாழ்ந்து வரும் இப்பெரியார் தற்சமயம் சென்னை அடையாற்றில் வசித்து வருகிறார்.

சங்கீத குருமார்களான சுப்பாராவ், கரூர் ராமசாமி, வீணை சேஷண்ணா, நாடகாசிரியர்கள், பிரபு திம்மையா, டாக்டர் நஞ்சுண்டராவ், நண்பர்கள் தேசிகாசாரி, ராகவேந்திரராவ், டாக்டர் ஸ்ரீநிவாசராகவாசாரி, வாசுதேவாசார் முதலியவர்களில் எவரையும் கிருஷ்ணப்பா ஒருபோதும் மறந்ததே இல்லை. ஒவ்வொருவராலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தாம் பெற்ற நலனை ஒவ்வொரு கணமும் எண்ணியே வாழ்ந்தார்.

அவர் கிருதிகள் பாடி வழிபடாத ஆலயமே மைசூரில் இல்லை. வேறு பல இடங்களிலும் பாடி வழிபட்டுள்ளார். அவருடைய பக்தி தூய்மையானது.

அவருக்குச் சோதிடம், மாந்திரீகம், அசரீரி, சகுனம், பெரியோர் ஆசி முதலியவற்றில் நம்பிக்கை அதிகம். அவை தெய்வ சக்தி உடையவை என்பது அவர் கொள்கை.

அவர் உள்ளத்திலே மற்ருேர் ஆசை இருந்து வந்தது. வெளி நாடுகளுக்கும் சென்று கர்நாடக சங்கீதக் கொடியை உயரப் பறக்கவிட வேண்டுமென்று எண்ணினர். நடைபெறவில்லை.

சங்கீத ஆராய்ச்சியில் அவர் மனம் ஒருபோதும் ஈடுபட்டதே இல்லை. வழி தெரிந்து சுவை ததும்பப் பாடித் தாமும் பரவசமாகிக் கேட்பவரையும் பரவசமுறச் செய்வதே முக்கியம் என எண்ணினுர்; அந்தையே செய்தார்.

விவகாரங்களில் போதிய ஞானம் இருந்தும் அமைதியை வேண்டி அந்த ஞானத்தைப் பரப்பாமல் இருந்தவர் அவர். அதனலேயே அனைவரின் ஏகோபித்த பாராட்டுக்களுக்கும் உரியவராக விளங்கினுர்.

வாய்ப் பாட்டு வல்லுநர்களில் அவர் அதிகமாக விரும்பினவர்கள் வாசுதேவாசார், அனந்தராம பாகவதர்,

ராம பாகவதர், அரியக்குடி, செம்பை ஆகியோரும், வாத்தியத் துறையில் வீணை தனம்மாள், திருக்கோடிகாவல் கிருஷ்ணையர், மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளை, தஞ்சாவூர் நாராயணசாமி அப்பா ஆகியோரும் ஆவர். மற்றவர்களிடமும் நிறைந்த அன்பும் மரியாதையும் உண்டு. யாரையும் எங்கும் எப்போதும் குறைத்துப் பேசுகிறதே இல்லை. கலை பயின்றவர்கள் தெய்வப் பிரதிநிதிகள் என்ற உயர்ந்த அபிப்பிராயம் அவருக்கு உண்டு.

பொக்கிஷம் போன்ற புரந்தரதாசர் கிருதிகளைக் கச்சேரிகளில் பாடிப் புத்துயிரளித்துப் பரவச் செய்த முழுப் பெருமை கிருஷ்ணப்பாவுக்கே உரித்தாகும்.

1920-இல் இவருடைய பாடல்களை இசைத் தட்டில் பதிவு செய்யத் தொடங்கினார்கள். அடுத்தடுத்துப் பல பாடல்கள் வெளி வந்தன. அவற்றில், 'வாதாபி கணபதிம்', 'சிருங்கார லஹரி', 'நீவே பாலிஞ்சரா', 'நீரஜ நயனு', 'எவரனி', 'பிடே நின்ன பாதவ' முதலிய பாடல்கள் குறிப்பிடத் தக்கன.

ஸ்ரீ பிரசன்ன சீதாராம மந்திரம் பூரண உருப்பெற்றதும் அதில் தெய்வப் பிரதிட்டை செய்தார். உடனேயே பெரிய திட்டத்தில் உற்சவமும் நடத்தினார். மைசூர்ப் பிராந்தியம் களிவெள்ளத்தில் மூழ்கியது.

அப்போது அவருக்கு வயசு ஐம்பத்தொன்பது. குறைந்தது மூன்று ஆண்டுகளாவது ஸ்ரீ ராமபிரானுக்கு மிக நேர்த்தியான முறையிலே உற்சவம், ஆராதனை முதலிய கைங்கரியங்களைச் செய்ய வேண்டும் என அவர் எண்ணினார். அவ்வாறே நடைபெற்றது. தாம் கருதியபடியே மூன்று வருஷ காலம் விசேஷ உற்சவம் நடத்தினார். தட்சிண தேசத்து வித்துவான்கள் பலரும் வந்து கலந்து

கொண்டனர். அவர் அனைவரையும் ஆதரித்தார். மிக நன்றாகப் பாடுகிறவர் யாரானாலும் எந்த ஊரானாலும் எந்தச் சாதியானாலும் எப்பிராயத்தினரானாலும் தம்மால் இயன்ற அளவு ஆதரித்து மரியாதை செலுத்தினர்.

அவர் சம்பாதித்த பொருள் ஏராளம். குடும்பத்திற்கென்று காலணுக்கூடச் சேமித்து வைக்கவில்லை. அனைத்தையும் ராமபிரானுக்கே அர்ப்பணித்துவிட்டார். அதற்கு ஏற்றாற்போல அவர் பெரிய சம்சாரியாகவும் இல்லை. பதினன்கு குழந்தைகள் இறந்தன. 1911-இல் பிறந்த ஒரு பிள்ளையும், மற்றும் ஒரு பெண்ணும் மட்டுமே எஞ்சிய சந்ததிகள். பிள்ளையின் பெயர் சுப்பராவ்; பெண்ணின் பெயர் சரசுவதி.

பி. ஏ. வரை படித்த சுப்பராவுக்கு மைசூர் அரண்மனையில் ஓர் உத்தியோகம் கிடைத்தது. மகள் சரசுவதிக்கு உரிய காலத்தில் திருமணம் நிகழ்த்தி மனம் மகிழ்ந்தார் கிருஷ்ணப்பா.

இவ்வாறு இசை, பக்தி, நேர்மை, அன்பு அனைத்திலும் மேம்பட்டு விளங்கிய கிருஷ்ணப்பா 1931-ஆம் ஆண்டு, ஜூலை மாதம், 29-ஆம் தேதி நண்பகலிலே ஸ்ரீ ராமபிரானின் திருவடி நிழலை அடைந்தார்.

அவருடைய தரும பத்தினியார் துங்கம்மாள் மேலும் பன்னிரண்டு ஆண்டுகள் வரை மக்களுக்குத் துணையாக வாழ்ந்தார். கணவர் விட்டுச் சென்ற திருத்தொண்டில் ஈடுபட்டிருந்தார். 1943-இல் அவரும் தம் கணவர் சென்ற வழியைப் பின்பற்றினர்.

மகன் சுப்பராவ் திருமணம் புரிந்து இல்லறத்திருந்து நேர்மையுடன் உத்தியோகம் வகித்து வந்தார். அவருக்கு இரு பெண்களும், இரு பிள்ளைகளும்.

1946-இல் முப்பத்தைந்து பிராயங்கூட முடிவு பெறுத காலத்தில் சுப்பராவ் அகால மரணமெய்தினர்.

அவருடைய முதற் பெண் இன்று குடும்பத்து அரசியாக வாழ்ந்து வருகிறுள்; இரண்டாவது பெண் படிப்பிலே ஈடுபட்டிருக்கிறுள். பிள்ளைகள் இருவரும் உருவத் தோற்றத்தில் பாட்டனைப் போலவே விளங்குகிருர்கள். சங்கீத தேவதையின் அருளாலும், ஸ்ரீ ராமபிரானின் கிருபையாலும் செயலிலும் அவர்கள் தங்கள் பாட்டனைப் போலவே ஆனல் அது கர்நாடக சங்கீத உலகின் பெரும் பாக்கியமே!

NRWM69
N56

முற்றும்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 105870
EGMORE, MADRAS-600 008

22A
2-114